# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 28 திங்கட்கிழமை (14.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 353




14 அரசுக்கு புகழ்பாடுவோர் எவரும் மரணிப்பதில்லை



21 சோனியாவுக்கு ஊழலில் பங்கு



29 சங்கா பிடித்தார் முதலிடம்

பாலியல் குற்றச்செயல்கள் குறித்த முறைப்பாடுகளை அடுத்து நேற்று

# யாழ்.நகரிலுள்ள விடுதியில் பொலிஸார் திடீர்ப் பாய்ச்சல்

## இளைஞர், யுவதிகள் உட்பட 12 பேர் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவம்பர் 14

யாழ். நகரின் மத்தியிலுள்ள விடுதி ஒன்றை நேற்றுப் பகல் திடீரென சுற்றிவளைத்த பொலிஸார் மூன்று பெண்கள் உட்பட 12 பேரைக் கைது செய்தனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தலைமையிலான குழுவினர் இந்தத் திடீர்ப் பாய்ச்சலை நடத்தி இருந்தனர்.

யாழ். நகரிலுள்ள விடுதிகளில் பாலியல் தொடர்பான குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன என்று கிடைத்துவந்த முறைப்பாடுகளை அடுத்தே யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.இந்திரன் இந்தத் திடீர்ச் சோதனை நடவடிக்கைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்தச் சுற்றிவளைப்பின் போது பெண்கள் மூவர், ஆண்கள் மூவர், விடுதியை நடத்தி வந்தவர், அங்கு பணிபுரிந்தவர்கள் உட்பட 12 பேரே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சமன் சிகேரா நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இது குறித்து பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.இந்திரன் கூறியதாவது:-

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள விடுதி குறித்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து அந்த விடுதி நேற்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

பக் 27

## கொமன்வெல்த் போட்டிக்கான பிரசாரத்தால் அரசுக்கு ரூ.40 கோடி நஷ்டம்!

கொழும்பு,நவ.14

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை கைப்பற்றும் இலங்கையின் பிரசார நடவடிக்கையால் சுமார் 30 தொடக்கம் 40 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசால் மேற்கொள்ளப்பட்ட பல மில்லியன் ரூபா முதலிடப்பட்ட முயற்சி ஒன்று தோல்விய

பக் 28

## தனியார் பஸ் உரிமையாளர் இன்று நள்ளிரவு முதல் பணிப் பகிஷ்கரிப்பு

### வடக்கிலும் அதே முடிவு என்கிறது யாழ். இணையம்

கொழும்பு, நவ. 14

தனியார் பஸ்களுக்கு எரிபொருள் மானியம் வழங்குமாறு கோரி தனியார் பஸ் உரிமையாளர்கள் இன்று நள்ளிரவு நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போகின்றனர் என அறிவித்துள்ளனர். தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன கூறியவை வருமாறு:-

சமீபத்தைய எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் நாம் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளோம். இந்த நட்டத்தை ஈடுசெய்யவேண்டுமென்றால் பஸ் கட்டணம் உயர்த்தப்படவேண்டும் அல்லது எரி

பக் 27

## மானியம் வழங்குவது குறித்து இன்று இறுதித் தீர்மானம்

### போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

தனியார் பஸ்களுக்கு எரிபொருள் மானியம் வழங்குவது தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் சீ.பி.ரட்நாயக்க கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் நாம் பஸ் கட்டணங்களை அதிகரிக்க மாட்டோம்.

பக் 27

## நாட்டின் இன்றைய சீர்கேடான நிலைமைக்கு நான் தான் காரணம் என்கின்றனர் அனேகர்!

### தவறை உணர்கிறேன்; முன்னாள் நீதியரசர் பரபரப்பான தகவல்

கொழும்பு, நவ. 14

ஆழிப்பேரலை அனர்த்த காலத்தில் நடைபெற்ற 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' நிதி மோசடி வழக்கில் மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்காவிட்டால், அன்றே அவர் அரசியலில் இருந்து ஒதுங்கியிருப்பார். இதில் கேள்விக்கே இடமில்லை. நான் எடுத்திருக்கும் தீர்மானங்களிலேயே தவறான ஒன்றாக 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' வழக்கைக் கருதுகிறேன். நாட்டின் இந்தக் கேடுக்கு நான்தான் காரணம் என்று பலர் என்னி



டம் நேரடியாகவே தெரிவிக்கின்றனர்.

- இவ்வாறு பரபரப்பான கருத்தை வெளியிட்டுள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் தமக்கெதிராகச் சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் குறித்து அவர் மனம்

பக் 28

## ஜே.வி.பியினர் மீதான தாக்குதல் அடிப்படை மனித உரிமை மீறல்

### அக்கட்சி நேற்று கண்டன அறிக்கை

கொழும்பு, நவ. 14

ஜே.வி.பியின் உறுப்பினர்கள் ஏழு பேர் மீது ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர் ஒருவர் தலைமையிலான குழு நடத்தியிருக்கும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல், அரசமைப்பில் குறிப்பிட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள் மீதான தாக்குதலாகவே கருதவேண்டியுள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பி. நேற்று விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சி உறுப்பினர்கள் தாக்கப்பட்டமை குறித்து

பக் 27

## 2012 முதல் தெற்கு மீனவருக்கு வடக்குக் கடலில் இடமில்லை

### குடாநாட்டு மீனவ அமைப்புகள் முடிவு

கொழும்பு, நவ. 14

அடுத்த வருடம் முதல் தென்பகுதி மீனவர்கள், வடக்குக் கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிப்பதில்லை என்று யாழ். மாவட்ட மீனவ அமைப்புகள் ஒன்று கூடி முடிவெடுத்துள்ளன.

குறிப்பாக வடமராட்சி கிழக்கு மற்றும் வடக்கு மீனவ சங்கங்கள் இந்த விடயத்தில் கடும் போக்கைக் கொண்டுள்ளன.

கடலட்டை மற்றும் சங்கு பிடிப்பதற்கென கூறி தென்னிலங்கையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் வடமராட்சி கிழக்குக்கு படையெடுத்துள்ளனர்.

இவர்கள் உள்ளூர் மீனவர்களது படகுகளை வாடகைக்கு அமர்த்தி தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

பக் 27

## நல்லிணக்கக்குழு முன் சாட்சியமளித்தவரை சி.ஐ.டியினர் விசாரணைக்கு அழைப்பது ஏன்?

### ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, நவ. 14

"பாதுகாப்பு அச்சுறுத்தல், இரகசியத்தன்மை ஆகிய அடிப்படைக் காரணங்களைக் கருத்திற்கொண்டே கணிசமானளவு மக்கள் தங்களுக்கு நேர்ந்த அவலங்களை நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கூறவில்லை. அந்த ஆணைக் குழுவிடம் சாட்சியமளித்த விதவைப் பெண்ணுக்கு சி.ஐ.டி. அழைப்பாணை விடுத்துள்ளதன் மூலம் இந்த விடயம் உலகுக்கு அம்பலமாகியுள்ளது. இதனை ஒரு போதும் ஏற்கமுடியாது.''



- இவ்வாறு திட்டவட்டமாக அறிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.


நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ள நிலையில், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது தானது பலத்த சந்தேகத்

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/படங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




மன்னார், வவுனியா மாவட்டங்களில் இடி, மின்னல் நிலவுவதற்கான கால நிலையும் பிற மாவட்டங்களில் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியமும் உள்ளது.

# வடமாகாண வைத்தியசாலைகளுக்கு 114 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டனர்

## இவர்களில் 77 பேர் வன்னிப் பகுதிக்கு

யாழ்ப்பாணம், நவ.14

யாழ். போதனா வைத்தியசாலை உட்பட வடமாகாண வைத்தியசாலைகளுக்கு 114 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 77 பேர் வன்னிப் பிராந்தியத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக்கிழமை அந்தந்த வைத்தியசாலைகளில் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். போதனா வைத்தியசாலைக்கு 22 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்திலுள்ள மாகாண வைத்தியசாலைகளுக்கு 15 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு 6 பேரும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு 4 பேரும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு 2 பேரும், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு ஒருவரும், கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு ஒருவரும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு ஒருவரும் என 15 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா பொது வைத்தியசாலைக்கு 12 பேரும், வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு 2 பேரும், மாமடுவ, புளியங்குளம், பாவற்குளம், சிதம்பரபுரம், உலுக்குளம், நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைகளுக்கு தலா ஒருவர் வீதமும், ஓமந்தை மற்றும் சூடுவெந்தபுலவு ஆரம்பப் பிரிவு வைத்திய அதிகாரிப் பிரிவு வைத்திய சாலைகளுக்கு தலா ஒருவர் வீதமும், வவுனியா மற்றும் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளுக்கு தலா ஒருவர் வீதமும் வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொதுவைத்தியசாலைக்கு 13 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தவிர மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு பேரும், முள்ளியவளை ஆரம்பப்பிரிவு வைத்திய அதிகாரிப் பிரிவுக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொது வைத்தியசாலைக்கு 13 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தவிர முருங்கன் மற்றும் எருக்கலம்பிட்டி பிரதேச வைத்தியசாலைகளுக்கு தலா ஒருவர் வீதமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு 21 வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர முழங்காவில் ஆதாரவைத்தியசாலைக்கும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்- என்றார். (ம-4)

# வடக்குக்கு 254 தாதியர், 202 குடும்பநல உத்தியோகத்தர்

## நியமனக் கடிதங்கள் இன்று

யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் வடமாகாண வைத்தியசாலைகளுக்கு 254 தாதிய உத்தியோகத்தர்களும் 202 குடும்பநல உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 174 தாதிய உத்தியோகத்தர்களும், 129 குடும்பநல உத்தியோகத்தர்களும் வன்னியைச் சேர்ந்த வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மாகாண வைத்தியசாலைகளில் கடமையாற்ற நியமிக்கப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- தாதிய பயிற்சியை மேற்கொண்டு சித்தியடைந்து வெளியேறியுள்ளவர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 80 தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 29 தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு 24 பேரும், முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கு 03 பேரும், அக்கராயன் மற்றும் தர்மபுரம் பிரதேச வைத்தியசாலைகளுக்கு தலா ஒவ்வொருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட 21 பேரில் முல்லைதீவு பொது வைத்தியசாலைக்கு 15பேரும், மல்லாவி ஆதார வைத்திய சாலைக்கு 05 பேரும், மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட 31 பேரில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு 30 பேரும், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலைக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்ட 35 பேரில் மன்னார் பொது வைத்தியசாலைக்கு 22 பேரும் முருங்கன், அடம்பன், தலைமன்னார் மற்றும் பேசாலை பிரதேச வைத்தியசாலைகளுக்கு தலா 03 பேர் வீதமும், சிலாவத்துறை பிரதேச வைத்தியசாலைக்கு ஒருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்துக்கு 58 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் கச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு 12 பேரும், தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளுக்கு தலா 11 பேர் வீதமும், சங்கானைப் பிரதேச வைத்திய சாலைக்கு 5 பேரும், அச்சுவேலி மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச வைத்தியசாலைகளுக்கு தலா 4 பேர் வீதமும், கோப்பாய், வல்வெட்டித்துறை, காரைநகர் மற்றும் புங்குடு தீவு பிரதேச வைத்திய சாலைகளுக்கு தலா 02 பேர் வீதமும், வேலணை, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு பிரதேச வைத்திய சாலைகளுக்கு தலா ஒவ்வொருவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது தவிர குடும்பநல உத்தியோகத்தர்களும் வடமாகாண வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணத்துக்கு 73 பேரும், கிளிநொச்சிக்கு 38 பேரும், வவுனியாவுக்கு 34 பேரும், மன்னாருக்கு 30 பேரும், முல்லைத்தீவுக்கு 27 பேருமாக மொத்தம் 202 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-4)

# மீனவர் எல்லை தாண்டினால் கடும் நடவடிக்கை எச்சரிக்கிறார் இந்தியப் படையின் கமாண்டர்

சென்னை,நவ.14

மீனவர்கள் இந்திய கடல் எல்லையை தாண்டி மீன் பிடிக்க செல்லக்கூடாது. மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜெகதாப்பட்டினத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு கூட்டத்தில் இந்திய கப்பல் படை கமாண்டர் பிஜ்ரானியா எச்சரிக்கை விடுத்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியை அடுத்த மணமேல்குடி அருகில் உள்ள ஜெகதா பட்டினம் கப்பல் படை அலுவலகத்தில் புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இந்திய கப்பல் படை கமாண்டர் பிஜ்ரானியா தலைமை வகித்தார். புதுக்கோட்டை மாவட்ட கடலோர பாதுகாப்பு குழும இன்ஸ்பெக்டர் மகேஸ் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கமாண்டர் பிஜ்ரானியா பேசுகையில், இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன் பிடிப்பதை இலங்கை அரசு உறுதி செய்துள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் இந்திய மீனவர்கள் சுமார் 150 தடவைக்கும் மேலாக இந்திய கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடல் பகுதிக்குள் சென்று மீன் பிடித்துள்ளனர். எனவே விசைப் படகு மீனவர்கள் இந்திய சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன் பிடிக்க செல்லக்கூடாது. அவ்வாறு மீறினால் அவர்கள் மீது சட்ட ரீதியான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுத்தார். (ஒ-10)

# பூண்டுலோயாவில் இரு கடைகள் எரிந்து நாசம்

கொபம்பு,நவ.14

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூண்டுலோயா நகரில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு கடைகள் முற்றாக எரிந்து சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் பூண்டுலோயா நகரின் பிரதான வீதியிலுள்ள லும்பினி எலக்ரோனிக்ஸ் என்ற மின் உபகரணப்பொருள்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் திடீரென தீபரவியது. தீ, கட்டுக்கடங்காமல் மேலும் பரவி, இந்தக் கடைக்கு அருகிலுள்ள பலசரக்குக் கடைக்கும் பரவியதைத் தொடர்ந்து இந்த இரண்டு கடைகளும் எரிந்து சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்தத் தீயைக் கட்டுப்படுத்துவதற்குப் பிரதேச மக்களும், பொலிஸாரும் ஒன்றுதிரண்டு நீர் ஊற்றி, தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்தச் சம்பவத்தில் இரண்டு பேருக்கு சிறு காயங்கள் ஏற்பட்ட போதும் எவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்படவில்லை. இந்தத் தீ விபத்தில் சுமார் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட உடைமைகளுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகின்றது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அஞ்சலி நிகழ்வு

சாவகச்சேரி, நவ.14

தென்மராட்சி அதிபர் சங்க உறுப்பினரும் கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலையின் அதிபருமான சிவசுப்பிரமணியம் தயாபரனின் அஞ்சலி நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அ.கயிலாயபிள்ளை அறிவித்துள்ளார். (ச-207)

# ஒன்று கூடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.14

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிக்கற்கை நெறியை யாழ்.மத்திய கல்லூரி நிலையத்தில் தொடரும் மாணவர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் ஒன்று கூடுமாறு ஆசிரிய, மாணவர் மன்றத் தலைவர் செ.கிறிஸ்ரியன் தெரிவித்துள்ளார். (ம-14)

# விக்கிலீக்ஸ் சர்ச்சை அம்பாறை அரச அதிபர் இரத்தினபுரிக்கு இடமாற்றம்

கொழும்பு,நவ.14

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சுனில் கன்னங்கரா உடனடியாக இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபராக பொது நிருவாக அமைச்சினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட புதிய அரசாங்க அதிபராக வடமத்திய மாகாண பிரதிப் பிரதம செயலாளராக கடமையாற்றிய இலங்கை நிருவாக சேவையின் மூத்த அதிகாரி நீல் டி அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இன்று திங்கட்கிழமை கடமையேற்கவுள்ளார்.

2007ம் ஆண்டு முதல் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சுனில் கன்னங்கரா 2010ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக உண்மைக்கு புறம்பான தகவல்களை அமெரிக்க தூதுவர் பெட்ரிஸியாவிடம் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் இணையதளத்தில் செய்தி வெளியானதையடுத்து விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

# ஈச்சமோட்டையில் குடும்பஸ்தரின் சடலம்

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை, கடற்கரை வீதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் யாழ் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த பஸில் ஞானரத்தினம் (வயது-58) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு நேர்ந்த அவலத்தை சி.ஐ.டியிடம் அல்ல எங்கும் எவரிடமும் கூறத் தயங்கமாட்டேன்!

## 4 ஆம் மாடிக்கு வருமாறு அழைக்கப்பட்ட பூங்கோதை குமுறல்

கல்முனை,நவ.14

நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் எனக்கு நேர்ந்த அவலங்களை நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கண்ணீர் மல்க கொட்டித்தீர்த்தேன். அந்த விடயங்களை சி.ஐ.டியினரிடம் கூறுவதற்கும் தயங்கப்போவதில்லை. உண்மையை எங்கும், எப்பொழுதும் கூறலாம். எனக்குத் தற்போது தேவைப்படுவது நீதியும், நியாயமும்தான்''

- இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் சி.ஐ.டியினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ள கல்முனையைச் சேர்ந்த இரத்தினம் பூங்கோதை.

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த இரத்தினம் பூங்கோதை என்பவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிந்ததே.

பூங்கோதை மேலும் கூறியவை வருமாறு:-

தலையிடியும், காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் அதன் வேதனை புரியும் என்பார்கள். அவ்வாறுதான் நான்பட்ட கஷ்டங்கள் வேறு எவருக்கும் புரியாது.

சொல்லொணாத் துன்ப, துயரங்களை நான் அனுபவித்து விட்டேன். உறவுகளையும், உடைமைகளையும் இழந்து தவிக்கிறேன். கருணை உள்ளம் படைத்தோர் நான்பட்ட துன்பங்களை இலகுவில் புரிந்துகொள்வர். அந்த வலிச்சுமைகளை வார்த்தைகளால் சொல்லமுடியாது.

2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி என்னை ஆயுதக் குழுவினர் கடத்திச்சென்றனர். வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களையும் அவர்கள் சூறையாடினார்கள்.

என்னைக் கடத்திச்சென்ற அவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தினர். பெண் என்று கூடப் பார்க்காமல் துன்புறுத்தினர். கடத்திச்சென்றதிலிருந்து சுமார் 14 நாள்களுக்குப் பின்னர் நான் ஒருவாறு தப்பித்துவந்தேன். இந்த விடயங்களையே நல்லிணக்க ஆணைக்குழுவினரிடம் தெரிவித்தேன்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு கடந்த மார்ச் 27 ஆம் திகதி கல்முனையில் இடம்பெற்றபோது நான் சாட்சியமளித்தேன்.

இதன்போது பொலிஸாரால் அழைத்துச்செல்லப்பட்ட மூன்று பிள்ளைகளின் தாயான எனது சகோதரியொருவரும் காணாமற்போன சம்பவம் தொடர்பாகவும் எடுத்துரைத்தேன்.

நான் கொட்டித்தீர்த்த குறைகளுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நாளாந்தம் காத்திருந்தேன். கடந்த புதன்கிழமை எனக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. என்னுடன் கதைத்தவர், தாம் நல்லிணக்க ஆணைக்குழு உறுப்பினர் பேசுகிறேன் எனத் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அந்தத் தொலைபேசி இலக்கம்: 011-3135783 எனத் தெரிந்துகொண்டேன்.

என்னுடன் நீண்டநேரம் பேசிய அந்த உறுப்பினர், ''நீங்கள் பட்ட துன்பங்களுக்கு - அவலங்களுக்கு நியாயம் தேடித்தர நாம் முயற்சிக்கின்றோம். நீங்கள் எங்களிடம் கூறிய விடயங்களை கொழும்புக்கு வந்து 4ஆம் மாடியில் அமைந்துள்ள சி.ஐ.டி. அலுவலகத்தில் கூறவேண்டும் என அவர் கோரினார்.

இது விடயம் தொடர்பாக அதாவது, 25 ஆம் திகதி கொழும்புக்கு வருமாறு சி.ஐ.டியினர் அழைத்துள்ளனர் என்று கல்முனைப் பொலிஸார் கிராம சேவையாளர் ஊடாக எனக்கு அறிவித்துள்ளனர்.

எனக்கு நேர்ந்த அவலங்களையே நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கூறினேன். உண்மையைத் தவிர வேறொன்றும் கூறவில்லை. எனவே, நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கூறிய விடயங்களை சி.ஐ.டியினரிடம் தெரிவிக்கத் தயங்கப்போவதில்லை.

உண்மையாக நடந்த சம்பவங்களை எங்கும், எப்பொழுதும் கூறலாம். அதில் எவ்வித தவறும் இல்லை என்றே நான் கருதுகின்றேன். - என்றார். (ஒ-சி)

## இலங்கைக்கு ஒன்லைன் விஸா கட்டணம் குறைப்பு

கொழும்பு, நவ. 14

இலங்கை வருவோருக்கான ஒன்லைன் விசாக்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு வரும் சார்க் நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளிடமிருந்து விசாக் கட்டணமாக பத்து அமெரிக்க டொலர்களையும் ஏனைய நாட்டுப் பிரஜைகளுக்கு 20 அமெரிக்க டொலர்களையும் அடுத்த வருடம் முதல் அறவிடப்படவுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் ஒன்லைன் மூலம் இலங்கை விசா பெறுவதற்கு 50 அமெரிக்க டொலர்கள் அறவிடப்பட்டன. அதனை குறைக்குமாறு இந்தியா கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

## பூண்டுலோயா கடைகளில் தீ விபத்து

பூண்டுலோயா நகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு கடைகள் சேதமடைந்துள்ளன.

நகரின் மத்தியில் அமைந்திருந்த பலசரக்கு கடையொன்றும் மின் உபகரண கடையொன்றுமே தீப்பற்றி கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடமராட்சி கிழக்கு 80 மீனவருக்கு கட்டுமரங்கள், உபகரணங்கள்

### நேற்று முற்பகல் கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.14

வடமராட்சி கிழக்கு மீனவர்கள் 80 பேருக்கு சுமார் 80 லட்சம் ரூபா பெறுமதியான கட்டுமரங்கள், வலைகள் உட்பட கடற்றொழில் உபகரணங்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு கடல் தொழில் சமாச மண்டபத்தில் நேற்று முற்பகல் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஏ.திருலிங்கநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் எஸ்.பஸநாயக்கவும் கலந்து கொண்டனர்.

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கும் ஆழியவளை பிரதேசத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்குமே உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர்; ''இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 3 மாதங்களில் இடம்பெயர்ந்த மக்கள் எமது அமைச்சினால் மீளக்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். அவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்'' என்று குறிப்பிட்டார். (ஒ-319)

## சாட்சிகளின் விவரங்களை ஆணைக்குழு வெளியிடாது சி.ஐ.டியினரின் விசாரணைக்கு நாம் பொறுப்பில்லை

### ஆணைக்குழு ஆலோசகர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 14

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்தோர் தொடர்பான பெயர், விவரம் ஒருபோதும் வெளியிடப்படாது; இரகசியம் முழுமையாகப் பேணப்படும் என்று உறுதியாக அறிவித்துள்ளது நல்லிணக்க ஆணைக்குழு.

நல்லிணக்க ஆணைக்குழு மக்களிடம் சாட்சியங்களைத் திரட்டும்போது இரகசியம் முழுமையாகப் பேணப்படும் என உறுதியளித்திருந்தது. எனினும், அறிக்கை வெளியாகவுள்ள நிலையில் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்த கல்முனையைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அழைப்பாணை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக 'உதயன்' நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு கல்முனையில் இடம்பெற்றபோது கணிசமானோர் இடப்பிரச்சினை, காணாமற்போனோர் ஆகியவை தொடர்பாகவே சாட்சியங்களை வழங்கினர்.

காணாமற் போனோர் விவரங்களை நாம் சட்ட மா அதிபரிடம் கையளித்தோம். ஆனால், சாட்சியமளித்தவர்களின் பெயர், விவரங்களை நாம் எவரிடமும் கையளிக்கவில்லை; கையளிக்கப்போவதுமில்லை.

ஒன்றை மட்டும் என்னால் தெளிவாகக் கூறமுடியும். அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக குறித்த பெண்ணின் பெயர், விவரம் கசியவில்லை. இது உறுதி.

சட்ட மா அதிபரிடம் தகவல்களை நாம் கையளிக்கும்போது சாட்சியம் அளித்தோரின் பெயர், விவரங்களை வழங்கமாட்டோம். காணாமற் போனோர் பெயர்களையே வழங்குவோம். அவர்களைத் தேடிக் கண்டறியவோ அல்லது இதர தேவைகளுக்காகவோ சட்ட மா அதிபர் சி.ஐ.டியினரின் உதவியை நாடி இருக்கலாம். - என்றார். (ஒ-சி)

# நட்டக்கம்பனிகளைச் சுவீகரிக்கும் அரச சட்டத்துக்கு பெருந்தோட்டக் கம்பனிகளும் இரையாகும் அபாயம்

### தொழிற்சங்கங்கள் அதிர்ச்சி; தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறி

கொழும்பு, நவ. 14

நட்டத்தில் இயங்கும் கம்பனிகளை பறிமுதல் செய்யும் சர்ச்சைக்குரிய சட்டத்தின்கீழ் நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டத்துறை கம்பனிகளையும் சுவீகரிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது என நம்பகரமாக தெரியவருகிறது.

இதன் பிரகாரம், தற்போது நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டத்துறையின் ஆறுக்கும் மேற்பட்ட கம்பனிகளை சுவீகரிப்பதற்கு அரசு ஆலோசித்து வருவதாக பெருந்தோட்டத்துறை சார்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அரசின் இந்த ஆலோசனையை உள்ளூர அறிந்துள்ள தொழிற்சங்கங்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளன. இதனை எதிர்நோக்குவது எப்படி என்பது பற்றி தொழிற்சங்க முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி மந்திராலோசனை நடத்திவருகின்றனர் என்றும் அறியமுடிகின்றது.

அரசுடைமையாக்கல் சட்டத்தின் பிரகாரம் நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டத்துறை கம்பனிகளை அரசு சுவீகரிக்குமானால், தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்றுறையில் எதிர்காலத்தில் பெரும் தாக்கம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நட்டத்தில் இயங்கும் பெருந்தோட்டத்துறை கம்பனிகளை [illegible] அரசு சுவீகரிக்கப்போகின்றது [illegible] என்ற தகவல் தோட்டப்புறங்களில் வாழும் மக்களிடையே கசிந்துள்ளதை அடுத்து குறித்த விடயம் தொடர்பில் தொழிலாளிகளும் குழம்பிப்போயுள்ளனர் எனத் தெரிகிறது.

இது நடந்தால் பெருந்தோட்டத்துறை கம்பனிகள் தோட்டத் தொழிலாளிகளுக்கு வழங்கியுள்ள பங்குத் தொகையிலும் எதிர்காலத்தில் சர்ச்சை எழலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்றுமதித்துறையில் பிரதான இடத்தை வகிப்பது [illegible] யில் முதலீடுகளை மேற்கொண்ட முதலீட்டாளர்களும், அரசின் இந்தப் பறிமுதல் திட்டத்தால் பெரிதும் பாதிக்கப்படுவர் என ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

நட்டத்தில் இயங்கும் அரச, தனியார் நிறுவனங்களை அரசுடைமையாக்கும் சட்டமூலத்தை அரசு அண்மையில் நாடாளுமன்றில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொண்டது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி.,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் குறித்த சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தன. அத்துடன், அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெலஉறுமய வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பதுடன், அமைச்சர் விமல் வீரவன்சவும் பிரசன்னமாகியிருக்கவில்லை.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அரசு தனது மூன்றிலிரண்டுப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி பறிமுதல் சட்டமூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றிவிட்டது.

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களுக்கு போதியளவு காலதாமதம் வழங்காமல் அரசு அவசரமாக எடுத்த இந்த முடிவை பொருளாதார நிபுணர்கள் கடுமையாக சாடியுள்ளனர். நாட்டின் முதலீட்டுத்துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டல பூஜை

யாழ்ப்பாணம், நவ.14

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ் தாபீடம் நடத்தும் 29 ஆவது ஆண்டு 48, நாள்கள் மண்டல பூஜை மகரஜோதிப் பெருவிழா கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகி ஜனவரி மாதம் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (வ-319)

# ஆப்கானில் தாயும் மகளும் கல்லால் அடித்துக் கொலை

காபூல், நவ. 14

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் காஷ்னி நகரம் உள்ளது. அங்குள்ள கவாஜா ஹெகிம் பகுதியில் ஒரு வீட்டில் விதவை தாயும் அவரது மகளும் தங்கியிருந்தனர்.

அவர்களது வீட்டுக்குள் புகுந்த மர்ம வாலிபர்கள் 2 பேர் அவர்கள் இருவரையும் சரமாரியாகக் கல்லால் அடித்தனர். பின்னர் துப்பாக்கியால் சுட்டனர். அதில் தாயும் மகளும் பரிதாபமாக இறந்தனர்.

இதுகுறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் வழக்குப் பதிவு செய்து தாயையும், மகளையும் கொலை செய்த 2 வாலிபர்களையும் கைதுசெய்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவர்கள் இருவரும் கள்ளக்காதல், பாலியல் உறவு ஆகியவற்றில் ஈடுபட்டதால் கொலை செய்தனர் எனத் தெரிவித்தனர்.

தலிபான்கள் ஆட்சி நடந்தபோது பெண்களுக்குக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. கள்ளக்காதலில் ஈடுபடும் பெண்கள் நடுவீதியில் நிற்க வைத்து கல்லால் அடித்துக் கொல்லப்பட்டனர். தற்போதும் அதேநிலை நீடிக்கிறது.

கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தான் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்து 1,026 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்நச்சம்பவம் காஷ்னி மாகாண ஆளுநர் அலுவலகம், பொலிஸ் தலைமையகம் ஆகியவற்றிலிருந்து 300 மீற்றர் தொலைவில் நடந்துள்ளது. எனவே இது அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மக்களைக் கொன்ற அமெ.சிப்பாய் குற்றவாளி என தீர்ப்பு

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படையில் கால்வின் கிப்ஸ், (வயது - 26) இராணுவச் சிப்பாயாக இருந்தார். அப்போது ஆயுதமின்றி நிராயுதபாணியாக இருந்த அப்பாவி பொதுமக்கள் 3 பேரைச் சுட்டுக்கொன்றார். அதைத் தொடர்ந்து அவர் மீது அமெரிக்க நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

அப்போது 15 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அமெரிக்கச் சிப்பாய் கிப்ஸ் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தது. இதைத்தொடர்ந்து அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும் வாய்ப்புள்ளது.


**EXPOAIR**
*your friend in the skies...*

**VACANCIES**

- Ticketing & Reservations Agents – Males/Females
- Airport Ground Handling Agents – Males/Females
- Office Assistants/Loaders
- Hotel Assistant Manager
- Hotel Stewards cum Room Boys

*If you:*

- Are between the age of 18 to 25 and with a pleasing personality.
- Have passed the GCE O Level Examination.
- Like meeting and enjoy interacting with people.
- Speak fluently in Tamil and English.
- Are Computer literate.
- Are willing to work long hours and a team player.

Then here's the opportunity to join our Airline which is rapidly expanding, where the sky is the limit and be a member of our dedicated team of customer service oriented personnel. Please apply within 7 days with full details and 2 non-related referees to:

**DIRECTOR**
**Sales & Marketing - Passenger,**
EXPO AVIATION (PVT) LIMITED,
40, Kandy Road, Chundikuly, Jaffna.






எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா- 24,25 ஆகிய திகதிகளில்
முன் பதிவுகளுக்கு- 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawtha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.


## பொதுப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், நவ.14

மாகாண மட்டத்தில் வருடா வருடம் நடைபெற்று வரும் தரம் 9,11 ஆம் வகுப்புகளுக் கான பொதுப்பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை வலிகாமம் வலயப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி கல்வி வலய யா/கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை அதிபர்
**சிவசுப்பிரமணியம் தயாபரன்**



அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபத்தைதெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
பிரதி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
முதன்மை ஆசிரியர்கள்,
உத்தியோகத்தர்கள்,பணியாளர்கள்.

(10446)(3.6.7)


மங்கள கரமாக சேவை ஆரம்பம்........

**றோயல்லேடி அட்வான்ஸ் கப்ஸ்**
***Royal Lady Advanced Cabs***

திருமண வைபவங்கள், உல்லாசப் பயணங்கள்,
விமான நிலையம் செல்லுதல் மற்றும் அனைத்துப்பயணத்
தேவைகளுக்கும் அழையுங்கள்:

- ★ கிலோமீற்றர் அடிப்படையிலான குறைந்த கட்டணம்.
- ★ தொலைபேசி மூலமான அழைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு சேவையளிக்கப்படும்.
- ★ நிறுவனங்களின் அழைப்புக்களும் ஏற்கப்படும்.
- ★ திருமண வைபவத்துக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
0213210307
0772719806
0750404295

E.maill:
royalladyadcabs@gmil.com

(10440)(3.6.7)

40, கல்லூரி வீதி, நீராவியடி,யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்)


## தவறிவிட்டது

தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த இரத்தினம் தேசிகா ஆகிய எனது சான்றிதழுடன் கூடிய ஆவணங்கள் சாவகச்சேரிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தனியார் பேருந்து வண்டியில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அரசடி தொலைத் தொடர்பகம் சங்கத்தானை, சாவகச்சேரி எனும் முகவரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு 0774805107 (சி/5707) (2-6-7)





www.titusstores.com
டைட்டஸ் ஸ்டோர்ஸ்
புறக்கோட்டை லிபர்டி பிளாஸா
2439422


## கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய நிலைய கல்வி டிப்ளோமா
விரிவுரையாளர்
**சிவசுப்பிரமணியம் தயாபரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10443)(4-6-7)

*தேசிய கல்வி நிறுவக யாழ். பிராந்திய நிலைய
கல்வி டிப்ளோமா இணைப்பாளர்,
விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், உதவியாளர்கள்.*

## மரண அறிவித்தல்

### *சிவசுப்பிரமணியம் தயாபரன்*

(அதிபர், வரணி, கரம்பைக் குறிச்சி அ.த.க பாடசாலை,
யாழ். பிராந்திய இணைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் தயாபரன் 10.11.2011 வியாழக்கிழமை அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் சுபாதினி (விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சிவசுப்பிரமணியம்- பூமலர் தம்பதியரின் அன்பு மகனும், இராசையா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாநிதியின் (கனடா) பாசமிகு சகோதரனும், ஸ்ரீநாகேஸ்வரா (கனடா), சச்சிதானந்தன் (ஜேர்மனி), கருணாகரன் (ஜேர்மனி), றோகினி, நித்தியானந்தன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அருளானந்தம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், குமாரிலதா (ஜேர்மனி), நந்தினி (ஜேர்மனி), சிவராசா, நந்தரூபி (ஆசிரியர், கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), கிருபாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2011) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாபரன் சுபாதினி
(மனைவி)

*மீசாலை மேற்கு,
மீசாலை.*

(சி/5774)(5,6,7)




சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழ்களுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- * International Computer Driving License
- * E-Citizen
- * MS Office - Certificate Course
- * Diploma in MS Office
- * Diploma in Desktop Publishing
- * Internet & Email - Certificate Course
- * Web Browsing & Communication
- * Accounting package
- * Kids Programme

GATEWAY Language Centre
ICDL International Computer Driving Licence
IPICT International Pedagogical ICT Licence
GATEWAY CfiCT
GATEWAY KIDS SCHOOL of COMPUTING

மேலதிக விபரங்களிற்கு:
UTHAYAN IT ISLAND GATEWAY CENTRE

347 Kasthuriyar Road, Jaffna 021 222 7967
Luxmee Theatre Lane, Nelliyady 021 556 2395
New Market Building, Chavakachcheri

HOTLINE : 021 567 5555


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நோயை நாமே தேடிக்கொள்ளும் போக்குத் தேவை தானா...?

இன்று, நவம்பர் பதினான்காம் திகதி, உலக நீரிழிவு நாளாகும். இந்த வியாதி ஒரு தொற்றுநோயல்ல. ஆயினும் வருடாந்தம் சராசரி 38 லட்சம் மக்கள் அதற்குப் பலியாகின்றனர். உலகளாவிய கணிப்பீட்டின் பிரகாரம் பத்து வினாடிகளுக்கு ஒரு நீரிழிவு நோயாளி மரணமாகிறார்! உணவு முறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், வாழ்க்கை முறைகளில் ஒவ்வாத புதுக்குதல்கள், போதைப் பொருள்களின் பாவனை, புகைத்தல் என்பன நீரிழிவு நோய்க்கான பிரதான காரணிகளில் சில என்று இனம் காணப்பட்டுள்ளன. இவற்றில் பலவும் அளவுக்கு அதிகமான நகரமயமாக்கல், கைத்தொழில் மயமாக்கல் ஆகியவற்றாலேயே தோன்றுவதாக ஆய்வுகளும் கணக்கெடுப்புகளும் காட்டுகின்றன.

தொற்று நோய்களல்லாத வகையைச் சேர்ந்த நீரிழிவு, இருதய நோய்கள், புற்றுநோய், சுவாசம் தொடர்பான நோய்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மிகமிக வேகமாகப் பரவி வருவதாக, ஆய்வுகளும் அவை சார்ந்த மதிப்பீடுகளும் புலப்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை, நீரிழிவு நோயினால் பீடிக்கப்படும் நோயாளர்களில் சுமார் ஐம்பது சதவீதமானோர் மாரடைப்பு மற்றும் இருதய நோய்களால் உயிரிழக்க நேரிடுவதாகவும் சர்வதேச மட்டப் புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளில் கட்புலன் இழப்பு, சிறுநீரகம் செயல் இழப்பு, காலின் பாகங்களை அகற்றுதல் ஆகிய மிகப் பாதகமான விளைவுகளை நீரிழிவு மிகமிக அதிகளவில் உண்டாக்கி உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரங்களின் பிரகாரம், உலகளாவிய ரீதியில் வருடாந்தம் சராசரி எழுபது லட்சம் மக்கள் நீரிழிவு நோய்க்குள்ளாகும் சாத்தியம் உண்டாகி வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சுகாதார நலன் திட்டங்களுக்காக உலகளாவிய ரீதியில் செலவிடப்படும் பணத்தில் நீரிழிவு நோய் தடுப்புத் திட்டங்களுக்காக பத்து வீதம் ஒதுக்கப்படுகிறது.

ஒட்டு மொத்தத்தில், அனைத்துலக மட்டத்தில், சராசரியாக 28 கோடி 50 லட்சம் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் பத்து வருடத்தில் அந்த எண்ணிக்கை 43 கோடி 50 லட்சமாக உயரும் ஆபத்து உண்டென்றும், அதற்கான ஏதுக்கள், அதிகரித்துச் செல்வதாகவும் அனைத்துலக நீரிழிவு சம்மேளனம் தொட்டுக் காட்டி இருக்கிறது.

2025 ஆண்டளவில், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலேயே நீரிழிவினால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை மிகக் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்து செல்லும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நீரிழிவு நோயினால் இப்போது மிக அதிக எண்ணிக்கையில் இளவயதினர் பாதிக்கப்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. அந்த நோயினால் பீடிக்கப்படுபவர்களில் ஐம்பது சத வீதத்தினர், அதன் தாக்கங்கள் குறித்து விழிப்புணர்வு அற்றவர்களாக இருப்பதும் கண்டறியப்பட்டிருக்கிறது.

இலங்கையில் முன்னர் எல்லாம் மலேரியா, அம்மை நோய், கொலரா போன்ற கடும் தொற்று நோய்களே, மிகமிக ஆபத்தானவையாக, உயிர்க்கொல்லி (EPIDEMIC) நோய்களாக விளங்கின. புதிய தடுப்பு மருந்துகளும் மருத்துவ வசதிகளும் எட்டியதால் அந் நோய்களைத் தடுக்கவும், சிகிச்சை அளிக்கவும் முடிந்தது. எனினும் மிகுந்த பாதிப்பைத் தரும் சிக்குன்குனியா, டெங்கு போன்ற அதிகெடுதியான நோய்ப்பாதிப்புகளை தடுப்பதற்கான ஏற்பாடுகள் வேலைத்திட்டங்கள் வேண்டிய அளவுக்கு உயர்ந்தாக இல்லை.

நீரிழிவு தொற்று நோய் இல்லை என்ற போதிலும், தொற்று நோய் போன்று எமது பிரதேசத்தில் மிகப் பெரும் எண்ணிக்கையானோரை நோயாளர்களாக்கி விட்டது; நோயாளர்களாக்கி வருகிறது. வைத்திய நிபுணர்களின் கருத்துப் பிரகாரம் இந்நோய் பரம்பரை வியாதி என்று முழு அளவில் வகுக்கப்படக் கூடியதுமல்ல.

செயற்கை உணவுகள், இனிப்புப் பண்டங்கள் மற்றும் பதப்படுத்திய திடீர்த் தயாரிப்பு உணவுகள் எனப்படும் சமபோசாக்கைக் கருத்தில் கொள்ளாது தயாரிக்கப்படும் அதிக சுவையான உடன் உணவு வகைகள் (Fast Foods), நோய்களை வருந்தி அழைக்கும் அதீதமான சீனிச் சத்தையும் கொழுப்புச் சத்தையும் கொண்டவை. வாய்க்கு ருசி தேடி அவற்றை அளவுக்கு அதிகமாக உண்பதும், உடற்பயிற்சி இன்மை, ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருந்து செய்யும் பணிகள், ஒழுங்கு தவறாத உடற்பயிற்சி இன்மையால் உண்டாகும் நிறை அதிகரிப்பைக் குறைப்பதில் அக்கறை இன்மை, போன்ற காரணங்களாலேயே நீரிழிவு நோய் உண்டாகிறது.

எமது முன்னோரின் சமபோசாக்குள்ள உணவுவகைகளைத் தயாரித்து உண்பது காலத்துக்கு ஒவ்வாதது அல்லது நாகரிகமற்றது என்ற மாயையும், இப்போது நீரிழிவு போன்ற ஆபத்தான நோய்களுக்கு மூலகாரணமாகும். எமது மூத்தோர் உணவையே மருந்தாக்கி நோய்கள் அணுகவிடாது தம்மைக் காப்பாற்றிக்கொண்டனர். கடினமான உடல் உழைப்பும், சுக நலத்துக்கு வழிசெய்யும் போசாக்குள்ள சாப்பாட்டு வகைகளும் அவர்களை சுகதேகிகளாக வாழ வைத்தன. ஆனால் நாம் மருந்தை உணவாகக் கொண்டு எமது உடம்பை அரிக்க முண்டியடிக்கிறோம்.

மேலும் தியானம், பொழுதுபோக்கு, மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபட்டு மன அழுத்தங்களைக் குறைப்பதில் உரிய ஈடுபாடு இல்லாத வாழ்க்கை முறையை, ஒரு நாகரிகமாகக் கருதி, அதுவே கதி என்று நம்மை, எமது உடம்பை, எமது ஆரோக்கியத்தை, நாமே கெடுத்துக் கொள்கிறோம். அவசரப்பட்ட அன்றாட வாழ்க்கை முறைக்குள் நாமே எம்மை அமுக்கிக்கொண்டு, மன அழுத்தத்தையும், உடற்கேடையும் தேடிக்கொள்கிறோம்.

அதே வாழ்க்கை முறைக்குள் எமது பிள்ளைகளையும் தள்ளி வீழ்த்தி அவர்களையும் நோயாளிகளாக்க அத்திபாரம் போட்டு வருகிறோம்!

நன்றும் தீதும் பிறர் தர வரா. இன்றைய அவசர குடுக்கைத் தனமான, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற வாழக்கைப் போக்கு, எமது இளம் சந்ததியை நோயாளிகளாக்காது இருக்க, ஒவ்வாத வாழ்க்கை முறைகள், மற்றும் உணவுப் பழக்கங்களை தவிர்க்க மனம் கொள்ளாவிடில், நீரிழிவு மட்டுமன்றி, ஏனைய தொற்றா வியாதிகளும் எங்கள் மத்தியில் அதிகளவில் வந்து கெடுதி [illegible] நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதனை செயலாக்க முனையக் கூடாதா?

# அரசுக்குள் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது சர்ச்சைக்குரிய சொத்து சுவீகரிப்புச் சட்டம்

**நேற்று 13-11-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி.**

* குறைவான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் நிறுவனங்கள், குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் ஆகியவற்றைச் சுவீகரிப்பதற்கு வழி செய்யும் புதிய சட்டத்தினால் ஆளும் கட்சிக்குள் முரண்பாடுகள் தோன்றியிருப்பதாக தெரிகிறது.
* நாடாளுமன்றில் சட்டத்தை ஆதரித்து இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே பேசினார்கள்.
* சட்டத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பின் போது ஆளும்கூட்டமைப்பின்இரண்டு கட்சிகள் பிரசன்னமாகி இருக்கவில்லை.

கடந்த சனிக்கிழமையன்று ஒரு சர்ச்சைக்குரிய சட்டம் நாட்டின் சட்டப் புத்தகத்தில் இடம்பெற்றுவிட்டது. ஆனால் அதனால் ஏற்படுத்தப்பட்டு விட்ட தழும்புகள் ஆறுவதற்கு பல வருடங்கள் இல்லாவிட்டாலும் மாதங்களாவது ஆகும்.

செயல்பாடுகள் குறைவாகக் காணப்படும் நிறுவனங்கள் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை நாட்டுடைமையாக்கும் சட்டம் கடந்த புதன் கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வெள்ளிக்கிழமை இரவு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அதற்கு அங்கீகாரம் வழங்கி கையெழுத் திட்டார். அவசரமாக இந்தச் சட்டத்துக்கு அங்கீகாரம் பெறுவதற்காக நிதியமைச்சு சபாநாயகர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தது. காலதாமதமின்றி மேற்கொண்டும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவே இந்த செயற்பாடு.

புதன்கிழமையன்று சட்டம் சபையில் நிறைவேறிய கணமே அரசு தன்வசம் எடுக்க உத்தேசித்திருந்த 37 நிறுவனங்களை பொறுப்பேற்கும் செயற்பாட்டில் ஆயுதம் தரித்த பொலிஸ் அணிகள் இறங்கியிருந்தன. செவனகல சீனி கைத்தொழில் நிறுவனம், பொல்வத்த சீனி கைத்தொழில் நிறுவனம் ஆகியவையும் இதில் சிலவாகும்.

இந்தச் சட்டத்துக்கு எதிராக ஆறு தனியார் துறை நிறுவனங்கள் முன்வைத்த ஆட்சேபனைகள் ஜனாதிபதியின் முடிவுக்காகக் காத்திருந்தன. இந்தச் சட்டத்தின் கீழ்வரும் நிறுவனங்களைத் தவிர வேறு எதுவும் எடுக்கப்படமாட்டாது என உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் சட்டமூலம் புதன் கிழமை குழுநிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது திருத்தப் பிரேரணைகளில் இந்த வாக்குறுதிகள் எதுவும் இடம் பெற்றிருக்கவில்லை. குறைவாகச் செயற்படுகின்ற நிறுவனம் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்து என்று எந்தவொன்றையும் கையகப்படுத்திக் கொள்வதற்கான விதிகளைக் கொண்ட [illegible] டுள்ளது.

புதிய சட்டத்தின்படி தேசிய பொருளாதாரத்தின் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்தி பொதுமக்கள் நலன்களை பாதிக்கச் செய்யும் அவ்வாறான நிறுவனங்கள் மற்றும் சொத்துக்களின் உடைமையானது இச்சட்டம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து அரசின் சார்பிலான திறைசேரி செயலாளரிடம் வந்து சேர்கின்றது.

இதன் கருத்து என்னவென்றால் குறைவான செயல்பாட்டை கொண்டுள்ளது அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகிறது என்று அரசு நினைக்கின்ற எந்தவொரு நிறுவனத்தை அல்லது சொத்தினை தன்னுடைமை ஆக்கிக் கொள்வதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதாகும். தேவைப்படுவதெல்லாம் வர்த்தமானி அறிவிப்பு ஒன்று மட்டும்தான். அதன் பின் திறைசேரி செயலாளரின் நிர்வாகப் பரப்புக்குள் அவை வந்துவிடும். இவ்வாறு சில மணிநேரங்களுக்குள் நிறைவேற்றப்படக்கூடிய சட்டமானது சட்டப்புத்தகத்தில் இடம்பெற்றிருப்பதானது தனியார் துறையினருக்கோ எதிர்கால வரும் இலங்கையில் முதலீடு செய்வதற்குமுன் இரண்டு முறை ஆலோசனை செய்வார், தங்கள் நிறுவனங்கள் தன்னிச்சையாக எடுத்துக் கொள்ளப்படலாம் என்ற அச்சத்தினால் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டிருப் பதாவது:

பில்லியன் கணக்கில் நஷ்டத்தில் ஓடும் அரச நிறுவனங்களின் பட்டியல் நீளமானது. அவைபற்றி எல்லாரும் அறிவார்கள், இவைகளை தொடர்ந்து செயற்படுத்துவதற்கான பளு பொதுமக்கள் நிதியிலேயே தங்கியிருக்கின்றது. அதனால் தான் மக்கள் எரிபொருளுக்கும் அதிகம் விலை கொடுக்கும்படி கோரப்பட்டிருக்கிறார்கள். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் பாரம் சுமக்க முடியாமல் இருக்கின்றது. அவர்கள் மின்சாரம் , பஸ், ரயில் கட்டணங்களையும் அதிகமாக செலுத்தும்படி கோரப்படப் போகிறார்கள். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர் முதல் தடவையாக அவர்களுக்கு பலமான ஒரு செய்தி வழங்கப்பட்டுள்ளது. ஒரு சிலரே ஆனாலும், இந்தச்

## வாக்களிப்பில் கலந்துகொள்ளாத இரு கட்சிகள் மீது நடவடிக்கை?

முதலீட்டாளர்களுக்கோ நல்ல செய்தியாக இருக்கமுடியாது.

### சவப்பெட்டியில் கடைசி ஆணி

ஐ.தே.கவின் தொடர்பாடல் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர இதுபற்றி கூறுகையில்; ''மேலும் பல நிறுவனங்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டிருப்பதாக நாம் அறிகின்றோம். இது உண்மையானால் தனியார் துறைக்கு மேலும் அடி இருக்கிறது. முன்னர் மனித உரிமைப் பிரச்சினைகளால் பயந்து முதலீட்டாளர்கள் இங்கு வர தயங்கினார்கள். இப்பொழுது இந்தப் புதிய சட்டத்தின் மூலம் சவப் பெட்டியின் மூடி மீது கடைசி ஆணியும் இறுக்கப்பட்டு விட்டது'' என்றார்.

இந்தச் சட்டம் இலங்கை மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறிய அவர் இந்த சட்டத்தை ஆதரிப்பவர்களால் நாட்டின் வணிகத் தொழில் சூழ்நிலை முன்னேறியிருப்பதாக தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 127 ஆவது இடத்தில் இலங்கை இருக்கவேண்டிய நிலையில் 87 ஆவது இடத்தில் இருப்பதாகப் புள்ளி விவரம் ஒன்று வாசித்தளிக்கப்பட்டுள்ளது என்று அவர் சாடினார். அவர் மேலும் கூறுகையில்; காலிமுகத்திடலில் வணிகத் தொகுதியொன்றையும் உல்லாச ஹோட்டல் ஒன்றையும் கட்டுவதற்கு காணி கொள்முதல் செய்துள்ள ஷங்க்ரிலா குழுமத்துக்கு இந்தச் சட்டம் அதிர்ச்சி அலைகளைக் கொடுத்திருக்கிறது. தமது நிறுவனங்களும் ஒரு நாள் கைப்பற்றப்பட்டு விடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள் என்றார்.

ஐ.தே.கவின் பிரதித் தலைவர்களில் ஒருவரான கரு ஜெயசூரிய விடுத்துள்ள ஒரு நீண்ட அறிக்கையில்:

ஒரு சிறுதுளி விவேகம் உள்ள எந்தவொரு வெளிநாட்ட

சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதிலிருந்து அரசில் இணைந்துள்ள சிலர் ஒதுங்கியிருந்துள்ளார்கள். இந்தச் சட்டம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்கள் குறித்து அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அவர்களின் சகாக்கள் பலர் அவ்வாறே உணர்ந்திருந்தாலும் அச்சம் காரணமாக பேசாமல் இருந்துவிட்டார்கள். இவர்கள் துணிச்சலுடன் செயற்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

புதன்கிழமை சபையில்

சட்ட மூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கத்துக்கு மாறாக அரசு தரப்பில் இரண்டுபேர் மட்டுமே உரை நிகழ்த்தினார்கள். ஒருவர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆவார். அவரே அதிக நேரம் எடுத்துக்கொண்டார். மற்றவர் தெங்கு அபிவிருத்தி மற்றும் தோட்டத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார. இவர் குறுகிய நேரமே பேசினார். பிரதம மந்திரியால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணை மீது வேறு அமைச்சர்கள் பேச முன்வராமை சில கேள்விகளை எழுப்பியுள்ளது. புஷ்ப குமாரவானவர், செவனகல சீனித் தொழிற்சாலை நிர்வாகத்தின் தலைவரான தயாகமகேயின் அரசியல் பரம விரோதியாவார். கமகே ஐ.தே.கவின் அம்பாறை தேர்தல் தொகுதி அமைப்பாளரும் கட்சியின் முக்கிய நிதி வழங்குநருமாவார். அவரது பணிகளின் காரணமாக அவரது மனைவி அனோமா ஐ.தே. கவின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பஸில் ராஜபக்ஷ பேசும்போது, அரசமைப்பின்படி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு எம்மால் சட்டங்களை இயற்ற முடியும்.

(26 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: கோகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 நவம்பர் 2011 திங்கட்கிழமை

# தமிழ்மொழி கற்கும் மாணவர்கள் யாழ். பல்கலையில் மிகக் குறைவு

## பேராசிரியர் சிவலிங்கராஜா கவலை

யாழ்ப்பாணம், நவ.14

பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி பயிலும் மாணவர்களின் தொகை குறைந்து வருகின்றது.

தமிழ் மொழியின் சிறப்பை அதன் ஆழ அகலங்களைப் படிப்பது என்பது மகிழ்ச்சியானது என மாணவர்கள் கருதுவதில்லை. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் விழா கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தமிழ் மொழிக் கல்வியில் யாழ்ப்பாணத்துக்குச் சிறப்பான இடம் உண்டு.

19 ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழி, இலக்கியம், இலக்கணம், ஆராய்ச்சி, கண்டனம் எனப் பல்வேறு துறைகளில் யாழ்ப்பாணம் முன்னணியில் இருந்தது.

ஆனால் இன்று மாணவர்கள் எழுத்துப் பிழைகள் விடுகின்றனர். இதுபோன்ற தவறுகள் ஏற்படாதவாறு கீழ் வகுப்புகளிலேயே மாணவர்களின் மொழித் தேர்ச்சிக்குரிய பயிற்சியை சிறந்த முறையில் வழங்க ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.

நல்ல நூல்களை முறையாக வாசித்துப் பழகியவர்கள் எழுத்துப் பிழை வசனப் பிழைகளை விடமாட்டார்கள்.

சிறந்த நூல்களை வாசிக்கும் பழக்கத்தை சிறுவயதிலேயே ஏற்படுத்தக் கூடியதாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு உணர்த்த வேண்டும்.

முத்தமிழ் விழா என அழைக்கும் வழக்காறு எமது பண்பாட்டின் பலத்தையே காட்டுகின்றது.

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் முதுமொழிக்கேற்ப இன்றும் இந்த வழக்காறு நின்று நிலவுகின்றது.

இன்று ஊடகத்தமிழ், கணினித் தமிழ், அறிவியற் தமிழ் என்று தமிழ் மொழியின் பரிணாமமும் பரிமாணமும் வளர்ந்து வருகின்றது.

தென்னிந்திய சினிமாக்கள் சின்னத்திரை நாடகங்கள் என்பனவும் எமது மொழியின் பண்பாட்டின் சிதைவுக்குக் காரணமாகின்றன. இதனைப் பெற்றோர்களும் புரிந்து கொண்டு அதற்குத் தகுந்ததாக நடத்தல் அவசியம்.

கொக்குவில் கிராமம் பழம் பெருமைமிக்கது. சைவமும் தமிழும் சிறந்து விளங்கிய பகுதி இது.

கொக்குவில் குமாரசுவாமிப் புலவர் சபாரத்தின முதலியார் இருவரும் என் நினைவில் வருபவர்கள்.

அவர்களால் கட்டிக்காத்து வளர்க்கப்பட்ட கல்விப் பாரம்பரியமும் கலை இலக்கியச் செயற்பாடுகளும் விளையாட்டு முதலான புறநிலைச் செயற்பாடுகளும் இன்றும் தொடர்வது மகிழ்ச்சிக்குரியது. - என்றார். (ம- 7)

# ஒரே வலைப்பின்னலின் கீழ் பதிவாளர்களது அலுவலகங்கள்

வலி.வடக்கு, நவ.14

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் செயற்படும் உதவிப் பதிவாளர் அலுவலகங்கள் ஒரே வலைப் பின்னலின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன. இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே இலங்கை முழுவதற்குமான பதிவாளர் திணைக்களப் பணிகள் வலையமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள உதவிப் பதிவாளர் திணைக்களப் பணிகள் வலைப்பின்னல் அமைப்பின் கீழ் கொண்டு வரப்படுவதன் மூலம் யாழ். மாவட்ட மக்கள் பெரும் நன்மை அடையக் கூடியதாக இருக்கும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணம், வேலணை, உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலகங்கள் வலைப்பின்னல் அமைப்பின் கீழ் இணைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து ஏனைய பிரதேச செயலகங்களும் வலைப்பின்னல் அமைப்பின் கீழ் இந்த வாரத்தில் இணைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட மக்கள் இடம்பெயர்ந்த குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் நிலையில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவு சான்றிதழ்கள் தாம் இருக்கும் பிரதேச செயலர் பிரிவுகளில் பெறக்கூடிய வாய்ப்பு இதனூடாக ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை உரிய அலுவலர்கள் பொதுமக்களின் நன்மை கருதி சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம- 86)

# அராலி, கோட்டைக்காடு ஆஸ்பத்திரியில் இரவில் வைத்தியர் இன்மையால் நெருக்கடி

வலி.வடக்கு, நவ.14

அராலி கோட்டைக்காடு பிரதேச வைத்தியசாலையில் இரவு நேரம் வைத்தியர்கள் கடமையாற்றாமையால் அந்த வைத்தியச்சாலையை நம்பி இரவு நேரம் செல்லும் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நஞ்சருந்திய மயக்க முற்ற நிலையில் ஒருவர் அவசரமாக கோட்டைக்காடு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இந்த நிலையில் அங்கு வைத்தியர் இல்லாமையால் சங்கானை வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லும் நிலைமை ஏற்பட்டது.

இதுபோன்று பல் வேறு சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த பல மாதங்களாக இந்த நிலை உள்ளதாகப் பொது மக்களும் வலி.மேற்குப் பிரதேச சபையின் அராலி பகுதி உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

சுமார் நான்கு கிலோ மீற்றர் சுற்றளவுக்கு உட்பட்ட மக்கள் இந்த வைத்தியசாலையைப் பயன்படுத்தி வருகின்ற போதிலும் இரவில் வைத்தியர்கள் கடமையில் ஈடுபடாமையால் சுமார் எட்டுக் கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள சங்கானை வைத்தியசாலைக்கோ அல்லது போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைகளுக்கோ செல்ல வேண்டிய நிலைமை தொடர்வதாகக் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மக்கள் துயர் போக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம- 86)

# சிறுகுற்றச் செய்தி

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய ஐவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 31 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இருக்கை நாடா (பெல்ட்) அணியாமல் வாகனம் செலுத் திய நபருக்கு ஆயிரம் ரூபாவும் மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் மது போதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 6 ஆயிரத்து 500 ரூபாவும் சாரதிய அனுமதிப் பத்திரம், வாகனப் பத்திரம், வாகன வரி, காப்புறுதி ஆகியவை இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 13ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர்களின் சாரதிய அனுமதிப் பத்திரத்தை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் நீதிவான் ம.கணேசராசா உத்தரவிட்டார். (ம- 207)

# சுகாதாரச் சீர்கேடுகளுடன் செயற்பட்ட உணவகத்துக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், நவ.14

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு மாறாக சீர்கேடான முறையில் இயங்கி வந்த உணவக உரிமையாளர் ஒருவருக்கு மல்லாகம் நீதிவான் ரூபா 10 ஆயிரம் அபராதம் விதித்ததுடன் உணவுச்சாலையையும் மூடி சீல் வைக் குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

நீதிவானின் உத்தரவைத் தொடர்ந்து பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து மேற்படி உணவுச் சாலையை மூடி சீல் வைத்துள்ளனர்.

வலி.தென்மேற்குப் பிரதேச சுகாதாரப் பகுதியினர் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார விதிமுறைகளை அனுசரிக்காது இயங்கி வரும் உணவுச்சாலைகள், பேக்கரிகள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களைத் தேடிக் கண்டுபிடித்து உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த வகையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகில் சுகாதார விதி முறைகளைக் கடைப்பிடிக்காமல் இயங்கி வந்த உணவகத்தைக் கண்டு பிடித்த சுகாதாரப் பகுதியினர் உரிமையாளர் மீது மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிவான் கடை உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் கடையை மூடி சீல் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

நீதிவானின் உத்தரவைத் தொடர்ந்து பொலிஸாரும் சுகாதார உத்தியோகத்தர்களும் இணைந்து கடையை மூடி சீல் வைத்துள்ளார்கள்.

இதேவேளை, பண்டத்தரிப்புப் பகுதியில் சுகாதார விதிகளை மீறி உணவுச் சாலையை நடத்தி வந்த உரிமையாளர் ஒருவருக்கு மல்லாகம் நீதிவான் ரூபா 2,500 அபராதம் விதித்ததுடன் உரிமையாளருக்கு எச்சரிக்கையும் செய்துள்ளார்.

சண்டிலிப்பாயில் உணவகம் ஒன்றை நடத்தி வந்த இந்த உரிமையாளர் சுகாதாரப் பகுதியினரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம- 115)

# வலி.வடக்கு அபிவிருத்தியடைய அனைவரது ஒத்துழைப்பும் தேவை

## பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

வலி.வடக்குப் பிரதேசம் முழுமையாக அபிவிருத்தியடைய வேண்டுமானால் அனைவரும் இதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வலி.வடக்குப் பிரதேசமானது யுத்தத்தின் வடுக்களைத் தாங்கி நிற்கும் பிரதேசமாகும். யாழ். மாவட்டத்தின் ஏனைய 6 பிரதேச சபைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் பின் தங்கிய பிரதேசமாக உள்ளது. தற்போது மீள்குடியமாவு புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்துள்ளன. இந்த நிலையில் எமது பிரதேசத்தைப் புதுப்பொழிவுடன் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

எமது பிரதேச சபையால் முன்னெடுக்கப்படும் எல்லாவித செயற்பாடுகளும் சட்டரீதியான அணுகுமுறையுடனேயே மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. மக்களது அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எமது சபையிடம் நிதி என்பது மிகவும் சிக்கலுக்குரிய விடயமாகக் காணப்படுகிறது. இருந்தும் எமது முயற்சியால் மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்து வருகின்றோம்.

மீள்குடியமர்த்தப்பட்டுள்ள மாவை கலட்டி, வாழ்வகம் போன்ற பகுதி மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் வரிப் பணத்திலேயே பிரதேச அபிவிருத்தி செய்வதனால் வரிப் பணத்தைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. 35 வகை வரி அறவீடு உள்ள போதும் சோலை வரி, சந்தை வரி, நாய்களுக்கான இலக்கத் தகடு வரி, சைக்கிள் உரிமத் தகடு வரி போன்ற வரிப் பணத்தினூடாகவே அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டுவாழ்வைஇழந்துபோயுள்ள மக்களிடம் உடனடியாக சோலை வரி அறவிடுவது என்பது சிக்கலுக்குரியதாகக் காணப்படுகின்றது. எமது பிரதேசத்தில் நான்கு சந்தைகள் இயங்கும் நிலையில் உள்ளன. இவற்றுக்கு நிலையான சொந்தக் காணி, சொந்தக் கட்டடம் உள்ளன.

இவற்றின் நாளாந்த வருமானம் ஆயிரம் ரூபா தொடக்கம் 1500 ரூபாவரையே கிடைத்தது. இதுவும் தற்போது குறைவடைந்துள்ளது.

கணேஸ்வரம், வீமன்காமம், சித்தியம்புளியடி ஆகிய பகுதிகளில் புதிய சந்தைகளை அமைக்கவுள்ளோம். எமது பகுதியில் பல சந்தைகள் பல்வேறு காரணங்களால் இயங்க முடியாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றை இயங்க வைக்க அங்கு மக்கள் குடியமர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் 408 குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைத்துக் கொடுக்க சமுர்த்தி மூலம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.- என்றார். (ம- 36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமூகத்தை அழிவிலிருந்து பாதுகாக்க சமூக நிறுவனங்கள் பலப்படுத்தப்பட வேண்டும்

## வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.14

சமூக நலன் அடிப்படையில் சமூக நிறுவனங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். இதன்மூலம் எமது சமூகத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாக்க முடியும்.

மாறாக, எம்மிடையே தனிமனிதனை முதன்மைப்படுத்தும் முறைமை இருந்து வருகிறது.

இந்த நிலைமையால் எமது அடையாளங்களைத் தொலைத்து விடுவோமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

இவ்வாறு உணர்வு பூர்வமாகத் தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன்.

மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் எழுதிய 'மகிழ்வுடன்' என்ற நூலின் மூன்றாவது பதிப்பின் அறிமுக நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நூலுக்கான அறிமுக உரை நிகழ்த்தும்போதே வைத்திய கலாநிதி பூ.லக்ஷ்மன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



தனிமனிதனை முதன்மைப்படுத்தும் தன்மை எம்மிடையே உள்ளது. அதன் காரணமாக பின்னடைவுகளை நாம் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

சமூக நலன் அடிப்படையில் சமூக நிறுவனங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். அப் போது தான் எமது சமூகம் பேரழிவிலிருந்து விடுபட முடியும். ஆனால் சமூக நிறுவனத்தைப் பலப்படுத்தும் தன்மை எம்மிடையே இல்லை.

இதன் காரணமாக எமது அடையாளத்தைத் தொலைத்து விடுவோமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

தற்போது, இளம் சமூகத்தைப் பற்றி பல்வேறு விமர்சனங்கள் கூறப்படுகின்றன. அவை அதிக சந்தர்ப்பங்களில் மிகைப்படுத்திக் கூறப்பட்டவை ஆகும். இளம் சமூகம் பார்த்து பின்பற்றக்கூடிய முன்மாதிரிகள் சமூகத்துக்குத் தேவையாக இருக்கிறது.-என்றார்.

அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நூலின் முதல் பிரதியை வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், உயிரிழை என்ற அமைப்பின் செயலாளர் இருதராஜாவுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வில், கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட செயலாளரும் எழுத்தாளருமான ஜோசப்பாலா நூலுக்கான வாழ்த்துரையை நிகழ்த்தினார். செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் நூலுக்கான நயப்புரைகளையும் வழங்கினார்.

'தமிழ் சமூகத்தில் மகிழ்வுடன் வாழ்தல் சாத்தியமா?' என்ற தலைப்பில் நூல் ஆசிரியர் சிறப்புரையும் இடம்பெற்றது. (ம-14-23)

# வீதியின் சேதத்தால் பயணத்தில் அவலம்



கைதடி,நவ.14

கைதடி தெற்கு நவீல்ட் பாடசாலைக்கு செல்லும் வீதி மிக நீண்டகாலமாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதால் இந்த வீதியால் செல்வோர் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதி ஏ-9 வீதியின் மேற்குப் பக்கமாக தொடங்கி கைதடி கோப்பாய் வீதியில் முடிவடைகின்றது. இந்த வீதி ஒரு கிலோமீற்றர் தூரம் கொண்டது. கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இந்த வீதி திருத்தப்படாமல் உள்ளது. இந்த நிலையில் மழைகாலங்களில் வெள்ளம் நிறைந்து போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் உள்ளது.

இந்த வீதியின் இருபக்கங்களிலும் வடக்கு மாகாண சபையின் பிரதான அலுவலகர்கள் பல காணப்படுகின்றனர். நவீல்ட் பாடசாலை, விழிப்புலனற்றோரின் தொழில் பூங்கா போன்றனவும் உள்ளன.

இந்த நிலையில் இதனைத் திருத்த முன்வராதமை தமக்கு வேதனையளிப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் அரச உயரதிகாரிகள் கவனத்தில் எடுத்து இதனைத்திருத்திதர வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-288)

# நாளைய இளைஞர் அணியின் ஏற்பாட்டில் சாதாரண தர மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ .14

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் 'நாளைய இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நாளைய உலகை வெற்றி கொள்ள அறிவு ஞானத்தை வளர்ப்போம்' எதிர் காலத்தை வெல்வதற்காக அறிவை வளர்ப்போம் என்னும் தொனிப்பொருலிலான கருத்தரங்கு நேற்று ஆரம்பமாகியது.

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் இது இடம்பெற்று வருகிறது.

நேற்று ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் புங்குடுதீவு, நயினாதீவு பாடசாலைகளின்

க.பொ.த.மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொள்கின்றனர். இன்றும் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அச்சுவேலி பஸ் நிலையத்தில் மழை நீர் தேங்கியுள்ளதால் நெருக்கடி



அச்சுவேலி,நவ .14

அச்சுவேலி பஸ்நிலையத்தில் மழை நீர் தேங்கியுள்ளதால் பயணிகள் மற்றும் குறித்த பகுதிகளால் செல்வோர் பெரும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றார்கள்.

பஸ் தரிப்பிடத்தில் பேருந்துகள் பயணிக்கும் போது அங்கு நிற்கும் வெள்ளம் பயணிகள் மீது தெறித்துப் பறக்கும் நிலை ஏற்படுகிறது. இதேவேளை இந்த பஸ் தரிப்பிடத்தில் குப்பை கூழங்களும் தேங்கிக் காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இங்கு துர்நாற்றம் வீசுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

அச்சுவேலி நகர்ப் பகுதியில் நிலையைக் கூட உரியவர்கள் கவனிக்காதது வேதனை தருவதாக மக்கள் கூறுகின்றனர். (ம-11)

# தார் வீதியாகியது கூழாறுபிட்டி வீதி

நாவற்குழி,நவ.14

கைதடியையும் நாவற்குழி மேற்கையும் இணைக்கும் கூழாறுபிட்டி வீதி அண்மையில் தார் வீதியாக அமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கமநெகும திட்டத்தின்கீழ் 34 மில்லியன் ரூபா இதற்கென ஒதுக்கியிருந்தது.

சாவகச்சேரி பிரதேச சபையால் அமைக்கப்பட்ட இந்த வீதியின் நாவற்குழி-மன்னார் வீதியும்,யாழ்.-கண்டி வீதியும் இணைந்துள்ளன.

30 வருடங்களாக பராமரிக்கப்படாத இந்த வீதியைப் புனரமைக்க வேண்டுமென இந்தப் பிரதேச பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-121)

# டெங்கு நோயாளர் மூவர் வலி. தெற்கில் இனங்காணல்

### புகையூட்டும் நடவடிக்கை துரிதகதியில்

சண்டிலிப்பாய், நவ.14

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் டெங்கு நோயாளி மூவர் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து பண்டத்தரிப்பு, மாகியப்பிட்டி, மானிப்பாய் ஆகிய இடங்களில் புகையூட்டும் நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

நோயின் தாக்கம் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீதி வீதியாக ஒலி பெருக்கி மூலம் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

வலி. தென் மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பண்டத்தரிப்பு, மாகியப்பிட்டி கொம்பலிபுலம், உடுவில் வீதி மானிப்பாய் ஆகிய இடங்களில் வசிக்கும் மூவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ள தாகச் சுகாதாரப் பிரிவினரால் இனங் காணப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் உற்பத்தியை அழிக்கும் நோக்குடன் குறித்த இடங்களில் புகையூட்டும் நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, சுகாதார உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய பொருள்களை கண்டறிவதிலும் அவற்றை அழிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர்.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீதி வீதியாகச் சென்று ஒலி பெருக்கி மூலம் பிரசாரம் செய்தும் வருகிறார்கள்.

அதேநேரம் பண்டத்தரிப்பு, மாகியப்பிட்டி ஆகிய இடங்களில் இனங்காணப்பட்ட இரு நோயாளிகளும் கொழும்புக்குச் சென்று திரும்பி வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-115)

# இந்து ஆலயங்களின் அபிவிருத்திக்கு நிதியுதவி

அளவெட்டி, நவ.14

இந்து சமய கலாசார அலுவல் திணைக்களத்தால் இந்து ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது. யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எதிர் வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் தி.மு. ஜயரத்னவின் பணிப்பின் பேரில் புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் அனுமதிக்கிணங்க இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கென இந்த நிதி வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் இந்த நிதி வழங்கவுள்ள ஆலயங்களுக்கு இந்த விடயம் தொடர்பாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிதிக்கு விண்ணப்பித்தவர்கள் தமக்கு வழங்கப்பட்ட நிதி உதவி கோரும் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அதில் கோரப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களுடன் வருகை தந்து காசோலையைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் ஆலயத்தின் றப்பர் முத்திரை, ஆலயத்தின் பெயரில் அமைந்துள்ள வங்கிக் கணக்குப் புத்தகம், 25 ரூபா பெறுமதியான முத்திரை என்பவற்றுடன் ஒரு ஆலயத்தின் சார்பில் 5 பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இந்த நிதியுதவி வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதும் அது வழங்கப்படாதமை குறிப்பிடத்தக்கது. (ம-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் விற்பனைக்கு

56 - XXXX ,இலக்கமுடைய TOYOTA LITEACE VAN விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0779353065
(46-7)



## வீடு விற்பனைக்கு

யாழ்.ஆஸ்பத்திரி வீதி (முலவை சந்தி அருகில்) 7.5 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. விலை ஒரு பரப்பு 33 லட்சம். தொடர்பு 0773763510 (சி/5802) (2-6-7)


# பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 14

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அமைச்சின் கீழ் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் ஏற்பாட்டில் மின்னியலாளர் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி க.பொ.த. சாதாரண தரம் வரை கற்றிருந்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுதிகதி அன்று விண்ணப்பதாரிக்கு 16 - 35 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும். தகுதியானர்கள் தமது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், பிறந்ததிகதி, கல்வித்தகைமை என்பனவற்றை உள்ளடக்கிய சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல 7, கோயில் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட முகாமையாளர் கி. கிருஷ்ண பாலன் தெரிவித்துள்ளார்.

(வ-311)


## அறிவித்தல்

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பொதுக்கூட்டம்

இடம்: ஆலய மண்டபம்

காலம்: 27.11.2011 ஞாயிறு பி.ப.2.30 மணி

அத்தருணம் நித்திய வழிபடுவோர்கள், உபயகாரர்கள், அங்கத்தவர்கள் தவறாது வருகை தந்து ஒத்துழைக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

பொ.சதானந்தன்
தலைவர்,
பரிபாலனசபை,

இ.கிருஷ்ணசாமி,
செயலாளர்.
பதிவு இல. HA/JA/5/261.
05.12.1988

(சி/2861) (4-6-7)





ஜெயவஸ்தாங்க குருக்கள் - திலகவதி தம்பதியரின் செல்வப் புதல்வி ஜெயசங்கரி தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று (14.11.2011) திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சிறப்பாக கொண்டாடுகின்றார். இவரை சுவாமி ஐயப்பனின் திருவருளோடு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்: அப்பா, அம்மா, தாத்தாமார்கள், பாட்டிமார்கள், பெரியப்பா, பெரியம்மா, பரமேஸ்மாமா, பிரியா சித்தி, சித்தப்பாமார்கள், அத்தை, அத்தைமாமா, அபி மச்சாள், அபிராமன் மச்சான் மற்றும் உற்றார், உறவினர்கள்.*

கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு. (10171)(1,6,7)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் ஜெயானந்தன் கஜஜீவன்

*பிறப்பு: 17.11.1989*

*இறப்பு: 01.10.2011*

இறைவனடி சேர்ந்த எமது மகனின் மறைவுச் செய்தி கேட்டு ஆறுதல் கூறி துயரில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (14.11.2011) திங்கட்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பல்லசுட்டி,
பண்டத்தரிப்பு. (10364) (4-6-7)

*பிரிவால் துயருறும்:*
*தாய், சகோதரர்.*

# வீதி புனரமைக்க நிதிஒதுக்கீடு

வலி, வடக்கு, நவ.14

யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண பவன் கொக்குவில் கிழக்கில் உள்ள வளவத்தை வீதியை திருத்தியமைப்பதற்காக ஒரு லட்சம் ரூபா நிதியை பன்முகப் படுத்திய நிதியில் இருந்து வழங்கிள்ளார்.

கடந்த பல வருடங்களாக திருத்தம் செய்யப்படாது குன்றும் குழியுமாக காணப்படும் இந்த வீதியை நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான வர்கள்பயன்படுத்தி வருகின்றார்கள். வீதி சீரின்மையால் மழை காலத்தில் இந்தவீதியை பயன்படுத்த முடியாது உள்ளது. இரவு வேளைகளிலும் வீதி சீரின்மையால் மக்கள் பயணம் செய்வதில் பெரும் நெருக்கடிக்களுக்கும் ஆளாகி வருகின்றனர்..

இந்த நிலையில் நல்லூர் பிரதேச சபை நாடாளு மன்ற உறுப்பினரின் பன்முகப் படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கிடைத்த நிதியின் மூலம் வளவத்தை வீதி யைத் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் [illegible]

(ம-86)


இலங்கையில் உள்ள ஒரே ஒரு தலைமுடியியல் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிமையம் இதுவே

Care

DR.HAIR

TRICHOLOGY CENTRE

Hair and Scalp Clinic



தலைமுடி உதிர்வதை எண்ணி கவலையா..? கவலைடை விட்டுத்தள் ளுங்கள்!

தலைமுடி உதிர்தல். ஆண் பெண் வழுக்கை. பொடுகு. இளநரை. புளுவெட்டு. Psoriasis போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கை. இந்திய மருத்துவர்களின் நேரடி கண்காணிப்பில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ் கிளையில் மருத்துவ ஆலோசனை நடை பெறவுள்ளது
வவுனியா-24,25 ஆகிய திகதிகளில். முன் பதிவுகளுக்கு 021-2220288

V care Colombo - No.190, George R.De Silva Mawatha colombo 13.
V Care Colombo - No. 21, Frazer Avenue, Dehiwela. 011 - 4874854, 011 - 4376078, 011 - 2735715.
V Care Vavuniya - No. 162/5, Jaffna Road, Vavuniya. 024 - 4925807, 024 - 4924940.
V Care Jaffna - No. 26, Brown Road, Jaffna (Opposite Technical College). 021 - 4923416, 021 - 2220288.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல்கல்லூரியின் விரிவுரையாளரான K. சாந்தகுமார் (BBA(Hons) PGDM,PGDPE,MA(PA),SLTES அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளமையும்.



மேற்படிதொழில் நுட்பவியல் கல்லூரியின் முகாமைத்துவ உதவியாளரான **அ.தரன்** அவர்கள் 14.11.2011 அன்று வேலணை வலயக்கல்வி அலுவலகத்துக்கு நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் செல்வதையும் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகின்றோம்.

| | | |
|---|---|---|
| செ.துரைராசா (விரிவுரையாளர்) வெடியரசன் வீதி, காரைநகர். | அன்ரன் விமலநாதன் (கே.கே.எஸ்) நாவாந்துறை, யாழ்ப்பாணம். | தொழில்நுட்பவியல் கல்லூரி நண்பர்கள் |

[10356](3,6,7)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா சிதம்பரம்



சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிதம்பரம் 11.11.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவரான கந்தையாவின் (பொலிஸ் சார்ஜண்ட் மேஜர்) அன்புக்குரிய மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகமுத்து தம்பதியரின் அன்புக்குரிய மருமகளும் திசையரட்ணம் (இலங்கை), ஆனந்தரட்ணம் (லண்டன்), வசந்திரா தேவி (கனடா), இரட்ணலீலா (லண்டன்), இரட்ணலக்ஸ்மி (பிரான்ஸ்), சந்திரரட்ணம் (பிரான்ஸ்), இந்திராணி (பிரான்ஸ்), சூரியரட்ணம் (ஜேர்மனி), முருகரட்ணம் (பிரான்ஸ்), விஜயராணி (லண்டன்) விஜயலஷ்மி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பத்மஜோதி (இலங்கை), காலஞ்சென்ற லக்குமநாதன், சுந்தரமூர்த்தி (லண்டன்), ரூபதேவன் (பிரான்ஸ்), சத்தியவதனி (பிரான்ஸ்), ஞானபண்டிதர் (பிரான்ஸ்), சாவித்திரி (ஜேர்மனி), கமலேஸ்வரி (பிரான்ஸ்), பிரேமச்சந்திரன் (லண்டன்), அரச ரட்ணம் (கனடா) ஆகியோரின் பிரியமான மாமியும் நிசாந்தன், நிசாந்தி, முகுந்தன், எலிசபெத், பிரான்ஸ்ஸினி, சுகந்தி, சுமதி, வானதி, நிரூபன், அனிக்கா, அருண், சாருஜன், சுபோதினி, சாரங்கன், சுதர்சினி, சுதர்சன், சுபாசினி, சுமன், சிவன், ஹெற்றி, தனியா, ஈஸ்வரியா, சில்வியா, தீபன், நிக்கிதன், நிரோசா, மிதிலா, பிரியங்கா, சஞ்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் இரகஷியன், தஸ்மியா, அர்ச்சனா, நிஷானா, விஸ்வா, நிவேதா, நிகாரிதா, சுகாரிதா ஆகியோரின் பூட்டியும். காலஞ்சென்றவர்களான கந்தையா (பொலிஸ்), இரட்ண சபாபதிப்பிள்ளை (பொலிஸ்) மற்றும் கணபதிப்பிள்ளை (காட்டர்), அன்னம்மா, திலகவதி, புனிதவதி, வள்ளிநாயகி ஆகியோரின் பாசத்துக்குரிய சகோதரியும். காலஞ்சென்றவர்களான கதிரேசு, சுப்பையா, மாரிமுத்து ஆகியோரின் பாசமிகு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.11.2011) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(சி/5772) (4-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி

### அகிலாண்டேஸ்வரி நாகேஸ்வரன்



## 14.11.2011

ஆசிரியர் சேவையில் 37 வருடங்களும் எமது பாடசாலையில் 25 வருடங்களும் கல்விப் பணியாற்றித் தனது 60 ஆவது அகவையில் 14.11.2011 அன்று ஓய்வு பெறும் எமது ஆசிரியரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.....

### சேவையாற்றிய விபரம்

யா/நீராவி சரஸ்வதி ம.வி. 21.07.1975 - 21.02.1977 வரை
யா/கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சி பாடசாலை 22.02.1977-31.12.1978 வரை
மன்/பேசாலை றோமன் 01.01.1979-31.07.1982 வரை
மன்/ஊற்றுவாய்க்குளம் றோ.க.த 01.08.1982-14.03.1985 வரை
கிளி/கனிஸ்ட வித்தியாலயம் 15.03.1985-05.10.1986 வரை
கிளி/திருவையாறு ம.வி. 06.10.1986-13.11.2011 வரை

பாடசாலை சமூகம்,
கிளி/திருவையாறு ம.வி.
திருவையாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## ஒண்ணுமே புரியலை உலகத்திலே: பெரும் மர்மமாய் இருக்குது...!

ஒண்ணுமே புரியலை உலகத்திலை. என்னவோ நடக்குது. மர்மமாய் இருக்குது. என்றொரு பழைய சினிமாப் பாடல். ஜே.பி.சந்திரபாபு பாடியிருக்க வேணும்.இஞ்சை இப்ப நடக்கிற நிகழ்ச்சியளைப் பாக்கேக்கை பெருங் குரலிலை இந்தப் பாட்டைப் பாடவேணும் போலையிருக்குது. என்னென்னவோ கதையள் எல்லாம் வந்து போகுது. என்ரை வாழ்நாளிலை காணாத, கேக்காத கதையளை எல்லாம் இப்ப கேக்க வேண்டிக் கிடக்குது பாருங்கோ.

ஆசுபத்திரிப் பக்கம் போய்ப் பாருங்கோ.போய் ஒவ்வொரு கட்டிலாய் இருக்கிற ஆக்களை விசாரிச்சுப் பாருங்கோ. கன இளசுகள் தங்களை அழிக்கிறதுக்கு வெளிக்கிட்டுதுகள் எண்ட உண்மை தெரியும்.நோயோ நொடியோ கடவுள் தந்த வாழ்க்கையை நிறைவு செய்திட்டுப் போக வேணும் எண்டு கிழடுகட்டையள் நம்பிக்கையோடை வாழுதுகள். இந்தப் பொடி பொடிச்சியள் எல்லாம் வேண்டாம் வாழ்க்கை எண்டு துணிஞ்சு, தாங்களும் கஸ்டப்பட்டு, மற்றவையையும் கஸ்டப்படுத்தி இப்பிடி ஆசுபத்திரிப் படியேறுதுகள். விசாரிச்சுப் பாத்தால் அற்ப விசயங்களுக்கெல்லாம் சண்டை போட்டுக் கொண்டு இப்பிடிச் செய்திருக்குதுகள்.

இன்னொரு பக்கம் பாத்தியள் எண்டால் இளம் பொடியள் கைகால் முறிஞ்சு போய் கட்டில்லை கிடக்குதுகள். தலை தெறிக்கிற வேகத்திலை மோட்டார் சைக்கிள்ளை ஓடித்தான் இப்பிடி நடந்திருக்குது. இவை கிடக்கிறது ஒரு பக்கம். இவையாலை இடிபட்டுச் சிவலோகம் போனவையும், கைகால் முறிஞ்சு கர்மவினையெண்டு அழுதுகொண்டு இருக்கிறவையும் மற்றப் பக்கம். இவைக்காக வேலை வெட்டி எல்லாத்தையும் விட்டிட்டு அலையிற தாய் தேப்பன் இன்னொரு பக்கம்.



இந்தச் சீனுகள் எல்லாம் வெளிப்படையாக ஓடிக்கொண்டிருக்க, எங்கடை பள்ளிப் பருவப் பிள்ளையளின்ரை அவசர ஆசையளாலை வந்த வில்லங்கங்களும் பெரிசா உள்ளுக்கை ஓடிக்கொண்டு இருக்குது. அண்மையிலை ஒரு சிறுவர் தின விழாவிலை பேசேக்கை எங்கடை பகுதியிலை 253 சிறார் கருத்தரித்தல் இடம்பெற்றிருக்குதெண்டு எங்கடை ஜீஏ அம்மா ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். இண்டைக்கு எல்லாப் பாதுகாப்பு வழிமுறையளும் இருக்கிற நிலையிலையே இப்பிடியெண்டால் சந்திக்கு வராமல் மறைஞ்சு கிடக்கிறது கனக்க எண்டே சொல்ல வேணும்.

இதுகள் எல்லாத்துக்கும் சிகரம் வைச்சாற் போலை கஞ்சா, அபின் எண்ட நிலைமை மாறி ஹெரோயின் பாவிக்கிற வசதியோடை எங்கடை இளசுகள் சீரழியுதுகள் எண்டது நெஞ்சை அடைக்கிற செய்தி பாருங்கோ.கொழும்புப் பக்கம் 'குடு' அடிச்சுப் போட்டு நிக்கிறவங்கள்தான் வழிப்பறி, கொள்ளை, கொலை செய்யிற ஆசாமியள். அவங்கள்தான் பாதாள உலகக் கோஷ்டி. ஜெயிலுக்குப் போயும் 'குடு' -அது தான் ஹெரோயின் போதைவஸ்துத் தூள்- அடிக்கேலாமல் அந்தரப்பட்டு, வீட்டுக்காரர் சாப்பாட்டோடை கொண்டு வந்து குடுத்துப் பிடிபடுகுதுகள். பிறகு ஜெயிலிலை வேலை செய்கிற அதிகாரியளே வாங்கிக் குடுத்துப் பிடிபட்டிருக்கிறாங்கள்.

இஞ்சையும் பாருங்கோ, சின்ன வயசிலை தண்ணியடிக்க வெளிக்கிட்டவன். கலியாணம் காட்சியுமில்லாமல் குடிக்கிறதும், ஆரிட்டையும் கையேந்திறதும் எண்டு அவனுடைய வாழ்க்கை கழிஞ்சு கடைசியிலை அரை வயசிலை போய்ச் சேந்திடுறான். மதுவே இப்பிடியெண்டால் இந்தப் போதைப் பொருள் பாவனை எப்பிடியெல்லாம் கொண்டு போய் விடும் தெரியுமே! எனக்கு இந்த இடத்திலை தமிழ் நாட்டின்ரை பேராசிரியர் வீ. அரசு சொன்னதுதான் ஞாபகத் துக்கு வருகுது. அசாம், திரிபுரா,மேகாலயா எண்டு பழங்குடியின மக்கள் வாழுற பகுதியளிலை போராட்டங்கள் எழும்பக் கூடாதெண்டு இந்திய அரசு போதைவஸ்துப் பாவனையை ஊக்குவிக்குதாம் எண்டு அவர் சொன்னார். நோயாளியள் நிறைஞ்சிருக்கிற சமூகம் ஒருநாளும் நிமிரேலாது கண்டியளோ!

எங்கடை இளசுகள் தண்ணியடிக்க, எங்களுக்கெல்லாம் ஏன் சோலி எண்டு விலகிப் போறீங்களல்லோ. அங்கைதான் நீங்கள் பிழை விடுறியள். அது உங்கடை வாசல்படிவரும் வரைக்கும் நீங்கள் பார்த்துக் கொண்டிருந்து போட்டுப் பிறகு புலம்பிறதிலை அர்த்தமில்லைக் கண்டியளோ! அதுதான் இண்டைக்கு இளசுகள் போதைப்பொருள் பாவிச்சுப் பிடிபடக் காரணமாய் இருந்திட்டுது எண்டதை மறந்திடாதேங்கோ.

இதைவிட அநாமதேயக் கொலையளும் கூடீட்டுது.பல இடங்களிலையும் சடலங்கள் மீட்கப்பட்டுக் கொண்டிருக்குது. மனைவியைக் கொலை செய்தவையள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கினை. போதாததுக்கு இப்ப பாடசாலை அதிபரொருத்தரும் கோரமாகக் கொலையுண்டிருக்கிறார். சூத்திரதாரிகள் யாரோ தெரியாது. அதுக்குள்ளை பல்வேறு திசை திருப்பல்களும் நடக்குது. இதையெல்லாம் கேக்கும் போது ஒண்ணுமே புரியலை உலகத்திலை எண்டு பாடத் தான் வேணும்.பாடி என்ன பிரயோசனம்? பூனைக்கு மணி கட்டிறது ஆர் பாருங்கோ? ஆனால், கட்டாட்டால் கஷ்டமும் நமக்குத்தான் பாருங்கோ!

விழிச்சான் குஞ்சு.

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

## சிங்கள புத்திஜீவிகள் வலியுறுத்து

கொழும்பு,நவ.14

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அரசு உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கொத்தலாவல சட்டக்கல்லூரியின் பீடாதிபதி பேராசிரியர் பிரதீப மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. அறிக்கையின் பரிந்துரைகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருடனான பேச்சுக்களுக்கு வழிகாட்டியாகக் கொள் எப்படவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இடம் பெறும் முன்னர் இந்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தினால், இலங்கைக்கு நன்மைகள் ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் தேசிய வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்து நாட்டு தூதர்களுக்கும், இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சீனித் தொழிற்சாலை சுவீகரிப்புக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் நியாயம் கேட்பேன்

## தயாகமமே எம்.பி.கூறுகிறார்

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசுடமையாக்கல் சட்டமூலத்தின் கீழ் சுவீகரிக்கப்படவுள்ள நிறு வனங்களின் பட்டியலிலிருந்து தனது சீனித் தொழிற்சாலையான 'செவனகலசுகர் இண்டர்ஸ்ட்ரீஸ் லிமிட்டெட்'டை விடுவிப்பதற்காக சர்வதேச் நீதிமன்றமொன்றுக்கு செல்லத் திட்டமிட்டுள்ளேன் என அதன் உரிமையாளரான அம்பாறை மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாகமமே தெரிவித்தார்.

இந்தச் சட்டம் குறித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பு வரும் வரைதான் காத்திருப்பேன். அதன் பின் சர்வதேச நீதிமன்றுக்கு செல்வது குறித்து தீர்மானிக் கவுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு இந்தத் தொழிற் சாலை தனியார்மயப் படுத்தப்பட்ட போது அதைத்தான் கொள்வனவு செய்தேன். இதற்கான ஒப்பந்தத்தின்படி 700 ஊழியர்களை மீண்டும் பணிக்குச் சேர்த்ததுடன் 4,200 கரும்பு உற்பத்தியாளர்களிடமிருந்து கரும்பைக் கொள்வனவு செய்துள் ளேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இந்தச் சீனித் தொழிற்சாலை நிறுவனமானது முதலீட்டுச்சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில்ராஜ பக்ஷ நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

# தங்கத்துடன் இருவர் கைது

கொழும்பு,நவ.14

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு கடத்திச் செல்லப்பட்ட 156 தங்கக்கட்டிகளுடன் சென்ற கார் ஒன்று நாகை மாவட்டத்தில் சுங்கத்துறை அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது காரின் ஆசனத்தின் அடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 156 தங்கக்கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-சி)

# வெள்ளை வானில் வர்த்தகர் கடத்தல் நுகேகொடையில் சம்பவம்

வெள்ளை வானில் வந்தவர்களால் நுகேகொடையில் வைத்து கடத்தப்பட்ட புத்தகக் கடை உரிமையாளர் ஒருவரைப் பிடிப்பதற்கு மிரிஹான பொலிஸார் புலனாய்வுக் குழுவொன்றை ஈடுபடுத்தியுள்ளனர்.

நுகேகொடையிலுள்ள தமது புத்தகக்கடையைக் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மூடிவிட்டு தனது வாகனத்தைநோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அவரை சிலர் பிடித்து இழுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் நடைபெற்ற கையோடு வர்த்தகரின் மனைவி பொலிஸாருக்கு உடனடியாகவே தகவல் கொடுத்தார். வர்த்தகர் கடத்தப்படுவதை கண்ட ஓட்டோ சாரதி ஒருவர் இது குறித்த பொலிஸாருக்கு சாட்சியமளித்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து மிரிஹான பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-323)

# போதைப்பொருள் கடத்தும் முயற்சி; 4 இளைஞர்களுக்கு 10 ஆண்டு சிறை

சமையல் எரிவாயு சிலண்டரில் மறைத்து வைத்து போதைப் பொருள்களைக் கடத்த முற்பட்ட நான்கு இலங்கையர் களுக்கு இந்திய நீதிமன்றம் 10 ஆண்டு கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

காமினி, மொஹ மட் சரீப், சுரேஸ் ராஜா மற்றும் குண சேகரன் ஆகிய நால் வருக்கும் இந்தத் தண்டனை வழங் கப்பட்டுள்ளது. அவர்களுக்கு தலா 15 லட்சம் இந்திய ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த நால்வரும் கடந்த 2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். 4.15 கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள்களை எரிவாயு சிலிண்டரினுள் வைத்து கடத்திச் செல்ல முற்பட்ட வேளையில் அவர்கள் நால்வரும் கைதாகினர். இவர்கள் தமிழகத்தில் இருந்து கீழ்க்கரைக்குக் கடத்த முற்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. அவர்கள் புழல் சிறையில் தடுத்து வைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-323)

# வேலை வாய்ப்பு தராவிட்டால் நாடு முழுவதும் போராட்டம்

## வேலையற்ற பட்டதாரிகளின் ஒருங்கிணைப்புச் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, நவ.14

நாட்டின் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் 80 வீதமானவர்கள் பெண்கள் என்று வேலையற்ற பட்டதாரிகள் ஒருங்கிணைப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த பின்னரும் போதிய வருமானமின்மையால் வேலையற்ற பெண் பட்டதாரிகள் சமூகப் பொருளாதார ரீதியாக, படுபாதாளத்தில் இருக்கின்றனர் என்றும் அந்தச் சங்கம் கூறியுள்ளது.

இந்த நிலைமையைச் சீர் செய்து பிரச்சினைகளைத் தீர்க்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவில்லையெனில் அடுத்த வாரம் நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்போவதாகவும் அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

கடந்த சில வருடங்களாகப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு தவறியதன் காரணத்தால் 40 ஆயிரம் பட்டதாரிகள் தற்போது நாடு முழுவதும் வேலையற்றிருக்கிறார்கள்.

இந்த வருடத்தில் மேலு மொரு தொகுதியினர் இவர்களுடன் இணைந்து கொள்வார்கள்.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினங்கள் ஆண், பெண் இருவரையும் வேலை தேட நிர்ப்பந்திக்கிறது.

ஆனால் அரசு எமது கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவில்லை என்று சங்கத்தின் ஆளுநர் தம்மிக்க முனசிங்க கூறினார். (உ-10)

# இணையத்தளங்கள் மீள இயங்க அரசு நடவடிக்கை

கொழும்பு,நவ.14

முடக்கப்பட்ட இணையத் தளங்களை மீளவும் இயங்க அனுமதிப்பது குறித்து அரசு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் பல்வேறு தரப்பினருக்கும் முக்கிய பிரமுகர்களுக்கும் எதிராக சேறு பூசும் வகையில் சில இணையத்தளங்கள் இயங்கி வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதன் காரணமாகவே குறித்த இணையத்தளங்கள் முடக்கப்பட்டதாக அரசு கூறுகிறது. எனினும் அவற்றை நிபந்தனைகளின் கீழ் மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றித் தவிக்கும் பூநகரி கரையோரக் கிராம மக்கள்

கிளிநொச்சி, நவ.14

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கரையோரக் கிராமங்களான கௌதாரிமுனை, விநாசியோடை, மண்ணித்தலை போன்ற கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருகின்றனர்.

மீள்குடியமர்வு செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகியும் இதுவரை வீட்டுத் திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. மலசல கூடங்கள், கிணறுகள் என்பனவும் எவராலும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அத்துடன் பரமன்கிராய் சந்தியில் இருந்து மண்ணித்தலைக் கிராமம் வரையான 18 கிலோமீற்றர் நீளம் கொண்ட வீதி குன்றும் குழியுமாகவும் சேறும் சகதியுமாகவும் நீர் சூழ்ந்ததாகவும் காணப்படுகின்றது.

மேலும் இந்தக் கிராமங்கள் ஊடாகக் காலையில் ஒரு பஸ் சேவையும் மாலையில் ஒரு பஸ் சேவையும் மட்டுமே நடைபெற்று வருகின்றன. இந்தக் கிராமங்களில் வாழும் மக்களின் பிரதான தொழிலாகக் கடல்தொழிலே காணப்படுகின்றது. இவர்கள் சீரற்ற வீதி காரணமாகக் கடலுணவுகளைச் சந்தைப்படுத்துவதில் காலவிரயத்தையும் பண விரயத்தையும் எதிர்நோக்கி வருகின்றனர். அத்துடன் அரச ஊழியர்கள் ப.நோ.கூ.சங்கப் பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள், முதியவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், வியாபார நிறுவனங்களின் வாகனங்கள் தினமும் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே உரியதரப்பினர் இந்தக் கிராம மக்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுமாறு மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.(க-406)

## கலந்துரையாடல்

நெடுங்கேணி, நவ.14

நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் சியாட் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் 12 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் காணாமல் போனவர்கள் மற்றும் பதியப்படாத நிலையிலுள்ள பிறப்பு, இறப்பு ஆகிய விடயங்களும் ஆராயப்பட்டன.

மேலும் இலவச சட்ட உதவிகள் மூலம் இவற்றை அணுகுவது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (க-434)

## பாலம் திறந்து வைக்கப்பட்டதால் போக்குவரத்து பிரச்சினையில் தளர்வு

நாவற்குழி, நவ.14

மன்னார் முசலி பிரதேசத்திலுள்ள அரிப்புத்துறையில் புதிய அரிப்புப் பாலம் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டதன் மூலம் இந்தப் பிரதேச மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை கணிசமான அளவு தீர்ந்துள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தப் புதிய பாலம் திறக்கப்பட்ட பின்பு மன்னாருக்கும் புத்தளத்துக்குமான போக்குவரத்துத் தூரம் 80 கிலோமீற்றராலும் பயண நேரம் 90 நிமிடங்களாலும் குறைவடைந்துள்ளன.

முசலிப் பிரதேச மக்களும் தமது வைத்தியத் தேவை உட்பட அத்தியாவசியத் தேவைகளுக்கு மன்னார் நகரத்துக்கு இலகுவாக வந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது.

போக்குவரத்து நெருக்கடிகளால் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கிய முசலிப் பிரதேச மக்கள் இப்போது மன்னார், புத்தளம் போன்ற பிரதேசங்களுக்கு இலகுவாகச் சென்றுவரும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏனைய பகுதிகளிலும் இத்தகைய பாலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதே மன்னார் மக்களின் கோரிக்கையாகும். (க-121)

# தமிழ்நெறியில் நடைபெற்றுள்ள கிளிநொச்சி திறப்பு விழா நிகழ்வு



கிளிநொச்சி, நவ.14

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் எழில் புத்தகசாலையும் கணினிக் கலையகமும் திறந்து வைக்கப் பட்ட நிகழ்வு மாவட்டச் செயலகம் ஒழுங்கையில் அமைந்துள்ள இடத்தில் நாடாவெட்டாமல் தமிழ்நெறியில் நடந்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை புத்தகசாலை மற்றும் கணினிக் கலையகத்தின் தலைவாயில் நிலையின் இருபக்கங்களிலும் தொங்கவிடப்பட்ட நெடுமாலைகள் இணைக்கப்பட்டு எளிதாக அவிழ்க்கும் வகையில் கட்டி விடப்பட்டிருந்தன.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தமிழ் எழில் புத்தகசாலையின்தலைவாயில்நிலையில் தொங்கவிடப்பட்ட மாலைகளின் இணைப்பை அவிழ்த்து அதனைத் திறந்து வைத்தார். வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், தமிழ் எழில் கணினிக் கலையகத்தின் தலைவாயில் தொங்கவிடப்பட்ட மாலைகளின் இணைப்பை அவிழ்த்துத் திறந்து வைத்தார்.

இதன்போது வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார். தமிழ்ச் சான்றோர் திருவள்ளுவர், தவத்திரு தனிநாயக அடிகள், முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்), திருமதி பிறேமா மதுரநாயகம், மாவட்டச் செயலக முதன்மைக் கணக்காளர் திரு. யே.இல்பேட்குணம், கலை அரசு அ.வல்லிபுரம் ஆகியோர் மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வு தமிழ்ச் சங்கத் தலைவர் க.ம.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. சிறப்புரையை அரச அதிபரும் வாழ்த்துரைகளை வடமாகாண முதன்மைச் செயலாளரும் கல்விப் பணிப்பாளரும் ஆற்றினர். நிறைவுரையை தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் வே.இறைபிள்ளை நிகழ்த்தினார். (க)

## வீதிகளின் மோசமான நிலையால் கடைகளிலுள்ள பொருள்கள் சேதம்

முல்லைத்தீவு, நவ.14

முல்லைத்தீவு நகரின் முக்கிய வீதிகள் எவையும் முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லையெனத் தெரிய வருகின்றது.

இதனால் இந்தப் பகுதியின் போக்குவரத்துகள், வணிக நடவடிக்கைகள் போன்றவற்றில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருவதாக இந்தப் பகுதி வர்த்தகர்களும் பிரதேச மக்களும் கவலை தெரிவித்துள்ளனர். முல்லைத்தீவு நகரில் 10 கிலோ மீற்றர் நீளமான வீதி மட்டும் காபெட் இடப்பட்டுப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் முல்லைத்தீவு நகரின் வீதிகள் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழை நீர் தேங்கிக் காணப்படுவதுடன் வாகனங்கள் செல்லும் போது தேங்கி நிற்கும் மழைநீர் வணிக நிலையங்களுக்குள் தெறித்துப் பொருள்கள் தேசமடைந்து வருகின்றன.

இடப்பெயர்வுக்கு முன்னர் 165 வணிக நிலையங்கள் காணப்பட்டன. தற்போது 25 கடைகள் மட்டுமே வர்த்தக நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளன. வங்கிகளிலும் உறவினர்களிடமும் கடன்களை வாங்கி வணிக நடவடிக்கைகளை வர்த்தகர்கள் ஆரம்பித்த போதும் இவ்வாறு வீதி புனரமைக்கப்படாததால் தமது வர்த்தகப் பொருள்கள் சேதமடைவதாக வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (க-6)

## பன்றிகளால் அழிவு

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன், நாலாம் கட்டை ஆகிய கிராமங்களில் காட்டுப் பன்றிகளின் அட்டகாசம் அத்துமீறிக் காணப்படுகின்றது.

இங்கு கூட்டம் கூட்டமாக பன்றிகள் வரும் நடப்பட்ட தென்னங்கன்றுகள், மர வெள்ளி ஆகியவற்றை நாசப்படுத்தி வருகின்றன. கடந்த சில மாதங்களாகவே காட்டுப் பன்றிகள் இத்தகைய அழிவு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஏற்கனவே பெரும் பாதிப்புக்களுடன் வாழ்ந்து வரும் மக்கள் பன்றிகளின் நாசச் செயல்களால் கவலையில் ஆழ்ந்துள்ளனர். (க-406)

## கிளிநொச்சி வலய பாடசாலைகளில் புதிய அதிபர்கள் நியமனம்

அக்கராயன்,நவ.14

கிளிநொச்சிக் கல்வி வலயத்தின் எட்டுப் பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்கான நேர்முகத்தேர்வுகள் நடைபெற்றுள்ளன. எதிர்வரும் ஜனவரியில் அதிபர்கள் நியமிக்கப்படுவார்கள் எனக் கிளிநொச்சி வலயப் பதில் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார். கரியாலை நாகபடுவான் இல-03 பாடசாலை, அக்கராயன் ஆரம்பவித்தியாலயம், சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம், பன்னங்கண்டி பாடசாலை, மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை, கட்டைக்காடு அ.த.க பாடசாலை, பாரதிபுரம் இராமகிருஸ்ண வித்தியாலயம், மலையாளபுரம் திருவள்ளுவர் வித்தியாலயம் ஆகிய எட்டுப்பாடசாலைகளுக்கும் ஜனவரியில் புதிய அதிபர்கள் நியமிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-410)

### மல்லாவி மத்திய கல்லூரியின்

# பொன்விழா நிகழ்வுக்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெறுவதாக தகவல்

அக்கராயன், நவ.14

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வுக்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்று வருவதாகக் கல்லூரியின் அதிபர் து.யேசுதானந்தர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

பொன்விழா ஏற்பாடுகள் தொடர்பாக இரண்டு கூட்டங்கள் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற்றுள்ளன.

மல்லாவி மத்திய கல்லூரியின் பொன்விழாக் காலம் 1961 தொடக்கம் 2011 ஆம் ஆண்டுகளுக்குள் இடைப்பட்டது. இந்தக் காலப் பகுதிக்குள் கல்லூரியில் நடைபெற்ற முன்னேற்றகரமான நிகழ்வுகள், சேவையாற்றிய அதிபர்கள் தொடர்பாக நினைவு கூரப்படும்.

இந்தக் கல்லூரி ஆரம்ப பாடசாலையாக ஆரம்பித்து உயர்தர வகுப்புக்களைக் கொண்ட 1 ஏபி பாடசாலையாகத் தரமுயர்ந்துள்ளது. அத்துடன் இசுறு பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 1000 பாடசாலைத் திட்டத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் கல்விக் கண்காட்சியொன்றும் நடைபெறவுள்ளது.

மேலும் மாணவர்களின் உடல் வளத்தை மேம்படுத்தும் வகையில் உள்ளக விளையாட்டு அரங்கு, கூடைப்பந்தாட்ட மைதானம் என்பன திறந்து வைக்கப்படவுள்ளன.



அத்துடன் சரஸ்வதி சிலை அமைத்தல், மாதா சொரூபம் திறந்து வைத்தல், ரீசேட் வெளியிட்டு வைத்தல், கல்லூரியின் இலட்சினையை வெளியிட்டு விநியோகித்து வைத்தல் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இதைவிட பொன்விழாவையொட்டிய நூல்வெளியீடு, அதிர்ஷ்டலாபச் சீட்டை நடத்துதல் என்பனவும் இடம்பெறவுள்ளன.

பொன்விழா நிகழ்வில் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-410)

## அரச சாராயத்தை விற்றவருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

கிளிநொச்சி உதயநகர்ப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயத்தை விற்பனை செய்தவருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் சாராயத்தைப் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு விற்பனை செய்தபோதே கைது செய்யப்பட்டார். இவரிடம் 750 மில்லிலீற்றர் சாராயமும் நான்கு பியர் ரின்களும் காணப்பட்டன.

கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்த நபர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். கிளிநொச்சி பதில் நீதிவான் அன்ரன் புனித நாயகம் இந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். அபராதத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒருமாத கால சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். (க-6)

## அழிவுக்குப் பரிகாரம்

கடந்த ஆண்டு செய்கை பண்ணப்பட்டபோது அழிவடைந்த நிலக்கடலை, உழுந்து என்பனவற்றுக்குப் பதிலாக இவற்றுக்கான விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அழிவு விவரங்கள் கிராம அமைப்புக்களால் பதிவு செய்யப்பட்டு விவசாயப் பகுதியினரிடம் சமர்ப்பித்ததன் பேரில் இவை தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது பண்டார வன்னிக் கிராம மக்கள் இதனைப்பெற்று வருகின்றனர். கடந்த ஆண்டு நிலக்கடலை, உழுந்து என்பவற்றைப் பயிரிட்டு நட்டமடைந்த விவசாயிகள் இதனால் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 ஆண்டுகளுக்குப் பின்னர் மன்னாரில் விவசாய, கால்நடை, இயந்திர கண்காட்சி

மன்னார், நவ.14

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் முதன்முறையாக விவசாய, கால்நடை, இயந்திரத் தொழில்நுட்பக் கண்காட்சி இடம்பெற்றுள்ளது.

இந்தக் கண்காட்சி நேற்றும் நேற்றுமுன்தினமும் முருங்கன் பாடசாலையில் இடம்பெற்றது.

இலங்கையில் முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவித் திட்டத்தின்கீழ் இலங்கை வர்த்தக, கைத்தொழில் சம்மேளனங்களின் ஒன்றியத்தின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம் மற்றும் மன்னார் மாவட்ட வர்த்தகக் கைத்தொழில்,விவசாய சம்மேளனம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடன் இந்தக் கண்காட்சி இடம்பெற்றது.



அத்துடன் மன்னார் மாவட்டச் செயலகம் வடமாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் ஆகியனவும் கூட்டு ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.

இந்தக் கண்காட்சியில் விவசாய, கால்நடைத் துறைகளை வலுப்பெறச் செய்து உற்பத்தித் திறனை அதிகரிக்கக் கூடிய நவீன தொழில்நுட்பத்தில் உருவான இயந்திர உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

மேலும் இந்தத் துறைகளின் வளர்ச்சிக்குத் தேவையான உள்ளீடுகள் தொடர்பான சகல தகவல்களும் வழங்கப்பட்டன. (க-601)

# மதுபோதை தலைக்கேறிய நிலையில் தந்தையை அடித்துக் கொன்ற தனயன்

கிளிநொச்சி, நவ.14

விசுவமடு றெட்பானாப் பகுதியில் தந்தையை மகன் அடித்துக் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய தந்தையும், மகனும் மதுபோதை தலைக்கேறிய நிலையில் கைகலப்பில் ஈடுபட்டனர். அப்போது மகன் இரும்புக்கம்பியொன்றினால் தந்தையின் தலையில் பலமாகத் தாக்கியதாகத் தெரிகின்றது.

இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டவர் உடனடியாகத் தர்மபுரம் வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சையின் பொருட்டு கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் 66 வயதான சோமசுந்தரம். கதிரமலை எனத் தெரிய வருகின்றது. மேலதிக விசாரணைகளை விசுவமடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-6)

# ஆராய்ச்சி மாநாடு 16 ஆம் திகதி

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம் நடத்தும் ஆராய்ச்சி மாநாடு நாளை மறுதினம் 16 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது. வவுனியா றோயல் காடின் மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை இந்த ஆராய்ச்சி மாநாடு நடைபெறும்.

இந்த மாநாட்டுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்வார். இலங்கை யில் பல பாகங்களிலுமிருந்து வருகை தரவுள்ள ஆய்வாளர்கள் கட்டுரைகளை ஆய்வுக்குச் சமர்ப்பிக்கவுள்ளனர். (க)

# மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரம் சிறு கைத்தொழில் நிலையங்கள் அமையும்

மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரம் சிறு கைத்தொழில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் சிறு கைத் தொழில் நிலையங்களை அமைப்பது என இதில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தலா 400 சிறு கைத்தொழில் நிலையங்கள் என்ற அடிப்படையில் 2 ஆயிரம் சிறு கைத்தொழில் நிலையங்கள் அமைப்பது தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும் இதனைச் செயற்படுத்துவதற்கான குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் அமைச்சர் றிஸாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் என நூற்றுக் கணக்கானோர்கள் கலந்துகொண்டனர். (க-601)

## ஒன்றிணைவு...



பேதங்கள் விலகுமா? வ. மாகாண தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்பட்ட பரிசளிப்பு விழாவின்போது அதில் கலந்துகொண்ட பிரமுகர்கள் வரவேற்கப்படுகின்றனர். (431)

# உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம்

வவுனியா, நவ. 14

இன்றைய உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நீரிழிவு விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் த.சத்திய மூர்த்தி, பொதுவைத்திய நிபுணர் எம்.உமாகாந்த் ஆகியோர் தலைமையில் இந்த ஊர்வலம் காலை 8 மணியளவில் வவுனியா வைத்தியசாலை முன் வீதியில் ஆரம்பித்துக் குருமன்காட்டுச் சந்தி புகையிரத வீதியூடாக மணிக்கூட்டுக் கோபுரத்தை அடைந்து பின்னர் மீண்டும் பொது வைத்தியசாலையைச் சென்றடையவுள்ளது.

அத்துடன் வவுனியா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் காலை 8 மணியில் இருந்து 12 மணிவரை நீரிழிவுக்கான உடனடி இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இதன்மூலம் பொது மக்கள் தமக்கு நீரிழிவு நோய் உள்ளதா என்பதை அறியமுடியும்.

மேலும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் வவுனியாப் பிரதேச மக்களை அதிகளவில் கலந்துகொள்ளுமாறு வவுனியா பொது வைத்தியசாலையின் அத்தியட்சகர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

# தடைப்படும் நிலைக்கு வந்துள்ளது ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதி

முல்லைத்தீவு,நவ .14

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதி தடைப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக இந்த வீதி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த வீதியில் கனரக வாகனங்கள் செல்வதாலும், நீர் வடிந்து செல்லக் கூடிய வடிகால்கள் இன்மையாலும் , பாலங்கள் முற்று முழுதாக இடிந்து மூடி உள்ளதாலும் போக்குவரத்துக்கு உகந்த நிலையில் இந்த வீதி காணப்படவில்லை.

மழை தொடர்ந்து பெய்து கொண்டிருப்ப தால் வீதியில் ஆங்காங்கு பெரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் இடிந்து காணப்படும் பாலங்களும் அபாய நிலையில் உள்ளன. இவற்றால் விபத்துக்கள் ஏற்படும் ஏதுநிலை அதிகரித்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமேயானால் வீதியில் போக்குவரத்து நடவடிக்கைகள் தடைப்படுவது தவிர்க்க முடியாமல் போகுமெனப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-500)

# மன்னாரில் இலவச வைத்திய முகாம்

சுகாதார வைத்திய அதிகாரிகளும் இலங்கை இராணுவமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இலவச வைத்திய முகாம் மன்னார் வண்ணாமோட்டை பாடசாலையில் இடம் பெற்றது.



நேற்று முன்தினம்சனிக் கிழமை காலை 8 மணி முதல் பி.ப 3 மணி வரை நாளைய இளைஞர்கள் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த இலவச வைத்திய முகாம் நடைபெற்றது. இதன் போது 12 வகையான நோய்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் மீள் குடியமர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து சிகிச்சையினை பெற்றுக் கொண்டனர். (க-604)

# கரைச்சிப் பிரதேச செயலகத்தின் கலாசார விழா இன்றைய தினம்

கரைச்சி, நவ. 14

கரைச்சிப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கலாசார விழா இன்று திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேசசெயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீனிவாசன், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, மாகாண பொதுநிர்வாக செயலகப் பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம், கிளிநொச்சி கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீதேவி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கலாசார விழாவை முன்னிட்டு 'கனரக எழில்' என்னும் சஞ்சிகையும் வெளியிடப்பட இருக்கிறது. இந்தச் சஞ்சிகையை கோ.பத்மநாதன் வெளியிட்டு வைப்பார்.

இந்த விழாவில் பன்னிரெண்டு எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள். கலை, கலாசார மன்றத்தால் நடத்தப்படும் கரகம், காவடி, சிந்து நடனம் உட்படப் பல நிகழ்வுகளும் இடம்பெறும். (க-1152)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அற்புதமான ஆயுளை பெண்கள் தற்கொலையால் முடித்துக்கொள்ளலாமா...?



வந்தனா,
கரவெட்டி.

அண்மைக் காலங்களாக குடாநாட்டில் தற்கொலைசெய்து கொள் கின்ற பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. அதனைவிடத் தற் கொலைக்கு முயன்று உயிர் தப்பிய பெண்களும் இருக்கின்றனர். அதற்கான காரணங்கள் பற்றி பார்த் தால் குடும்பப் பிரச்சினை, காதல் தோல்வி, பரீட்சையில் சித்தியடையாமை போன்ற தீர்க்கக் கூடிய பிரச்சனைகள்தான். தற்கொலை செய்யும் பெண்களில் திருமணமாகி குழந்தைகள் உள்ள பெண்களும் அடங்குகின்றனர். கணவனுடன் பிரச்சினை என்றவுடன் தன்நிலை மறந்து, பிள்ளைகளையும் மறந்து உயிரை மாய்த்து விடுகின்றனர். அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் பிரச்சினை தீர்ந்து விட்டது என நினைக்கின்றனர். ஆனால் பிள்ளைகளின் வாழ்வு சீரழிந்து சின்னாபின்னமாகி விடுவதை உணர மறுக்கின்றனர். " அம்மா இல்லாவிட்டால் அப்பா சித்தப்பா" என்பார்கள். மனைவி இறந்தவுடன் எத்தனை ஆண்கள் மறுமணம் செய்து கொள்ளாமல் வாழ்கின்றனர். அவ்வாறான ஆண்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். மீதி ஆண்கள் குழந்தைகளுக்காக என்று காரணம் கூறி மறுமணம் செய்கின்றனர். வருகின்ற புதுமனைவி தன் பிள்ளைகளை எப்படிக் கவனித்துக் கொள்கின்றார் என்பதனைக்கூட கவனிக்கமாட்டார்கள். இதனை தற்கொலைக்கு முன் பெண்கள் உணர வேண்டும். ஏனெனில் முடிந்து போவது அவர்களின் வாழ்வு மட்டும் அல்ல குழந்தைகளின் எதிர்காலமும் தான். மற்றவர்களின் கேள்விகளுக்கும், கேலிகளுக்கும் பயந்து மன்முடைந்து அற்புதமாக வாழ்ந்து முடிக்க வேண்டிய வாழ்வை அநியாயமாக முடித்துக்கொள்கின்றனர். அவர்களின் தற்கொலைக்கு பின் அவர்கள் குடும்பம் படும் பாடு யாருக்குத் தெரியும். மகள் இறந்த துக்கம் ஒரு புறம். அதற்குப் பல காரணங்கள் கூறி ஊரவர்கள் இறந்த பெண்ணின் பெயரை களங்கப்படுத்துவார்கள் அந்த வேதனை மறுபுறம். பெற்று வளர்த்து ஆயிரம் கனவுகளுடன் ஆரோக்கிய பெற்றோருக்கு பிள்ளைகள் தரும் வெகுமதி இதுதானா?தற்கொலைக்கு முயற்சிக்கு முன் ஒரு நிமிடம் நிதானித்தால் வாழ்வின் அருமை பெருமை புரியும். தற்கொலை செய்பவர்களை கோழைகள் என்பார்கள். ஆனால் சாவதற்கும் மனதில் உறுதியும், தைரியமும் வேண்டும். அந்தத் தைரியத்தை தற்கொலைக்குப் பயன்படுத்தாமல் வாழ்வதற்குப் பயன்படுத்தலாமே ? கடவுள் தந்த வாழ்வை வேளைவரும் போது அவரே எடுத்துக்கொள்வார். அதை விடுத்து நீங்களே உங்கள் ஆயுளை முடித்துக்கொள்ள முயல்வது நியாயமா?

# மனைவி அமைவதெல்லாம்...



லேனு,
மல்லாகம்.

மணவிழா
அரங்கத்தில்
சுற்றம் சூழ
மணப்பந்தல்களை
ஆக்கிரமித்த தோழிகளின்
சிரிப்பலைகள் பலரது
செவிகளில் முட்டி
மோதிச் சிதற.......

மணப்பெண் என்ற
வெட்கத்தால் தலைகுனிந்து
புன்னகையுடன் முக விம்பத்தில்
மணவாளன் உன்னை
மணப்பெண்ணாய் நினைத்து
தொடரும் மாங்கல்ய
வாழ்க்கைப் பயணத்தில்

அக்கினி சாட்சியோடு
அம்மி மிதித்து
அருந்ததி பார்த்து

மெட்டி ஒலி கிழுகிழுக்க
மணவாளன் கைகோர்த்து
வலம் வந்து செய்யும்
வாழ்க்கை ஒப்பந்தம்
நறுமணமான திருமணம்

வாழ்வா சாவா
எல்லாமே கணவன் தானே
அவன் எதிர்காலத்தை
அவளிடம் சமர்ப்பித்து
சிற்பியின் சிலையாய்.....
பெண்ணின் கற்பனை
தொலைந்து விடாமல்

தேவதை உள்ளத்தில்
ஒளிந்திருக்கும்
உண்மைக் காதலை
மறைக்காது
உடல் பொருள் ஆவியுடன்
சரணடைவாளே!

# விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை



திருமணமாகிப் பலவருடங்கள் ஆகியும் ஒற்றுமையாக இருக்கும் தம்பதியரைப் பார்க்கும் போது; இப்படி நாம் இருக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஏக்கம் இருக்கும். அதுபோல் வாழ சில ஆலோசனைகள்:

இருவரது வாழ்க்கையிலும் கசப்பான கடந்த காலம் இருக்கலாம் அதைப் பற்றி எந்தச் சந்தர்ப்பத்திலும் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மறக்க நினைக் கும் பழைய விடயங்களைப் பேசுவதனால் மன அழுத்தமும் பிரச்சினைகளும் வேதனைகளுமே அதிகரிக்கும். என்பதை நிலைவில் கொள்ளுங்கள்.

வீட்டில் இருவரும் மனம்விட்டுப் பேசுங்கள். அன்றைய தினம் நடந்த சந்தோஷமான விடயங்களை இருவரும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எந்த விடயமானாலும் இருவரும் சேர்ந்தே முடிவெடுங்கள். என்ன சண்டை நடந்தாலும் அதிகபட்சம் அதை இருபத்திநான்கு மணி நேரத்துக்கு மேல் நீடிக்க விடாதீர்கள். நாள் கணக்கில் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு பேசாமலிருப்பதைத் தவிருங்கள். உங்கள் மேல் தவறு என்று தெரிந்தால் தயங்காமல் மன்னிப்புக் கேளுங்கள்.

அந்தப் பிரச்சினைகளை அவ்வவ்போது மறந்துவிடுங்கள். நகைச்சவை உணர்வை வளர்த் துக்கொள்ளுங்கள். நீங்கள் ரசித்துச் சிரித்த சம்பவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

விட்டுக்கொடுத்துப்போவது தவறில்லை. பேச்சில் இனிமையைப் பின்பற்றுங்கள். உங்கள் துணையை அநாகரிகமாக விமர்சனம் செய்யவோ அல்லது குறைகளைச் சுட்டிக்காட்டவோ முயலாதீர்கள். எதைச் சொன்னாலும் அன்பாக, பண்பாகச் சொல்லித் திருத்துங்கள். நல்ல குணங்களை அடிக்கடி சொல்லிப் பாராட்டுங்கள் அதைப் பலர் முன்னிலையில் பெருமையாகப் பேசுங்கள்.

குறைகளையும் தவறுகளையும் யாருமில்லாத நேரத்தில் பக்குவமாய் எடுத்துச் சொல்லுங்கள்.சண்டை போடும் போது ஜெயித்தவர் உங்கள் துணையே என்ற பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுங்கள்.கணவன் - மனைவி உறவுக்குள் நீயா-நானா என்ற போட்டி வேண்டாம்.

விட்டுக் கொடுத்துப் போகிறவர்கள் என்றும் கெட்டுப் போவதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

[illegible],
கோண்டாவில்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

# ஆண், பெண்ணுக்கிடையிலான சந்தேகம் குடும்ப வாழ்வை சீரழிக்கும்



வெண்ணிலா.

இன்றைய குடும்பங்களில் வாக்குவாதங்களும், அடிதடிகளும் வழமையான நிகழ்வுகளாகி விட்டன. இதற்கு முக்கியமான காரணி 'சந்தேகம்' என்ற பெரும் பூதம். குடும்பத்தில் கணவன் மனைவி மீதோ, மனைவி கணவன் மீதோ, பெற்றோர்கள் பிள்ளைகள் மீதோ சந்தேகம் என்ற பார்வை உதயமானால் அந்தக் குடும்ப வாழ்வே அழிந்து விடும்.

இந்தச் சந்தேகப் பூதத்தால் தற்கொலைகளும், விவாகரத்துகளுமே அதிகரிக்கும்.

ஒருவர் மீது ஒருவர் சந்தேகத்தை மனதில் புதைத்து வைத்துக் கொண்டு வாழும் போலியான வாழ்க்கை எதற்கு? காரணமே இல்லாது பலபேர் பலரிடம் பலவிதமான சந்தேகங்களைக் கொண்டிருப்பர். ஆண்கள் மீது சந்தேகம் இருந்தாலும் அதைப் பெரிதாக அலட்டிக் கொள்ளாத சமூகம், ஓர் பெண்மீது சந்தேகப் பார்வை வீழ்ந்தால் அந்தச் சந்தேகத்தில் உண்மைநிலை இல்லை எனிலும் இந்தப் பெண்ணை வாழ விடமாட்டார்கள். வார்த்தையாலேயே கொன்றுவிடுவார்கள். அதனை எவராலும் நிவர்த்தி செய்யமுடியாது. அந்தப் பெண்ணை இந்தச் சமூகமே நிம்மதியாக வாழவிடாது. வார்த்தைகளாளேயே கொன்றுவிடும் . இதனால் விவாகரத்தே நிச்சயம் . கல்வி, தொழில் விடயங்களில் கட்டாயம் சந்தேகம் எழவே வேண்டும். ஏனெனில் அதைத் தீர்க்கும் போது எமக்குப் புரியாத பல விடயங்கள் புரியும். ஆனால் குடும்பத்தில் சந்தேகம் எழுந்தால் அது தோல்வியையும் வருத்தத்தையுமே ஏற்படுத்தும்.

இதை ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி சரியாகப் புரிந்து கொண்டு நடந்தால் நன்மை அவர்களுக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தவறினால் தமிழினத்தின் அடையாளங்களை நாம் இழந்துவிடுவோம்

## 'நீங்களும் எழுதலாம்' இதழின் ஆசிரியர் தெரிவிப்பு

மூதூர், நவ.14

''ஓர் இனத்தின் விடுதலைக்கு இலக்கியம் மிக முக்கியமானதாகும். அதற்கு இலக்கியச் செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டும். இதிலிருந்து தவறுவோமேயானால் தமிழினத்தின் அடையாளங்களை நாம் இழந்துவிடுவோம்.''

- இவ்வாறு 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழின் ஆசிரியர் கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து வெளிவரும் 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழின் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் மாபெரும் பௌர்ணமி தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஓர் இனத்தின் விடுதலைக்கு மிக் முக்கியமானது இலக்கியமாகும். இன்று இலக்கியத்தின் செயற்பாடு எமது சமூகத்தின் இருப்பை நிலைநிறுத்த அவசியமாகத் தேவைப்படுகின்றது. அதற்கு இலக்கியச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். எமது சமூகத்தின் முக்கியமான ஆயுதமாக இன்று இலக்கியம் காணப்படுகின்றது.

'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தின் மூலம் இளம் இலக்கியவாதிகள், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. அவர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பும், அவர்களின் திறமைகளைப் பாராட்ட வேண்டியதும் நமது கடமையாகும். இதிலிருந்து தவறுவோமேயானால் எமது இனத்தின் அடையாளங்களை நாம் இழந்து விடுவோம்.

எமது இருப்பை நிலைநிறுத்துவதற்குத் திருகோணமலையிலுள்ள ஊடகவியலாளர்களின் செயற்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. அவர்கள் எமது நிகழ்வுகளை அகில உலகுக்கும் வெளிப்படுத்துகின்றார்கள்- என்றார். (ச)

# பண மோசடி: கிராம அலுவலர் கைது

திருகோணமலை, நவ. 14

வெள்ள நிவாரண நிதி வழங்கல் தொடர்பான மோசடியில் ஈடுபட்ட கிராம சேவையாளர் ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர் என்று திருகோணமலை புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் எம்.ஏ.எம்.பாரிக், அரபிக்கல்லூரி வீதி, மூதூர் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஜனவரி,பெப்ரவரி மாதங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது மூதூர் பிரதேசத்துக்கு அரசால் வழங்கப்பட்ட நிதியில் எட்டு லட்சம் ரூபாவை மோசடிசெய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அலுவலக விசாரணையின் போது கடமையில் இடைநிறுத்தப்பட்ட கிராம சேவையாளர் தொடர்பாகப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளைமேற்கொண்ட திருமலை புலனாய்வுத்துறையினர் கிராம சேவையாளரைக் கைதுசெய்து திருகோணமலை நீதிமன்ற நீதிவான் யூ.எல்.எம்.அஸ்ஹர் முன்னிலையில் ஆஜர்படுத்தியவேளை, எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை புலனாய்வுத் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இலத்திரனியல் கடனட்டை மோசடி: கைதான யுவதிக்குப் பிணை

வெல்லாவெளி, நவ.14

இலத்திரனியல் கடனட்டை மோசடியில் ஈடுபட்ட யுவதியொருவர், கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலை படுத்தப்பட்ட போது ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 3ஆம் திகதி கொமர்ஷல் வங்கியில் இருந்து இலத்திரனியல் கடனட்டை ஊடாகப் பணத்தைப்பெற்ற முறைப்பாட்டுக்காரர் தவறுதலாக அட்டையை மீளப்பெற்றுக்கொள்ளாமல் சென்றுள்ளார்.

இந்தநிலையில், குறித்த யுவதி தனது இலத்திரனியல் அட்டை ஊடாகப் பணம் பெறச் சென்றபோது, முறைப்பாட்டுக்காரரின் அட்டையை அங்கிருந்து மீட்டுள்ளார். பின்னர் அந்த அட்டையைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி மட்டக்களப்பு பொலிஸாரிடம் தனது கடனட்டையைக் காணவில்லை என்று முறைப்பாடு செய்த நிலையில், மட்டக்களப்பு பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வு விசாரணைப் பிரிவினர், வங்கி முகாமையாளரின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து இந்த யுவதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த அட்டையைப் பயன்படுத்தி ஆயிரத்திநாநூறு ரூபாவிற்கு இரண்டு பாதணிகளும், ஒரு லட்சத்து இரண்டாயிரம் ரூபாவிற்கு இரண்டு பவுண் தங்கச் சங்கிலி எனப் பெறுமதியானபொருள்களைக் கொள்வனவு செய்த நிலையிலேயே இந்த யுவதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து அட்டையும் அட்டையைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்த பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றினால் ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில் இந்தக் கொடுப்பனவு அட்டைக்குப் பொருள்களை வழங்கிய வர்த்தகர்கள் விடயம் தெரிந்து வழங்கினார்களா என்பது குறித்து விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



அஷ்ரப் நகர் கிராமத்திலுள்ள சர்ச்சைக்குரிய காணிகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார். (ச)

# பஸ்ஸில் கொள்ளை

கண்டி, நவ.14

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றை கேகாலை நகர மத்தியில் மறித்து ஏறிய இரண்டு கொள்ளையர்கள் பஸ் நடத்துனரிடமிருந்த 12 ஆயிரம் ரூபா பணத்தையும், டிக்கட் மானியையும் பறித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி பஸ் நடத்துனர் கேகாலை பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பவம் நடந்த மறுநாள் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைதுசெய்தனர். (ச)

# புதிய ஒலுவில் துறைமுகத்தால் கிராமம் அழிவடையும் ஆபத்து

மட்டக்களப்பு,நவ.14

ஒலுவில் பிரதேசத்தில் அமைக்கப்படும் துறைமுகத்தினால் ஒலுவில் கிராமம் அழிவடையும் ஆபத்துள்ளது என்று அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் திணைக்களத்தால் ஒழுங்கான முறையில் ஆய்வு மேற்கொள்ளப்படாமையே இந்த நிலைக்குப் பிரதான காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக ஒலுவில் கிராமத்திற்கு அண்மித்த பிரதேசங்களான அட்டப்பளம், நிந்தவூர் ஆகிய பிரதேசங்களும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் கடல்நீர் புகுந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் ஆகியோரின் கவனத் திற்கு கொண்டு வந்ததையடுத்து கடலரிப்பைத் தடுப்பதற்காக கற்பாறை அணை அமைக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடலரிப்பின் காரணமாக இந்தப் பிரதேச மக்கள் விவசாய ரீதியாகவும் கடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு தொழில்களை இழந்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# மலையகத்தில் நன்னீர் மீன்பிடி அறிமுகம்

நுவரெலியா, நவ.14

மலையகத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள நன்னீர் மீன்பிடித் திட்டத்தினால் பெருந்தோட்ட இளைஞர்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்பு ஏற்படுவதுடன் மக்களின் போஷாக்கு மட்டமும் அதிகரிக்கும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அது வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பலதரப்பட்ட சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றார்.

இதன் ஒருகட்டமாக மலையகத்தில் நன்னீர்மீன்பிடித் திட்டத்திற்கான நடவடிக்கைகள் கடந்தவாரம் முன்னெடுக்கப்பட்டன.

முதன்முதலாக ஹற்றன், கொட்டகலை பிரதேசங்களில் அமைந்துள்ள பென்மூர், செனன் மற்றும் டிரேட்டன் ஆகிய குளங்களில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத்திட்டமானது மலையக இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினையை நிவர்த்தி செய்து அவர்களின் பொருளாதாரத்தை வளர்ப்பதோடு மக்களின் போஷாக்கு மட்டத்தையும் அதிகரிக்கச் செய்யும்.

எதிர்காலத்தில் இந்தத் திட்டம் மலையகத்தில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்கள் இனங்காணப்பட்டு அப்பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# புதையல் தோண்டிய 9 பேர் கைது

அம்பாறை,நவ.14

அம்பாறை, நகவம்புர பிரதேசத்தில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த 9 பேரை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்துள்ளதாக அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

# மலையகத்தில் பொலிஸ் பதிவு மீண்டும் ஆரம்பம்; மக்கள் பீதி

நுவரெலியா,நவ.14

மலையகத்தில் மீண்டும் பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

போர் முடிவுக்கு வந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அவசரகாலச் சட்டமும் நீக்கப்பட்டுவிட்டதால், அங்கு இவ்வாறு பொலிஸ் பதிவுகள் மேற்கொள்ளப்படுவது குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

மஸ்கெலியா நகரில் வசிக்கும் மக்களிடம் பொலிஸாரினால் இது தொடர்பாக ஒரு விண்ணப்பப்படிவம் வழங்கப்பட்டுப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அந்த நகரில் வசிக்கும் அம்பகமுவ பிரதேச சபையின் உறுப்பினரான செல்லையா சிவசுந்தரம் கூறியுள்ளார்.

இந்த விண்ணப்பப்படிவத்தில் குடும்பத் தலைவர், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அந்த வீடுகளில் தற்காலிகமாகத் தங்கியிருப்போரின் விவரங்கள் ஆகியன கேட்கப்பட்டிருந்தன என்று அவர் தெரிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் இவ்வாறு விவரங்கள் பொலிஸாரினால் சேகரிக்கப்பட்டிருந்தது. அது பின்னர் நிறுத்தப்பட்டிருந்ததாகவும், எனினும் மீண்டும் அவர்கள் இவ்வாறு பதிவுகளை மேற்கொள்வது தமக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா
# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். வீட்டுக்குத் தேவையான உணவுகள் வாங்க கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். அயலாரிடம் பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். சிலரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம்.

**இடபம்:**
தேக ஆரோக்கிய விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். பிள்ளைகளின் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். மனதை விட்டு அகலாத சம்பவங்கள் நடக்கலாம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கலாம். பழைய சம்பவங்களை நினைத்துப் பார்ப்பீர்கள்.

**மிதுனம்:**
மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆள்படலாம். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாக கையாள வேண்டும். கோபித்துக் கொண்டு சென்ற உறவினர்கள் உங்களின் வீடுதேடி வருவர். மாற்று மொழி பேசும் நண்பர்களால் அனுகூலம் பெறலாம். பெருமைக்காக சில செலவுகளைச் செய்து அவதிப்படுவீர்கள். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

**கடகம்:**
அடுத்தவர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். எந்த விடயத்துக்காகவும் அலட்டிக் கொள்ளாமல் நிதானமாக செயற்படுவீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். உங்களுக்கு வேண்டியதைச் சாதிக்க சிலருக்கு பணம் கொடுப்பீர்கள்.

**சிங்கம்:**
பெற்றோர் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கலாம். நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு கிடைக்கும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். உங்களுக்கு வேண்டிய காரியம் ஒன்றைச் சாதிக்க மற்றவர்களை நச்சரிப்பீர்கள்.

**கன்னி:**
திடீர் பணவரவுகளைப் பெறலாம். மாமன், மைத்துனர்கள் உங்களின் எண்ணம் போல் நடந்து கொள்வர். புதிய பொருட்கள் வாங்கலாம். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். சில விடயங்கள் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டுவீர்கள்.

**துலாம்:**
பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பயணத் தடைகளால் கோபம், எரிச்சல் உண்டாகலாம். நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடித்து விட்டு, பின்னர் அவசரமாகச் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்:**
உற்சாகம், தெம்புடன் செயற்படும் நாள். ஆசைகள் பூர்த்தியாகலாம். மற்றவர்களின் உதவிகளை எதிர்பாராமல் நீங்களே சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். மனைவி வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் போது, முக்கியமான ஒருவரைச் சந்திக்க வாய்ப்பு கிட்டும். புதிய உறவினர்கள் அறிமுகமாகலாம்.

**தனுசு:**
எதிர்பாராத நல்ல நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்புகள் உண்டு. வாகன மாற்றம் தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். சில வேலைகளை சுலபமாக முடிக்க நேரிடலாம்.

**மகரம்:**
கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தாமதித்த காரியங்களை முடிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். இல்லத்தில் விருந்தினர் வருகையால் சிரமங்களைச் சந்திக்கலாம். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**கும்பம்:**
சிந்தித்துச் செயற்பட்டு சிறப்பு காணும் நாள். தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். இடம், பூமி வாங்க மேற்கொண்ட முயற்சிகள் தள்ளிப் போகலாம். உறவினர் ஒருவர் தங்களின் வேலையை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமாகச் செலவு செய்யலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

**மீனம்:**
மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். அதிக விலைக்கு வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். சிலர் உங்களை பயன்படுத்தி காரியம் சாதிக்கலாம். ஓய்வாக இருக்காமல் காலை முதல் மாலை வரை ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள்.

# அரசுக்கு புகழ் ...
# எவரும் மரணிப் ...
# ஆனால் எதி ...

கேள்வி:- பிரதம நீதியரசராக நீங்கள் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்ற செயற்பாடுகள் குறித்து விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக தெரிகிறது. அதுபற்றிய உங்களின் கருத்து என்ன?

பதில்:- ஆம்! எனக்கும் இது தொடர்பாக தகவல் கிடைத்திருக்கிறது. 75 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்ட பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றதாக அறிகிறேன்.

நான் பிரதம நீதியரசராகப் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் விடயங்கள் குறித்து விசாரணை நடத்தவே இந்தத் தெரிவுக் குழு அமைக்கப்படுகிறதாம்.

நான் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை பிரதம நீதியரசராக கடமையாற்றினேன். 2009 ஜூன் 7ஆம் திகதி நான் ஓய்வுபெற்றேன். ஓய்வு பெறும் முன்னர் நாம் அது குறித்து எமது உயர் பீடத்திலுள்ள அதிகாரியிடம் அறிவிக்க வேண்டும்.

### ஜனாதிபதியின் பாராட்டு

அரச சேவையைப் பொறுத்தவரை இந்த முன்னறிவித்தல் ஆறுமாத காலத்துக்கு கொடுப்பது வழமை. ஏதாவது குற்றங்கள் இருப்பின் அதற்குமுன் விசாரணை செய்யவோ, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ முடியும் என்பதற்காகத் தான் இந்த நடவடிக்கை. எமக்குத் தலைவர் ஜனாதிபதி என்பதால் அவருக்கு அறிவித்தேன்.

நான் ஓய்வு பெற்ற போது வழங்கிய சான்றிதழில், இந்த நீதியரசராக பதவிவகித்த காலப்பகுதி தான் அதியுயர் சேவைக்காலப்பகுதி என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். அத்துடன், சேவைக்குப்பின் ஆரோக்கியமான ஓய்வுநிலை வாழ்வை மேற்கொள்ளுங்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதி என்றுமே அப்படி எழுதியிருக்க மாட்டார். எனக்கு அப்படிப்பட்ட சான்றிதழை வழங்கினார்.

ஜனாதிபதிதான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் 75 பேர் நான் ஓய்வுபெற்று இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் என் மீதான குற்றச்சாட்டுக்கள்பற்றிக் கூறுகின்றனர். முதலில் முன்னுக்குப் பின் முரண் இருப்பதையே நான் ஊடகங்களுக்குக் கூறினேன். பிரதம நீதியரசருக்கும் உள்ள தொடர்புதான் இங்குள்ள பிரச்சினை.

ஜனாதிபதிதான் ஒழுக்காற்று அதிகாரி. நீதியரசரை நியமிப்பதும் ஜனாதிபதிதான். பதவியிலிருந்து அவரை இறுதியாக அகற்றும் அதிகாரம் கொண்டவரும் ஜனாதிபதிதான். அந்த ஒழுக்காற்று அதிகாரியே எனக்கு இப்படி சான்றிதழை வழங்கி விட்டார். பின்னர் நான் ஓய்வூதியம் பெற்றேன். இப்போது ஓய்வில் இருக்கிறேன். அரசமைப்பின்படி இந்த ஓய்வூதியத்தையும் குறைக்க முடியாது. அது தெளிவாக உள்ளது. அப்படி இருக்கும்போது எந்த அடிப்படையில் இந்த விசாரணைகள் நடத்தப்பட போகின்றன என்பதுதான் பிரச்சினை. மற்றுமொன்றும் உள்ளது.

### நாடாளுமன்ற அதிகாரம்

நீதிபதிகள் சம்பந்தமாக ஒரு சில அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உள்ளதுதான். அதை நான் விளக்குகிறேன். சில விடயங்கள் பலருக்குத் தெரியாது. அரசமைப்பின் நான்காம் பிரிவின்படி அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அரசமைப்பு அதிகாரம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்ற அதிகாரமென மூன்று அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. நாடாளுமன்றம், சட்டதிட்டங்களைத் தயாரிக்கக்கூடிய அரசமைப்பு அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அதற்கு மேலாக நிதி அதிகாரமும் உள்ளது. நிதி நடவடிக்கை சம்பந்தமாக நாடாளுமன்றத்துக்கு கண்காணிப்பு அதிகாரமும் இருக்கிறது. அதுவும் கணக்காய்வாளர் நாயகத்தின் சிபாரிசின் அடிப்படையில்தான் நடக்கும். எனது விடயத்தில் நிதி சம்பந்தமான எந்தக் குற்றங்களும் இல்லை. நாடாளுமன்றத்துக்கு உள்ள அடுத்த அதிகாரம்தான் ஒழுக்கம் சம்பந்தமானது. ஒழுக்கம் சம்பந்தமாகவும் பிரிவுகள் உள்ளன.

ஒன்று ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை சமர்ப்பிப்பது. இரண்டாவது, அதேபோல் உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர், நீதிபதிகளுக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்றை முன்வைப்பது. இப்போது இந்தத் தெரிவுக்குழு யோசனை தயாரிக்கப்பட்டிருப்பது அந்தக் குற்றப்பிரேரணையின் அடிப்படையில்தான். ஏனெனில், 107 ஆம் அரசமைப்பின் பிரிவைப் பார்த்தால் 75 பேரின் கையொப்பம் குற்றப்பிரேரணை ஒன்றுக்குத்தான் தேவை. அந்த அடிப்படையில்தான் இதனை கொண்டுவரப் பார்க்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கை இதற்காக கொண்டுவர பார்க்கின்றனர். அரசமைப்பின் 107 ஆவது பிரிவின்படி செயற்பட இவர்கள் முனைகிறார்கள் என்பது தெளிவு. சாதாரண ஒரு விசாரணைக்கு ஏன் இந்த மூன்றில் ஒரு அதிகாரம் தேவை?

நான் ... ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதால் இந்த அடிப்படையில் என்னை விசாரிக்க முடியாது. பதவியில் இருக்கும், பதவியை வகித்துக்கொண்டிருக்கும் ஒருவருக்கெதிராகவே குற்றப்பிரேரணை கொண்டுவரலாமென அரசமைப்பில் குறிப்பிடப்படுகிறது. இந்த சட்டத்தின்படி நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றினாலும் நீதிபதி ஒருவரை அகற்றுவதற்கு ஜனாதிபதி இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டும். அவர்தான் இறுதியில் தகுதி வாய்ந்த அதிகாரியாகக் கருதப்படுவார். ஜனாதிபதி என்னை சேவைகளிலிருந்து விடுவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, எனக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வரமுடியாது.

நாம் நீதிபதிகளாக அரசுக்கு சேவையாற்றுகிறோம். மற்றும் பலர் ஏதோ ஒரு அரச சேவையில் இருக்கின்றனர். நாம் அரச சேவையாளர்கள்; சேவை ஒப்பந்த அடிப்படையில் நாம் அரசுடன் ஒன்றியுள்ளோம். சேவை ஒப்பந்தம் முடிவடைந்த பின் எமக்கெதிராக யாரும் நடவடிக்கை எடுக்க முடியாது. இது முன்மாதிரியாக அமைந்தால் சேவைக்காலம் முடிவடைந்த எல்லா அதிகாரிகளுக்கும் எதிராக நாடாளுமன்றத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம். இதுதான் இதிலுள்ள அபாயகரமான நிலைமை.

இது அடிமைகளின் விடயம் அல்ல. அடிமை ஒருவர்தான் வாழ்நாள் முழுவதும் எஜமானுக்கு பதில் சொல்ல வேண்டும். அடிமைத்தனம் இங்கு இல்லை. ஒப்பந்தப்படி சேவை. சேவை முடிந்தவுடன் ஒன்றும் செய்ய முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதைக் குழப்பிக்கொண்டுள்ளனர். குழப்பிக்கொண்டு பரப்புரை செய்கின்றனர்.

நான் பொது விடயங்கள் பற்றிப் பேசப் பேச இதற்கும் பிரசாரம் அதிகரிக்கின்றது. இரண்டரை வருடங்களின் பின் ஏன் இந்த அவசரம்? தேசியப் பிரச்சினை சம்பந்தமாக, அதிகாரப்பகிர்வு சம்பந்தமாக நான் பல விடயங்களைப் பற்றி பேசி வருகின்றேன்; அரசை விமர்சிக்கின்றேன்.

தனிப்பட்ட பிரஜை என்ற அடிப்படையில் என்னால் இதனை செய்ய முடியும். அப்படி செய்யும் போது என் மீது அவதூறு பிரசாரத்தை முன்னெடுக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது இது கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்துக்கும் முரணாக இருக்கிறது. அரசமைப்பின் 19 ஆம் பிரிவில் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதற்கும் அழுத்தம் இருக்குமானால் ஜனநாயக முறையை முன்னெடுக்க முடியாது.

இந்த அரசுக்கு இதனைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. யாராவது விமர்சனம் செய்தால் அவரை எதிரியாகப் பார்க்கிறார்கள். சிறுபான்மையினர், பௌத்தர் அல்லது கிறிஸ்தவர் யார் விமர்சனம் செய்தாலும் அவர் எதிரி. அந்த எதிரியின் பின்னால் செல்கின்றனர்.

ஒரு பத்திரிகையில் செய்தியொன்றை பார்த்தால் அந்தச் செய்தியை எழுதியவர் அல்லது ஆசிரியரை எதிரியாக பார்க்கின்றனர். அவரைப் பின்தொடர்கின்றனர். சிலவேளைகளில் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டும் உள்ளனர். அரசு கொன்றதா அல்லது யார் கொன்றார் என்பது தெரியவில்லை. ஆனால், விமர்சனம் செய்யும் பத்திரிகையாளர்களே கொல்லப்படுகின்றனர். அரசுக்கு புகழ்பாடுபவர்கள் மரணிப்பதில்லை (சிரிக்கிறார்). நான் ஓர் ஓரமாக ஒதுங்கி இருந்து இந்த அரசுதான் நல்ல அரசு என்று கூறினால் எனக்கு எதிராக எதுவும் வராது. அதுதானே யதார்த்தம்? நாங்கள் சிறுபிள்ளைகள் அல்லர். நாட்டில் புத்தியுள்ள ஒரு குழுவினர் இருக்கின்றனர் அல்லவா?

நடந்தது இதுதான். நான் விலகும்போது ஜனாதிபதி மஹிந்த என்னிடம் பேசினார். நான் அப்போது மிகிந்தலையில் இருந்தேன். அது பொசன் தினம். எனது பதவியில் விலகிய பின்னர் சென்றேன். எனது பிறந்த நாளுக்கும் வாழ்த்து தெரிவித்த ஜனாதிபதி ''வாருங்கள் சரத். எங்களுடன் வேலை செய்யுங்கள்'' என்றார்.

நான் அதற்கு பதிலளித்து, ''நான் இப்போது சுதந்திரமாக இருக்கிறேன். உங்களுடன் வேலை செய்ய



# ழ்பாடுவோர் ப்பதில்லை...! திராக...!!



முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா

வேண்டிய அவசியம் இல்லை'' என்றேன். ''வாருங்க ளேன். உணவு வேளை ஒன்றில் பேசுவோம்'' என்றார். அதற்குப் பிறகு ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் காமினி செனரத் என்னுடன் தொலைபேசியில் பேசி னார். ஜனாதிபதி பர்மா செல்வதாகவும், உங்களையும் வரச் சொன்னார் என்றும் காமினி சொன்னார். ஆனால், பர்மாவுக்கு செல்ல வேண்டிய எந்த அவசியமும் எனக்கு இல்லையென நான் சொன்னேன். இல்லை சுற்றுப் பயணம் செய்யலாம் என்று கூறினார். நான் பிறந்த பௌத்தன் என்பது அவர்களுக்குத் தெரியும். பர்மாவுக்கு எனது செலவில் சென்று நான் தரிசனம் செய்துள்ளேன். அரச பணத்தில் நான் சுற்றுப் பயணம் செய்யமாட்டேன் என்று தயவுசெய்து ஜனாதிபதி யிடம் கூறுங்கள் என்று நான் தெரிவித்தேன். அதை செய்யவே மாட்டேன். இப்படியான யோசனைகளை முன்வைக்காதீர்கள் என்று திட்டவட்டமாக சொன்னேன். பின்னரும் அடிக்கடி இப்படி வேண்டுகோள் வந்தது. ஆனால், நான் அதை நிராகரித்தேன்.

எனது கொள்கை என்னவெனில், இந்த நிறை வேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இரத்துச் செய்யப்பட வேண்டும். தேசியப்பிரச்சினைக்கு உடன டியாக தீர்வு வழங்கவேண்டும். நாம் எந்தநாளும் பிரச்சினைகளுடன் வாழமுடியாது. அரசமைப்பை திருத்தி அதிகாரங்களை பகிர்வது எப்படி என்பதற் காகத்தான் சட்டமா அதிபராக நான் பதவி வகித்த காலத்தில் அதிக நேரத்தை செலவிட்டேன்.

2000ஆம் ஆண்டு அரசமைப்பு திருத்தம் குறித்து உயர்நீதிமன்றத்திடம் வினவப்பட்டபோது அதனை துரிதப்படுத்துமாறு நான் பணித்தேன். ஆனால், நாடாளுமன்றத்திற்கு சென்று அது தோல்வியில் முடி வடைந்தது. எனவேதான் நான் கூறுகிறேன் ஜனாதி பதி முறைமையை ரத்துச் செய்து மீண்டும் நாடாளு மன்ற முறைமைக்கு செல்லவேண்டும். செனட் சபை இருக்க வேண்டும். அதிகாரப்பகிர்வு தெளிவாக இருக்க வேண்டும். அந்தந்த பகுதிகளின் பொறுப்பு அந்தந்த ஆட்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நிர்வகிக்க முயல்வது பொய் வேலை. 41 வருடகால சேவையில் நான் கற்ற பாடம் அது. யாழ்ப்பாணம், மன்னார், வவு னியா, திருகோணமலையில் புதிய நீதிமன்றங்களை நிறுவியவன் நான்தான். அந்த நீதிமன்றங்களின் செயற்பாட்டில் நான் தலையிட்டதில்லை. அதனால் பிரபாகரன்கூட எனக்குத் தொந்தரவு கொடுத்த தில்லை. உண்மையை சொல்ல வேண்டுமல்லவா? பிரபாகரன் பயங்கரமானவராக இருக்கலாம். ஆனால், எனக்கு இடைஞ்சல் செய்யவில்லை.

சண்டை நடந்த காலத்தில்தான் யாழ்ப்பாணத்தில் அடிக்கல் நட்டு நீதிமன்றத்தையும் திறந்தோம். மன்னார், திருகோணமலை உட்பட்ட பகுதிகளிலும் சண்டை நடந்த காலத்தில்தான் நீதிமன்றங்களைத் திறந் தோம். திறந்ததோடு சரி. பின்னர் நான் அங்கு செல்வ தில்லை. அந்த நீதிபதிகளுக்கு அவர்களின் பொறுப்பைக் கொடுத்துவிடுவேன். பிரச்சினை வந்தால் மட்டும் என்னி டம் கூறுங்கள் என்பேன்.

சில சமயங்களில் அவர்களிடையே முரண்பாடுகள் ஏற்படும். அப்போதும் நான் அதில் தலையிடாமல் அவர் களையே அதை தீர்த்துக்கொள்ளுமாறு கூறுவேன். அந்தத் திட்டம் நல்லது. பிரச்சினை அவர்களுக்குள்ளேயே தான் இருக்கும். ஜனநாயக அடிப்படையில் பிரச்சினை களை தீர்த்துக்கொண்டு அவர்கள் இருப்பார்கள். அதுதான் எனது நிலைப்பாடு.

இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இதனை நான் வலியுறுத்தினேன். நான் தெளி வாக ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்தேன். அவரு டன் யாழ்ப்பாணம் சென்றேன். அவரின் செயற்றிட்டங் களை உருவாக்க நான் கடும் சிரமப்பட்டேன். அதனை ஏற்றுக்கொண்டு அந்தப் பகுதிகளில் அவருக்கு கணி சமான வாக்குகள் கிடைத்தன. அவரை கைதுசெய்த பின்னர் எனக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. ஜனாதிபதித் தேர்த லுக்கு பின்னர் 12 நாள்கள் மட்டுமே அவர் சுதந்திர மாக இருந்தார். அந்த கைது சம்பவத்தை அடுத்து அதற் கெதிராக ஆவணங்களை தயாரிப்பது, பகிரங்கமாக கருத் தரங்குகளுக்கு சமுகமளிப்பது என்று நான் செயற்பட்டேன்.

இது குறித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முற்றி லும் தவறானது என்றேன். இவைதான் பிரச்சினை.

இப்போது நீதிபதிகளுக்கு எதிராக செயற்பட முனைகின்றனர். நீதிச்சேவைகள் ஆணைக்குழுதான் நீதிபதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கு அரசமைப்பும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. அது நேர்மையான இடம்.

நேர்காணல்: ஆர். சிவராஜா

பகிரங்கமாக அமர்வுகளை வைத்து, ஒளிப்பதிவு செய்து ஒவ்வொருவரின் கோவைகளில் அவர்களின் குற்றச்சாட்டுக்களை வைக்கும் நியாயமான நிலைமை அதனூடாக இருக்கிறது. இரண்டரை வருடங்களின் பின்னர் என் பின்னால் வரும் நாடா ளுமன்ற உறுப்பினர்கள் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவில் போய் ஆவணங்களைப் பார்க்க வேண்டும்.

யாருக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்குமாயின், அவர் கள் இங்கு போகலாம். யாருக்கும் நான் வேண்டு மென்றே அநீதி இழைத்திருந்தால் அவர்கள் நீதிமன்றம் செல்லலாம். நாடாளுமன்றம் செல்லத் தேவையில்லை. இல்லையேல் நீதிமன்றங்களை மூடவேண்டிவரும். இப்போது எனக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் செல் லும் காலமும் முடிந்துவிட்டது. இரண்டு வருடங் களுக்குள் சென்றிருக்கவேண்டும்.

எனக்கெதிராக குற்றம் சுமத்துபவர்களில் 10 வருடங்களுக்கு முன் இருந்த நீதிபதிகளும் அடங்கு வர். அப்போது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராக இருந்தவர்தான் நீதிபதி சலாம். அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்னமும் உள்ளார். அடுத்தது சந்திரா ஜயதிலக நீதிபதி. அவர் இன்னமும் மேல்நீதிமன்றத்தில் இருக்கிறார். யாருக்கும் இதனை ஆராய்ந்தால் உண்மை தெரியும்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழு ஒருபோதும் தவறு செய்யாது. இது உயர்ந்த ஓர் இடம். இப்படியான நேர்மையான இடங்களில் உள்ள அதிகாரிகளுக்கு எதிராக நாடாளுமன்றம் செல்வார்களானால் ஒழுக்கம் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அதிகாரிகள் அஞ்சுவர்; சும்மா இருப்பர். சும்மா இருந்து வழக்குகளை ஒத்திவைத்து விட்டு வந்தால் நான் நல்ல நீதிபதி. எனது பதவிக் காலத்தில் ஒழுக் கத்தை நடைமுறைப்படுத்த, வழக்குகளை துரிதமாக விசாரிக்க, நீதிமன்ற கட்டமைப்பை மேம்படுத்த, கணினி மயப்படுத்த முயன்றேன்.

நான் சேவைகளைச் செய்தேன். மக்கள் எனக்கு அதற்காக மதிப்பளிக்கின்றனர். நாட்டில் எங்கு சென் றாலும் எனக்கு மதிப்பு உள்ளது. பாதுகாவல் போட்டுக் கொண்டு செல்லும் ஆள் நான் அல்லன். வீட்டில் கூட பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை. நேர்மையாக இருந்ததால்தான் இப்படி இருக்கிறேன். தேடிப்பார்த்து ஒன்றும் கிடைக்காததால் இப்படி வருகின்றனர். நான் லஞ்சம் வாங்கியதாக கனவிலும் கூடக் கூறமுடியாது. யாருக்கும் அநீதி இழைத்தவன் என்றும் கூறமுடி யாது. ஆனால், தண்டனைகள் கொடுத்திருப்பேன். அதுவும், விசாரித்து வழக்குகளுக்குத் தீர்ப்பெழுதி தான் அவை கொடுக்கப்பட்டிருக்கும்.

தண்டனை கொடுக்காமல் நீதிபதிகள் இருக்க முடியாது. அநீதி இழைக்கப்பட்டால் நீதிமன்றம் செல்ல வேண்டும், என்மீது குற்றம் சுமத்துபவர்கள். நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு எதிராக அடிக்கடி நீதி மன்றம் சென்றிருக்கின்றனர். அதில் தடையில்லை. நான் பிரதம நீதியரசராக இருந்தபோது எனக்கு எதிராக 5 வழக்குகள் தொடுக்கப்பட்டன. அவை விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட்டன. பிரதம நீதியரசர் என்பதற்காக வழக்குத் தொடராமல் இருக்க முடியாது.

*(வடக்குக் கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரித்து வாங்கிய தீர்ப்புச் சரியானதா? பதிலை நாளை எதிர்பாருங்கள்)*



## குடும்பத்தில் பெற்றோரின் பங்கு அவசியம்



மாணவருக்காக நடைபெற்ற பயிற்சி முகாம் ஒன்றில் மாணவர்கள் மனதில் உள்ள அழுத்தங்களை, பிரச்சினைகளை வெளியிட்டுச் சொன்ன போது பலரும் ஆசிரியர்கள் நடந்துகொள்ளும் முறைகளைக் கண்டு வருகிறார்கள். பெற்றோரின் அணுகுமுறைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

மாணவர்கள் சொல்வதை நூற்றுக்கு நூறு அப்படியே நான் ஏற்று, பெற்றோரையும் ஆசிரியையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த முடியாது. சிறுபிள்ளைகள் அதிக உணர்ச்சி உடையவர்கள்... கண்மூடித்தனமான பிடிவாதம், ஆபத்தான சுதந்திர உணர்வு, விளையாட்டுத்தனம் காரணமாகப் பெற்றோர்களின் நியாயமான கட்டுப்பாடு கூட அவர்களுக்கு அடிமைத்தனமாகவே தோன்றும் என்பதை உணருகின்றேன். ஆனால் அவர்கள் வருத்தத்தைப் புறக்கணிக்கவும் முடியாது. பெருவாரியான பெற்றோர்கள் தங்களைப் பிள்ளைகள் கேள்விகள் கேட்பதையே விரும்புவதில்லை. தானும் சிந்திப்பதில்லை. தன் பிள்ளைகள் சிந்திப்பதையும் விரும்புவதில்லை. இது வீட்டுக்கும் நாட்டுக்கும் நல்லதல்ல.

இந்தத் தலைமுறை காரண காரியங்களை எதிர்பார்க்கும் இயல்பினர். முழுக்க முழுக்க கேள்வி பதிலான ஆங்கிலக் கல்வி முறையால் உருவாக்கப்பட்டவர்கள். Blind Faith எனப்படும் பழைய இந்திய பாணியை அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. நாம் சொல்வதைப் பிள்ளைகள் கேட்டே தீரவேண்டும் என்று எதிர்பார்க்கும் பெற்றோர்கள் பிற்காலத்தில் வெகுவாக அவமானப்பட நேரும். பிள்ளைகளின் எதிர்பார்ப்பைப் புரிந்துகொள்வதும், அது சரியல்ல, எல்லை மீறியது என்றால் அதைப் பிள்ளைகளுக்குப் புரிய வைப்பதுதான் சரியான பெற்றோர் நிலை. தமது எதிர்பார்ப்பையும் பிள்ளைகளிடம் விளக்கி ஏற்கச் செய்வதும், அவர்களது சௌகர்ய அசௌகர்யங்களை உணர்ந்து நியாயமாகத் தான் மாறிக்கொள்வதும் அவசியம்.

பொறுப்பின்மை, சோம்பேறித்தனம், அலட்சியம், அக்கறை இன்மை, விளையாட்டுத்தனம் காரணமாகக் கடமை தவறும் பிள்ளைகளைக் கண்டிப்பதோ கட்டாயப்படுத்துவதோ அடக்குமுறை ஆகாது. சிலைக்கு வலிக்குமே என்று சிற்பி வருந்தினால் சிற்பம் பிறக்காது. வலி சிலைக்கு மட்டுமல்ல. செதுக்குகிற உளிக்கும் வலிதான் என்று சிற்பத்திடம் சொல்லிவிட்டு சிற்பி தொடர்ந்து செதுக்க வேண்டும்.

நாலு வயதில் பாபி என்ற செல்லப்பெயரில் அழைக்கப்பட்ட தோமஸ் அல்வா எடிசன் மிகவும் படிக்கமாட்டாதவன். ஆனால் அவன் அம்மாவின் ஓயாத போராட்டமே அவனை அறிவாளி ஆக்கியது. உலகப் புகழ்பெற்ற செஸ் வீரன் ஆனந்தை எதிர்த்து செஸ் ஆடியே உயர உயர வளர்த்தவர் அவரது அன்னை. தாய்தான் எல்லா உயிர்க்கும் முன்னோடி. அம்மாவின் இடத்தைப் பாட்டியால் மட்டும் நிரப்ப முடியும். அம்மாவுக்குச் சரியானவர் பாட்டி மட்டுமே! ஓஷோ என்கிற ஆசார்ய ரஜனீஷின் லட்சியக் கிழவி அவரது பாட்டியே!

ஐரோப்பிய மற்றும் அமெரிக்க பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய சுதந்திரம் தருவதுடன் அக்கறை காட்டுவதும் குறைவு. பிரச்சினைகள் பல்வேறு வடிவில் இருக்கின்றன. பெற்றோர்களின் வேகமான விவகாரங்கள் காரணமாகப் பிள்ளைகள் குழப்பமடை கின்றனர். தன் தாயின் புதிய கணவனுக்கும் தமக்கும் எந்தச்சம்பந்தமும் இல்லை என்பதால் அப்பா என்ற ஸ்தானமே அங்கு பல இடங்களில் அப்பாவின் புதிய பெண் தொடர்பை, எந்த மகளும் மகனும் மதிக்கமுடியாததால் அம்மாவில் அங்கே வெறுமை விழுந்து விடுகிறது. அப்பாவின் பெண் நண்பர் அம்மா என்கிற இடத்தை நிரப்ப முடியுமா?

அப்படிப்பட்ட வேறு கணவன், வேறு மனைவி, வேறு வேறு நபரின் வேறு வேறு பிள்ளைகள் என்கிற வாழ்வியல் ஒட்டுறவற்ற, குடும்ப அமைப்பு மேற்கே உருவாகிவிட்டது. இந்தியாவிலும் இப்போது ஆரம்பமாகி உள்ளது. பிள்ளைகளுக்கு மறைத்து வேறு ஆணுடன், வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கும் குற்ற உணர்வுடைய தாய், தந்தை இங்கேயும் வந்து விட்டது. இவை எல்லாம் ஆரோக்கியமான குடும்ப வாழ்விற்கு நல்லதே அல்ல. இத்தகைய மேற்கத்தைய வாழ்வியலை இங்கும் இறக்குமதி செய்தே தீருவது என்று ஒரு சில மூடர்கள் வேறு தீவிரமாகச் செயற்படுகிறார்கள்! என்ன செய்ய?

பிள்ளைகளை நன்கு வளர்க்க நினைக்கும் பெற்றோர்கள் என்ன செய்ய வேண்டும். தங்களை நல்ல நண்பர்களாக, வேண்டிய நபராகப் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளும் படி நடந்துகொள்ள வேண்டும், பேச வேண்டும், உரையாட வேண்டும், எவ்வளவு நேரம் பிள்ளைகளுடன் உரையாட செலவிட முடியுமோ அவ்வளவுஅதிகமான நேரம் பிள்ளைகளுடன் செலவிட வேண்டும். பிள்ளைகளைப் பற்றி யாராவது ஏதாவது குறைசொன்னால் அதை அப்படியே நம்புவதும், அதை மனதில் மறைத்துக்கொண்டு பிள்ளைகளை குத்திக்குத்தி ஜாடை மாடையாகப் பேசுவதும் அசட்டுத்தனம்.

இன்னொரு அதிசய அப்பாவைச் சொல்லவா. மகன் புகைப்பிடிப்பது தெரிந்தும் தனது அறைக்கு அழைத்தார். விலை உயர்ந்த சிகரெட்டை வாங்கி கொடுத்து புகைப்பிடிக்கச் சொன்னார். தயங்கினான், விலை குறைந்த சிகரெட்டுக்களின் தீமையையும் விலை கூடிய சிகரெட்டுக்களில் உள்ள தீமைக்குறைவையும் விளக்கினார். அத்தோடு நிற்கவில்லை சிகரெட்டால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி விளக்கும் புத்தகம் வாங்கிக்கொடுத்தார். நல்ல பலன் விளைந்தது மகன் மாறிவிட்டான்.

பிள்ளைகளை வழிக்குக் கொண்டு வர நினைக்கும் சில பெற்றோர்கள் பிள்ளைகள் மிக மென்மையாக, மேன்மையாகக் கருதும் விடயங்களில் பாய்ந்து கபளீகரம் செய்வார்கள். இது அநாகரீகம்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 நவம்பர் 2011 திங்கட்கிழமை



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. இதில் ஆசிரியர்களின் வில்லுப்பாட்டு இடம்பெறுகிறது. (ம- 121)

# சித்தர்கள் காட்டிய வழியில் சென்றால் எவருக்கும் தீங்கிழைக்காது வாழலாம்

## நூல் வெளியீட்டு விழாவில் குமாரசாமி ஐயர்

சுன்னாகம்,நவ.14

சித்தர்கள்,மகான்கள் காட்டிய வழியில் பயணித்தால் எவருக்கும் எந்தக் கெடுதலும் செய்யாமல் நல்வாழ்வு வாழ முடியும் என்று தெரிவித்தார் சிவானந்த வாரிதி சிவத்திரு.வ.குமாரசாமி ஐயர்.

இவரால் எழுதப்பட்ட ஈழத்துச் சித்தர் வரிசையில் மௌன குரு கடவுள் சுவாமிகள் என்ற நூலின் வெளியீட்டு விழாவும், ஜீவமுக்தியடைந்த சிவபாக்கியம் அம்மையாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் உடுவில் அம்பலாணர் வீதியிலுள்ள கடவுள் சந்நிதியில் அண்மையில் நடைபெற்றது.

நில அளவையாளர் ஆ.தங்கமயில் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பதிலுரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு உரையாற்றும் போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

சித்தர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி இதுவாகும். இந்தப் பூமியில் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைச் சித்தர்கள் நமக்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையே சமூகத்துக்கான சிறந்த செய்தியாகும். அவர்களைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள் சமூகம் மதிக்கும் பெரியவர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

அவர்களின் போதனைகளை உள்வாங்கிச் செயற்படுவோமானால் நாமும் சிறந்த பிரஜைகளாக உருவாக முடியும்.

மௌன குரு கடவுள் சுவாமிகள் சந்நிதி முருகன் ஆலயச் சூழலில் வாழ்ந்த ஒரு மகான். அவருடைய சீடர்களில் நான் உட்படப் பலர் இன்றும் இருக்கின்றனர். அவரது போதனைகள் எக்காலத்துக்கும் நின்று நிலைப்பனவாகும். அதை எதிர்கால சந்ததி அறிய வேண்டும் என்ற விருப்பிலேயே இந்த நூல் ஆக்கப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்வில் ஆசியுரையை உடுவில் மீனாட்சியம்பாள் ஆலய பிரதம குரு சி.முத்துக் குமாரசாமிக் குருக்களும், வெளியீட்டுரையை திருமதி விஜய ரகுநாதனும், மதிப்பீட்டுரையை இந்து கலாசாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவ. மகாலிங்கமும் நிகழ்த்தினர். (ம- 38)

# சிறுவர்களின் பாதுகாப்பு என்பது இன்று கேள்விக்குரியதாகி விட்டது

## சுழிபுரம் பிரதேச சபை உறுப்பினர் உரை

யாழ்ப்பாணம், நவ.14

அரை மணி நேரத்துக்குள் சர்வதேச ரீதியில் 10 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம் பெறுகின்றன. அந்தளவுக்கு இன்று சிறுவர்களுக்கான பாதுகாப்பான நிலை என்பது மாறிவிட்டது.

இந்த நிலை தொடர்பாக ஐ.நா. நிறுவனங்களும் ஐ.நா. சிறுவர் முகவராண்மை நிறுவனங்களும் ஆராயத் தொடங்கியுள்ளன.

இவ்வாறு வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

அராலி குடும்ப முன்பள்ளி கண்காட்சியும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்வுகளும் அராலி தெற்கு கிராம முன்னேற்ற சங்கத்தில் இடம்பெற்றது.

அராலி முன்பள்ளி குடும்ப முன்னேற்ற சங்கத் தலைவி திருமதி சத்தியசீலன் சிவரஞ்சினி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் கண்காட்சி கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்- தலைவியர். முன் பள்ளியில் இடப்படும் கல்வி எனும் உரமானது அவர்களை எதிர்கால சிற்பிகளாக மாற்றும் வல்லமை கொண்டது.

எனவே இன்றைய இளம் சமுதாயம் நல்ல முறையில் வளரவும் அவர்களுக்கான கல்வியூட்டல்களை வழங்கவும் ஆசிரியர்கள் தம்மைத் தயார்ப்படுத்தி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் அராலி சரஸ்வதி மகா வித்தியால்ய அதிபர் மா.சோமசேகரம், வலி. மேற்குப் பிரதேச சபை அதிகாரி நா.அருணகிரிநாதன், சமுர்த்தி அதிகாரி க.தர்சனன் ஆகியோரும் உரையாற்றினர்.

அராலி குடும்ப முன்பள்ளி மாணவர்களின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ம- 302)

# தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவு

கொழும்புத்துறை, நவ.14

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர் வி.ரி.சகாதேவ ராஜா (அம்பாறை மாவட்டம்), பொதுச் செயலாளர் சராபுவனேஸ்வரன் (யாழ்.மாவட்டம்), நிதிச் செயலாளர் சி.தேவகுமாரன் (வலிகாமம்), நிர்வாகச் செயலாளர் மு.தயானந்தன் (மட்டக்களப்பு மாவட்டம்), பிரசார செயலாளர் ஏ.மடுத்தீன் (மன்னார் மாவட்டம்), பத்திரிகைச் செயலாளர் சு.உதயகுமார் (வவுனியா மாவட்டம்), கல்வி சாரா செயலாளர் திருமதி தயாநந்தினி (புத்தள மாவட்டம்),

துணைத் தலைவர் எஸ்.கே. சண்முகலிங்கம் (தீவகம்), சு.பாலசுப்பிரமணியம் (மலை யகம்), திருமதி சறோயா இராம நாதன் (திருமலை) திருமதி சிவமணி கிருபாகரன் (மட்டக் களப்பு).

துணைப் பொதுச் செயலாளர்கள் பொ.அருணகிரிநாதன் (தீவகம்), சி.தனஞ்செயன் (கொழும்பு), திருமதி சரஸ்வதி பாலசுப்பிரமணியம் (மலையகம்).

துணைநிதிச் செயலாளர்கள் அ.ஜெயக்குமார் (சங்கானை), செல்வி வளர்மதி சங்கரலிங்கம் (உடுவில்).இவர்களுடன்16ஆட்சி மன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-135)

# கலைப் பருதி விருது வழங்கல்

பருத்தித்துறை, நவ.14

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜுக்கு இவ்வாண்டுக்கான கலைப்பருதி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை இவ்வாண்டுக்கான கலைப் பருதி விருதை வழங்கிக் கௌரவிப்பதற்காக ஐந்து கலைஞர்களைத் தெரிவு செய்தது.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ், நா.கிருஸ்ணபிள்ளை, சி.சிவநேசன், து.குலசிங்கம், ந.தேவதாஸ் ஆகியோர் கலைஞர்களுக்கான கலைப் பருதி விருதை அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்ற பிரதேச பண்பாட்டுப் பெருவிழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் வழங்கினார். (ம-190)

# சமுர்த்தி சிறுவர் கழகங்களின் இலக்கிய, கலாசாரப் போட்டி முடிவு

யாழ்.மாவட்ட சமுர்த்தி கெக்குழு சிறுவர் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற இலக்கிய மற்றும் கலாசாரப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:

**பாடல் - தனி**

பிரிவு- 5-9- யாழ்ப்பாணம், பி.சுலக்சன், சண்டிலிப்பாய்- ஜெயக்குமார் தமஸ்வினி, மருதங்கேணி- கே.விபுதா.

பிரிவு - 10- 14 - சங்கானை பா.வேனுகா, சண்டிலிப்பாய் - ஜெயக்குமார் யதுசிகா, யாழ்ப்பாணம்- ப.ஜனுசன்.

பிரிவு- 15-18- சண்டிலிப்பாய் - நவரத்தினராசா தர்சிகா, கரவெட்டி - சின்னராசா கீர்த்திகா, சங்கானை- ப.விஜிதா.

**நாட்டார் நடனம்**

பிரிவு- 5-9 - சண்டிலிப்பாய் - அஸ்வின்.

பிரிவு- 10-14- சங்கானை - சுழிபுரம் மேற்கு, சண்டிலிப்பாய் - அஸ்வின், யாழ்ப்பாணம்- வண்ணார்பண்ணை.

பிரிவு- 15-18- சங்கானை- சுழிபுரம் மேற்கு, சண்டிலிப்பாய்- மலரும் மலர்கள், யாழ்ப்பாணம்- சிறாம்பியடி.

**பேச்சு**

பிரிவு- 5-9- கரவெட்டி சிவரவீந்திரன் துவாரகன், சண்டிலிப்பாய்- கீலர் அஜிந்தன், வேலணை - மோகனேஸ்வரன் மாதுரி, யாழ்ப்பாணம் - பி.டினேஜா.

பிரிவு- 10- 14 - சங்கானை- வே.கீர்த்தனா, சண்டிலிப்பாய்- இரத்தினசிங்கம் நளாயினி, வேலணை- உதயநேசன் நிரோஜா.

பிரிவு- 15-18- சங்கானை - மு.கோபிதா, சண்டிலிப்பாய்- தமிழ்செல்வன் தர்சிகா.

**அறிவிப்பு**

பிரிவு- 5-9- சண்டிலிப்பாய்- பரமேஸ்வரன் பானுஜா.

பிரிவு- 10-14- சங்கானை- ம.பிரணவன், சண்டிலிப்பாய்- பரமேஸ்வரன் துலக்சன், யாழ்ப்பாணம்- ஜோ.பகீரதன்.

பிரிவு- 15-18- யாழ்ப்பாணம் அ.ஜீசஸ் றொக்கின்சன், சண்டிலிப்பாய்- இராசசிங்கம் அனுஸ்மாலா.

**ஓவியம்**

பிரிவு- 5-9- யாழ்ப்பாணம்- ம.வர்ஜினி, சங்கானை- ய.கரிஸ்சிகன், மருதங்கேணி- கே.விபுதா, யாழ்ப்பாணம்-சி.பிரசாந், வேலணை- லிங்கேஸ்வரன் ரக்சன்.

பிரிவு- 10-14- சண்டிலிப்பாய் - ராதா டவின்சன், யாழ்ப்பாணம்- ஜெ.கரல் டமில்டன், சங்கானை - சி.திலக்சன்.

பிரிவு- 15-18- சண்டிலிப்பாய் - ச.சுஜீகரன், கரவெட்டி- செல்வராசா தர்சன், சங்கானை - கு.கபில்ராஜ்.

**குழு நடனம்**

சங்கானை - சுழிபுரம் மேற்கு, சண்டிலிப்பாய் -பிள்ளைநிலா.

**சிறுவர் கதை**

பிரிவு- 5-9- சங்கானை- ஞா.பிரகலாதன், சண்டிலிப்பாய் - தயாபரன் சதுசன்.

பிரிவு- 10- 14- கரவெட்டி- தவச்செல்வம் லக்ஷனா, சண்டிலிப்பாய் - குலோசன் கம்சவதனி, சங்கானை - கு.இந்துஜா.

பிரிவு- 15- 18- கரவெட்டி- மகேஸ்வரன் பேசிஷாளினி, சங்கானை - எஸ்.சொரூபிகா, வேலணை- இராசநாயகம் இந்துஜா. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படலை இல்லாத சுடலையில் பலதும் நடக்கிறது





சங்கானைப் பிரதேசத்தில் சங்கானை கரைச்சி இந்து மயானம் ஒதுக்குப் புறமான இடத்தில் அமைந்துள்ளது. இங்கு இந்து மற்றும் கிறிஸ்தவர்களுக்கென தகனம், அடக்கம் செய்யப்படும் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்குச் செல்லும் மக்கள் இந்த மயானத்தின் பாதையைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தனர். இப்பாதையை வேல்ட் விசன் நிறுவனம் புனரமைத்து கொடுத்தது.

மயானக் கிணற்றுக்கு அருகில் அமைந்துள்ள வைரவர் ஆலயம் சேதமடைந்திருந்ததை அவதானித்த அகாலமரணமடைந்த சங்கானை வெல்வில் முருகமூர்த்தி ஆலயப் பிரதம குருவின் பிள்ளைகள், இப்பாதை ஓரம் புதிய வைரவர் கோயிலையும் அமைத்திருந்தனர்.

இது இவ்வாறிருக்க, இந்தப் பாதைக்குச் சமாந்தரமாகவும் ஆனால் இப்பாதையை சந்திக்கு மாறும் ஒரு புதுப் பாதை வலி. மேற்கு பிரதேச சபையால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பாதையை அமைப்பதற்கு சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கத்தால் கடந்த 15 வருடங்களுக்கு முன் நடப்பட்டு, வடலியாக உள்ள 50 இற்கும் மேற்பட்ட வடலிகள் தறிக்கப்பட்டதோடு, அதனை எரித்தும் உள்ளனர். அவற்றை எரிக்கும் போது மேலும் 25 இற்கும் மேற்பட்ட வடலிப் பனைகள் கருகிப் பயன்பெற முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு பாதை புனரமைக்கப்பட்டு பாவனையில் இருக்கும் போது புதிய பாதை போடப்பட வேண்டியதன் அவசியம் என்ன? இதற்கான அனுமதியை வழங்கியவர்கள் யார்? ஏன்? எதற்காக? என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உள்ளூர்த் தேர்தல் முடிந்த பின் வலி.மேற்குப் பிரதேச சபை முன்னைய செயலாளர் நிர்வாகத்திலிருந்து சபைத் தலைவரின் பொறுப்புக்கு வந்துள்ளது. இந்த நிலையில் புதிதாக அமைக்கப்பட்ட பாதையில் இரும்புக் கம்பியிலான ஓர் வளைவு அமைப்பதற்கு வளைவு அத்திபாரம் போடப்பட்டு வளைவு அமைக்கும் முயற்சியில் பிரதேச சபை ஈடுபட்டுள்ளது.

இந்த மயான வளாகத்துள் ஒரு கொல்களம் பிரதேச சபையால் அமைக்கப்பட்டு மாடுகள் வெட்டப்பட்டு வருகின்றன. இக்கொல்களத்தில் வெட்டப்படும் மிருக எச்சங்கள் இந்த மயானம் முழுவதும் பரவப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி துர்நாற்றம் வீசுவதனால் மயானத்துக்குச் செல்வோர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மயானத்தில் ஒரு கிணறு மயானத்துக்கு இறுதிக் கிரியைகள் செய்யவரும் மக்களின் பாவனைக்காக உள்ளது. இக் கிணற்று நீரை எவருமே பாவனை செய்ய முடியாத நிலையில் உள்ளது. கொல்களத்தில் வெட்டப்படும் மிருக எச்சங்கள் உட்பட பாசிகள் நிறைந்து மனித பாவனைக்குதவாத நிலையில் கிணறு உள்ளது.

இதனால் இறுதிக்கிரியைகளின் பின்னரான கிரியைகளை செய்யச்செல்வோர் பெரும் சிரமம் அடைகின்றனர்.

பிரதேச சபையினரிடம் இது பற்றி கேட்டபோது:

மாதம் இரு முறை இந்தக் கிணறு இறைத்துத் துப்புரவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் பொது மக்கள் தமது தண்ணீர் தேவையை இந்தக் கிணறு மூலம் நிறைவேற்ற முடியாமலும் உள்ளனர்.

மயானத்துக்குச் செல்லும் பாதை ஓரம் கொட்டிக் குவிந்துள்ள குப்பைகள் ஒருபுறம் துர்நாற்றம் வீசுகிறது.

நரகத்தில் நிற்கும் எண்ணமே இங்கு செல்லும் போது தோன்றுவதாக மக்கள் கூறுகின்றனர். வலிமேற்குப் பிரதேச சபை மக்கள் மயப்படுத்தப்பட்ட பின்பும் ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது. பிரதேச சபையினரே இதற்கான தங்களின் பதில் என்ன? நடவடிக்கைகள் என்ன? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

**சங்கரன், சங்கானை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## கேள்வி அறிவித்தல் - 2012

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக்கடைகளினை 2012 ஆம்ஆண்டுக்கு (01.01.2012- 31.12.2012 ) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும்திகதி : 14.11.2011 28.11.2011
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 29.11.2011 ந.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி: 29.11.2011 பி.ப 02.00 மணி

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை “ தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்” எனும் முகவரிக்கும் இணைப்பிரதியை “பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்” எனும் முகவரிக்கும் எதிர்வரும் 29.11.2011 ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

| இ. விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம்(வரி, நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(வரி , நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வரி,நீங்கலாக) | மாதாந்த வாடகை (வரி , நீங்கலாக) |
|---|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 10,000.00 | 3,531,000.00 | |
| 02 அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 193,000.00 | 500.00 |
| 03 அச்சுவேலி கோழியிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 25,000.00 | 500.00 |
| 04 அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 42,000.00 | 500.00 |
| 05 வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 54,000.00 | |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01 புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 90,000.00 | 500.00 |
| 02 புத்தூர் பொதுச்சந்தை | 500.00 | 2000.00 | 116,000.00 | |
| 03 புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 500.00 | 8,500.00 | 500.00 |
| 04 ஆவரங்கால் பொதுச் சந்தை | 500.00 | 1000.00 | 23,000.00 | |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | | |
| 01 நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 45,000.00 | 500.00 |
| 02 நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 நீர்வேலி மீன் சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| 04 நீர்வேலி பொதுச் சந்தை | 300.00 | 1000.00 | 10,000.00 | |
| **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01 கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 90,000.00 | 500.00 |
| 02 கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| 03 இருபாலை சந்தி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 300,000.00 | 500.00 |
| 04 இருபாலை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1000.00 | 20,000.00 | 500.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01 உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 105,000.00 | 500.00 |
| 02 உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 68,000.00 | 500.00 |
| 03 உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 35,000.00 | |
| 04 ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 56,000.00 | 500.00 |
| 05 ஊரெழு ஆட்டிறைச்சிக்கடை (இடத்தை தாங்கள் ஒழுங்கு செய்தல்- பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன்) | 500.00 | 1000.00 | 20,000.00 | |

01 சந்தையிலிருந்து ஒரு கிலோமீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடைசெய்யப் பட்டுள்ளது.

02 கேள்விப்பத்திரங்களைப் பெறவிரும்புபவர்கள்தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் தலைமை அலுவலகத்துக்கு சமுகமளிக்க வேண்டும்.

03 கேள்விப்படிவக் கட்டணம்,கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு 12% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.

04 உள்ளூராட்சி மன்றங்களினால் “ தவறுநராக” கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

05 இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல்வேண்டும்.

06. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்தகேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

07 கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோஅவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

08 கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், புத்தூர்.
11.11.2011

(சி/5731)(3,6,7)

[illegible],
தவிசாளர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திதி: அமிர்த சித்தம்

இன்று (14.11.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக் கிருத்தியத்திலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி
**சின்னத்தம்பி பொன்னம்மா**

அன்னை மடியில் 10.05.1932
ஆண்டவன் அடியில் 15.10.2011

தி.தெய்வநாயகி குடும்பம்.
(ராணி - மகள்)
இ.தில்லைநடராசா
காளி கோயில் வீதி,
கொடிகாமம்.

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலிகள்



செல்வன்
**தருமலிங்கம் பாலச்சந்திரன்**

திதி:2011.11.14
(சதுர்த்தி)
மனம் மகிழல்
24.10.1970
மனம் நெகிழல்
11.11.1995

இல்லத்தின் சுடர் விளக்காய் ஒளி வீசிய சந்திரா - நீ
இன்று எமைப்பிரிந்து பதினாறாண்டுகள் ஆனதடா
எம் உள்ளத்தில் உன்னை அணையா விளக்காக
என்றென்றும் நிலையாக போற்றியே வாழ்வோமடா
உன் ஆத்மா சாந்தி பெற எம் இதய அஞ்சலிகள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உம்பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, தம்பி,
தங்கை குடும்பம்.

நி.மு:நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
த.மு: கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(10337) (4-6-7)

# கட்டடப் படவரைஞர்களைப் பதிவு செய்தல்
# துணுக்காய் பிரதேசசபை

துணுக்காய் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள / திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ள கட்டடங்களுக்கான வரைபடங்களை வரைவதற்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தகைமைகள்**

1. NDT/NCT9 (சிவில்) சான்றிதழ் அல்லது NDT / NCT (drafment) சான்றிதழ் பெற்றவர்கள். அரச அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமை புரியும் தொழில்நுட்ப அலுவலர்கள்/ படவரைஞர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.
2. பதிவுக் கட்டணமாக ரூபா ஆயிரத்து ஐநூறு செலுத்துதல் வேண்டும் (1500)
3. பிரதேசசபையினரால் எடுக்கப்படும் முடிவுகளுக்குக் கட்டுபட்டு செயற்படுதல் வேண்டும்.
4. விண்ணப்ப முடிவுதிகதி 06.12.2011 விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களைச் சுயமாகத் தயாரித்து தமது மூல ஆவணப் பிரதியுடன் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுடனும் துணுக்காய் பிரதேசசபைக்கு கையளித்தல் வேண்டும். பரிசீலனைக்கு மூல ஆவணங்கள் கொண்டு வருதல் வேண்டும்.
5. ஒருவருட காலத்துக்குப் பின் தங்கள் சேவையானது புதுப்பிக்கப்படல் வேண்டும்.

தலைவர்
பிரதேசசபை,
துணுக்காய்.

(சி/ 5721) (4-6-7)

# வல்வெட்டித்துறை நகரசபை
# ஆதனவரி அறிவித்தல்


நகர சபை எல்லைக்குட்பட்ட தற்போதைய குடியிருப்பாளர்கள் அனைவரும் தாம் இருக்கும் ஆதனத்துக்கான ஆதனவரியை டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தத்தமது பெயரில் ஆதனங்கள் இல்லாவிடில் நகராட்சிமன்றத்தில் பெயர்மாற்று விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பெயர்மாற்றம் செய்யுமாறும் இதுவரை காலம் உள்ள நிலுவைகளை உடன் செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அதேவேளை குடியிருப்பாளர்கள் இல்லாதவிடத்தும் அந்த ஆதனத்தில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ குடியிருக்கும் அனைவரும் தமது ஆதன வரிகளை செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தவறும் பட்சத்தில் நகரசபை விதிகளுக்கு அமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சகல குடியிருப்பாளர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ந.அனந்தராஜ்,
தலைவர்,
நகராட்சிமன்றம்,
வல்வெட்டித்துறை.

08.11.2011 (சி/5762) (4-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலையில் வீற்றிருந்து அருள் பொழியும் தொன்மை மிகு சித்தி விநாயகர் ஆலயம்



மக்களால் வழிபடப்படும் கடவுள்களுள் முழுமுதற் கடவுளாக விளங்குவது பரமசிவம். அந்தப் பரம்பொருளை அன்புடன் வழிபடுவோர் "சைவர்" எனப்படுவர். அத்தகைய சைவம் சார்ந்த சிவனையே முதலாகக்கொள்ளும் சைவர்கள் அவரது அம்சமாக விநாயகர், முருகன் முதலிய வேறு சில மூர்த்திகளையும் வழிபடுவர். அவ்வாறு வழிபடப்பெறும் மூர்த்திகளுள் விநாயகரை அதிகளவான மக்கள் வழிபடுகின்றனர்.

விநாயகர் வழிபாடு சிறப்பாகத் தமிழகத்திலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் விரிவாக நடைபெற்று வருகின்றது. ஜப்பான், சீனா, கிரேக்கம் எகிப்து முதலிய நாடுகளில் பல்லாண்டு காலமாக விநாயகர் வழிபாடு பின்பற்றப்பட்டு வருகின்றது. சீனாவில் 'டூங்கூறங்' என்னுமிடத்தில் குரோட கோயில் மலைச் சுவரில் விநாயகர் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.

கிரேக்க நாட்டில் முறையே இரண்டு, நான்கு, எட்டுக் கைகளையுடைய விநாயகர் சிலைகள் பலவுள்ளன. அவர்கள் விநாயகரை வணங்கி செயல்களை ஆரம்பிப்பது வழக்கம். உரோமாபுரியில் விநாயகரை "ஜேனஸ்" என்ற நாமத்தில் வழிபடுகின்றனர். எகிப்தியர் விநாயகருக்கு மோதகம், பார்லி, திராட்சை ரசம் படைத்து வழிபடுவதாக பல நூல்களின் வாயிலாக அறிய முடிகிறது.

இவ்வாறு உலகெங்கும் கோயில் கொண்டு அருள் பாலித்து வரும் விநாயகரை முப்பத்திரண்டு திருநாமங்கள் கொண்டு மக்கள் அழைத்து வழிபடுகின்றனர். அவற்றுள் சித்திவிநாயகர் என்பதும் ஒன்றாகும். சித்தி, முத்தி என்பன அவரின் சக்திகள் என்பது புராணீகர் கூற்று, அடியார்களுக்கு வேண்டிய சித்திகளைக் கொடுத்து ஈற்றில் முத்திப் பேறடையச் செய்யும் இரு பெரும் சக்திகளை உடையவரென்பது இதன் பொருளாகும்.

பல்வேறு சிறப்புகளையும் அருட் கடாட்சத்தையும் தன்னகத்தே கொண்ட ஞான முதல்வன் விநாயகருக்கு சித்தி விநாயகரென்னும் திருநாமம் கொண்டு அழைத்து வழிபடும் ஆலயமொன்று அரியாலை பிரதேசத்தில் பன்னெடுங் காலமாக பக்தர்களின் வினை வேரறுத்து சித்தியுடன் சௌபாக்கியங்களும் அருளும் தலமாக விளங்கி வருகிறது.

யாழ்ப்பாணத்திலே வைதிக சைவ கலாசார விருத்திக்கு வித்திட்ட அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் கண்டி வீதி அரியாலை பார்வதி வித்தியாசாலைக்கு அருகாமையில் கம்பீரமாக அழகுறக் காட்சி தருகின்றது. இந்த ஆலயம் யாழ். குடாநாட்டிலுள்ள புண்ணிய தலங்களுள் ஒன்றாகும்.

இந்த ஆலயம் தோன்றிய காலத்தை திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டது என்று நிரூபிக்க இடமுண்டு.

"சித்தி விநாயக விக்கிரகம் இந்தியாவிலுள்ள தொண்டை நாட்டிலிருந்து யாழ்பாடியின் காலத்தில் அவரது முதலமைச்சர் சேதிராயரின் வேண்டுகோளின்படி கச்சிக்கணேசையர் என்னும் பிராமணோத்தமரால் கொண்டுவரப்பட்டது. அதுவே இப்போது அரியாலையிலுள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது போலும்" என்று யாழ்ப்பாணச் சரித்திர நூலாசிரியருள் ஒருவரான ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்பாடியின் காலம் கி.மு 2 ஆம் நூற்றாண்டென்று சில சரித்திர நூலாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். வேறு சிலர் கி.பி 10 ஆம் நூற்றாண்டென்று வரையறுத்துள்ளனர். பிந்திய கூற்றுப்படி நோக்கினும் கச்சிக்கணேசையரால் கொண்டுவரப்பட்ட சித்தி விநாயகர் விக்கிரகம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்தில் பிரதிட்டை செய்யப்பட்டது என்று துணிந்து கூறலாம்.

அந்த விக்கிரகத்தை வைத்து வழிபட்ட இடம் துல்லியமாகக் குறிப்பிடப்படா விட்டாலும் இப்போது அந்த விக்கிரகம் இருக்கின்ற அரியாலை நீர் நொச்சித் தாழ்வு சித்தி விநாயகர் கோயிலே அந்த இடம் என அபிப்பிராயப்பட இடமுண்டு.

**சோபனா**

ஏனெனில் யாழ்பாடியின் இராசதானி யாழ்ப்பாணமாக இருந்ததாலும், யாழ்ப்பாணத்தின் தென்கிழக்கேயுள்ள மணற்றிட்டுக்கள் யாழ்ப்பாடிக்கு பரிசளிக்கப்பட்டதாலும் அவரின் முதலமைச்சர் சேதிராயரால் சித்தி விநாயகருக்கு ஓர் ஆலயம் கட்டப்பட்டமையாலும் அந்த ஆலயம் யாழ்ப்பாண இராசதானியிலே அல்லது அதற்கு அயலிலே கட்டுவிக்கப்பட்டிருக்க வேண்டு

(தொடரும்)

ஓர் ஆண்டு நினைவலைகள்
அமரர்
முருகன் இராசையா
(இராசா – முன்னாள் சாரதி, இலங்கைப் போக்குவரத்துச் சபை)



பிறப்பு
02.11.1934



இறப்பு
26.10.2010

பாசத்தின் பொக்கிசமே
நேசத்தின் தோன்றலே உங்கள்
இருவிழிகள் மூடியதால் - இங்கு
பல விழிகள் கலங்கி நிற்கின்றோம்
"வசு" அப்பா என
அழைத்திருந்தோம்
வாழ்வின் பசுமையை நாம்
அறிந்திருந்தோம் உங்கள்
அரவணைப்பில்

சோடாக்கடை ஒழுங்கை,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்

(4-6-7)(8009)

மாபெரும் புத்தகக் கண்காட்சியும்
மலிவு விற்பனையும் 2011
14.11.2011 - 18.11.2011
கல்வியுலகின் தோழன் இன்று உங்களுடன்
உங்கள் இருப்பிடம் நோக்கிய பயணத்தில் இன்னொரு மைல்கல்

இடம்: கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி
காலம்: இம்மாதம் (நவம்பர்) 14, 15, 16, 17, 18 திகதிகளில்
நேரம்: காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

10% முதல் 25% வரை விலைக் கழிவுகள்




அனைத்தையும் எம் யாழ் நகர் காட்சியறையைப் போலவே உங்கள் மண்ணில் உங்கள் தெரிவுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
மிகக் குறைந்த நாள்களே ! மிக உயர்ந்த நலன் பெற்றிடுங்கள்.
என்றும் கல்விக் கடலில் முத்தெடுக்க உதவிடும்.

அல்கிரேசன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 5542,
021 567 1527
E.Mail: acdil@y.mail.com


(c/5748)(5,6,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவலைகளுடன்
## விண்ணக வாழ்வின்

# முதலாம் வருட நினைவஞ்சலி

## அமரர்
# ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ்
## (றீகன்)
## (பணியாளர் கரிதாஸ் - கியூடெக்)



மலர்வு
22.06.1982

உதிர்வு
14.11.2010

**சீவியத்தில் என்னை நேசித்தவர்களே**
**மரணத்திலும் என்னை மறவாதீர்கள்**

காற்றோடு போனது உன் மூச்சு
நேற்றென்று ஆனது உன் பேச்சு
தோற்று விட்டோம் வாழ்வில் என்றாச்சு
தேம்பி அழுவதற்கும் கண்ணீர் இல்லாமல் போச்சு

ஈரைந்து மாதங்கள் கருவறையில் நீ இருந்து
இனிய வதனமுடன் இவ்வுலகில் வலம் வந்து
ஈராறு மாதங்கள் கல்லறைக்குள் சென்று என
இம்மியளவும் நினைக்க மறுக்கிறது எங்கள் மனம்

கட்டழகான உன் தோற்றம்
காண்போரை ஈர்க்குமடா - இன்று
சட்டங்கொண்டு உன் உருவை
சாற்றும் காலமாகிப் போனதடா

கட்டி அணைப்பதற்கு துடிக்கிறது அன்னையின் கரம்
தொட்டுத்தழுவுவதற்கு ஏங்குகிறது தந்தை முகம்
முட்டிக் கதைப்பதற்கு முனைகிறது உடன் பிறப்புக்கள்
தட்டிப் பழகுவதற்கு தவிக்கிறது உன் உறவுகள்

மறைந்த உன் மலர்ந்த முகமதனை
மறுபடியும் நாம் காண்போம் என்று
மனதுக்குள் ஒரு நம்பிக்கை - நீ
மனமிரங்கி எம் முன் வருவாயோ?

ஆண்டுகள் ஆண்டாகிப் போனாலும்
ஆறுமோ எங்கள் மனம் - நாம்
தேறுதல் அடைய வேண்டுமெனில்
தெய்வமான நீ எம்மிடம் வரவேண்டும்.
வருவாயோ? றீகா...



## உன் நினைவில் கலங்கித் தவிக்கும்,

## குடும்பத்தினர்.

புலவர் வீதி ,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
T.P0212255341

அம்மா, அப்பா , ரியூறின் ஜனனி (இலங்கை)
றிச்சாட் ,சுரேக்கா (பிரான்ஸ்)
றிச்மன் , நிமலினி(டென்மார்க்)
றஞ்சித் சாளினி (ஜேர்மனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியாவுக்கு ஊழலில் பங்கு

## அத்வானி சந்தேகம்



ஜெய்ப்பூர், நவ.14

ஊழல் விவகாரத்தில் சோனியா காந்தி மௌனம் சாதிப்பது மிகவும் தவறானது. இதனால் அவருக்கும் இதில் பங்கிருக்குமோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது, என்று ஊழலுக்கு எதிராக மக்கள் விழிப்புணர்வு யாத்திரை மேற்கொண்டுள்ள எல்.கே. அத்வானி தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரான எல்.கே. அத்வானி மேற்கொண்டுள்ள ரத யாத்திரை தற்போது ராஜஸ்தானை சென்றடைந்துள்ளது. ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அத்வானி பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

சோனியாவின் இந்த மௌனம், ஊழல் ஒழிப்பின் அவரது இயலாமையைக் காட்டுகிறது. மேலும், ஊழலில் இவருக்கும் பங்கு இருக்குமோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு மாநிலம், மாவட்டங்கள், நகரங்கள் என்று மூலை முடுக்களில் எல்லாம், ஊழல் என்பது ஒரு விவாதப் பொருளாக இன்று திகழ்கிறது. ஆனால், காங்கிரஸ் தலைவர் சோனியா மட்டும் இந்த விடயத்தில் வாயைத் திறப்பதில்லை. மௌனியாக இருக்கிறார்.

ஊழலுக்கு எதிராக ஒட்டுமொத்த நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை. பிரதமரைப் பொறுத்த அளவில் சொல்ல வேண்டுமென்றால், தி.மு.க. அமைச்சர்கள் தாம் செய்தது பிரதமர் மற்றும் மூத்த அமைச்சர்களின் ஒப்புதலுக்குப் பின்னர்தான் என்று கூறுகின்றனர். இந்த விடயத்தில் சோனியா தனது மௌனத்தை உடைத்து வெளிவரவேண்டும் - என்றார் அத்வானி. (வ)

# லோக்பால் பிரேரணை நிறைவேறினால் ராகுல், சோனியாவுக்கு வாக்களிப்போம்

## வாக்காளர்கள் அதிரடி அறிவிப்பு

மத்திய அரசு விரைவில் லோக்பால் பிரேரணையை நிறைவேற்றாவிட்டால் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்களிப்பதில்லை என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

லோக்பால் பிரேரணை தொடர்பாக சோனியா, ராகுல் தொகுதி உட்பட பல லோக்சபா தொகுதிகளில் அன்னா ஹசாரே அணியினர் நடத்திய கருத்துக் கணிப்பில் பிரேரணைக்கு ஆதரவாக அதிகமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஊழலை ஒழிக்க பலமான லோக்பால் பிரேரணையை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வரும் அன்னா ஹசாரே அணியினர் தங்களின் கோரிக்கைக்கு மக்களிடம் ஆதரவு உள்ளது என்பதை நிரூபிப்பதற்காக காங்கிரஸ் தலைவர் சோனியாவின் ரேபரேலி தொகுதி, ராகுலின் அமேதி தொகுதி உட்பட பல லோக்சபா தொகுதி மக்களிடம் கருத்துக் கணிப்பை நடத்தினர். இதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

அதில் மத்திய அரசு விரைவில் பலமான லோக்பால் பிரேரணையை நிறைவேற்றாவிட்டால் தங்களின் தொகுதியின் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அடுத்த முறை வாக்களிப்பதில்லை என்று பெரும்பாலானவர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

# விமானத்தில் சென்ற கலாமிடம் அ.மெ. அதிகாரிகள் சோதனை



அமெரிக்காவுக்குச் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிடம் பாதுகாப்பு என்ற பெயரில் அவரிடம் சோதனை நடத்திய அதிகாரிகள் கலாமின் கோட் மற்றும் காலணி என்பவற்றை எடுத்துச் சென்று எதுவுமில்லை என்ற பின்னர் மீண்டும் திருப்பி ஒப்படைத்தனர். இந்த சம்பவம் குறித்து மத்திய அரசு கடும் அதிருப்தியையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இது குறித்து உயர் அதிகாரிகள் வட்டாரம் தெரிவிக்கையில் கடந்த செப். மாதம் 29ஆம் திகதி அப்துல் கலாம் அமெரிக்கா சென்றிருந்தார். நியூயோர்க்கிலுள்ள ஜான் எப் கென்னடி விமான நிலையத்தில் இந்திய விமானம் தரையிறக்கப்பட்டது. இந்தநேரத்தில் அங்கு வந்த அமெரிக்க பாதுகாப்புத்துறை அதிகாரிகள் யார் இவரென்று கேட்டு தொடர்ந்து அவரிடம் சோதனை நடத்த வேண்டும் என்றனர்.

இவர் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இவரிடம் சோதனை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று உடன் இருந்த அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் அதனைக் கண்டுகொள்ளவில்லை. கலாமின் கோட் சூட் மற்றும் காலணிகளைப் பிடுங்கிச் சென்றனர். சில நிமிடங்கள் கழித்து சோதனை முடிந்தது கொண்டு செல்லுங்கள் என்று கொடுத்தனர். இதற்கு கலாம் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

மத்திய அரசு இந்த விடயத்தை மிக முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். கலாமை பொறுத்த வரையில் இதுபோன்ற அமெரிக்க அதிகாரிகளின் கெடுபிடிக்கு 2 ஆவது முறை ஆளாகிறார். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க விமானம் ஒன்று டில்லியில் இருந்து புறப்படும்போதும் இவரிடம் கெடுபிடிகள் காட்டப்பட்டன.

இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்க குடியேற்றத்துறை அலுவலகம் மன்னிப்பு கேட்டதாகவும், இது தொடர்பான மத்திய அரசு அதிகாரிக்கு அமெரிக்கா தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியிட்டுள்ளது. (வ)



ஊழலுக்கு எதிரான யாத்திரையை மேற்கொண்டுள்ள பா.ஜ. தலைவர் எல்.கே.அத்வானி ராஜஸ்தான் மாநிலத்தில் மேற்கொண்ட பயணத்தின்போது முன்னாள் முதல்வர் வசுந்தரா சிந்தியா அத்வானியைச் சந்தித்து ஆசிபெற்றார்.

# தீவிரவாதத்துக்கு தீர்வுகாண ஒன்றிணைந்து செயற்படுவோம்

## மாலைதீவில் மன்மோகன் உரை

தீவிரவாதம், மதவாதம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயற்பட முடிவு செய்துள்ளதாக மாலைதீவுகள் நாடாளுமன்றத்தில் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் பேசியுள்ளார்.

மாலைத்தீவுகளில் உள்ள அட்டு தீவில் தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் (சார்க்) 2 நாள் உச்சி மாநாடு நிறைவு பெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக மாலைதீவு சென்றிருந்த பிரதமர் மன்மோகன்சிங், அந்த நாட்டு நாடாளுமன்ற கூட்டு கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில்:

தீவிரவாதம், மத அடிப்படைவாதம், கடல் கொள்ளை, போதை மருந்து கடத்தல் உள்ளிட்ட சில முக்கிய பிரச்சினைகள், இரு நாடுகளுக்கும் சவாலாக இருந்து வருகிறது. இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக, மாலத்தீவில் தேசிய காவல்துறை பயிற்சி நிலையம் அமைவதற்குத் தேவையான உதவியை இந்தியா வழங்கும். இத் தகைய நடவடிக்கைகளின் மூலம் இருதரப்பு உறவு மேலும் வலுவடையும்.

இவ்வாறு மன்மோகன் பேசினார்.

75 உறுப்பினர்களைக்கொண்ட மாலைத் தீவுகள் நாடாளுமன்றத்தில் வெளிநாட்டு தலைவர் ஒருவர் உரையாற்றியிருப்பது இதுவே முதல் முறை. முன்னதாக, அந்த நாட்டு பிரதமர் முகமது நஷீத்தை மன் மோகன் சிங் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின் போது, மாலை தீவுக்கு 500 கோடி நிதியுதவி வழங்குவது உட்பட பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. (வ)

# 7 தனியார் பள்ளிகளின் அங்கீகாரங்கள் ரத்து

## அதிக கட்டணம் காரணமாக

சென்னையில் அதிககட்டணம் அறவிட்ட 7 தனியார் பள்ளிகளுக்கான அங்கீகாரத்தை ரத்து செய்யுமாறு மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதிகமாக பணம் அறவிட்ட தொகையைத் திரும்பப் பெற சிவில் நீதிமன்றங்கள் வழியாக நடவடிக்கை எடுக்கவும், சட்டத்தை மீறியதற்காக பள்ளி நிர்வாகிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதிககட்டணம் அறவீடு தொடர்பாக தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் கட்டண நிர்ணயக் குழுவினர் கடந்த 2 நாள்களாக விசாரணை நடத்தி வந்தனர். சுமார் 20 இற்கும் மேற்பட்ட பள்ளிகளிடம் விசாரணை நடத்தப்பட்டது.

பெற்றோர் சங்க நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணை குறித்து கட்டண நிர்ணயக் குழுத் தலைவர் நீதிபதி எஸ்.ஆர்.சிங்காரவேலு நேற்றுமுன்தினம் கூறுகையில்:

தமிழகம் முழுவதும் அதிகக் கட்டணம் அறவிட்டதாக 300 இற்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகள் மீது முறைப்பாடுகள் வந்துள்ளன. பள்ளி நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்களிடம் நடைபெற்ற விசாரணையில், சில பள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிகக் கட்டணம் அறவிட்டது தெரியவந்தது. (வ)

# அண்ணா நூலக இடமாற்றத்தை எதிர்த்து கையெழுத்து இயக்கம்

சென்னை, நவ.14

அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை இடமாற்றம் செய்யக்கூடாது என்று வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாணவர் அணி செயலாளர் இள.புகழேந்தி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

அரசியல் காழ்ப்புணர்வுடன் அண்ணா நூலகத்தை [illegible] நோக்கத்துடன் இடமாற்ற அறிவிப்பை செய்துள்ளது.

மக்கள் மற்றும் மாணவர்களின் எதிர்ப்பை அரசு தெரிந்து கொள்ளும் வகையில் எதிர்வரும் 21 ஆம் திகதி -27 ஆம் திகதி வரை ஒரு வார காலம் கையெழுத்து இயக்கம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி கல்லூரிகளிலும், பொதுமக்களிடமும் கையெழுத்துப் பெற்று, தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆளுநர் கே.ரோசய்யாவிடம் ஒப்படைக்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியா - சீனா பேச்சு மீண்டும் தொடரும்: அந்தோணி

சீனாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு சரியான தீர்வு காண அடுத்த மாதம் பேச்சு நடைபெறும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்துள்ளார்.

1962 ஆம் ஆண்டிலிருந்தே இந்தியா-சீனா வுக்கு மத்தியில் எல்லைப்பிரச்சினை இருந்து வருகிறது. முன்னதாக சீனா காஷ்மீரின் லடாக் பகுதியில் சீனா என்று எழுதியது மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

மேலும் அந்தமான் தீவுகளில் சீனாவின் கப்பல் ஒன்று உளவு பார்த்த விவகாரம், காஷ்மீர் மற்றும் அருணாச்சல பிரதேச மக்களுக்கு விசா வழங்காமல் இருப்பது, அருணாச்சலப்பிரதேசம் சீனாவுக்குச் சொந்தமானது என்று கூறிவருவது போன்ற பல்வேறு பிரச்சினைகளை சீனா எம்மிடையே வளர்த்துள்ளது.

இதற்கு சரியான முடிவு காண்பதற்காக இந்த வருட இறுதியில் சீனாவுடன் இந்தியா பேச்சு நடத்தும் என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்துள்ளார். (வ)

# மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் மருத்துவமனையில்

மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் குருதி அழுத்த நோய் காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள அவரது வீட்டில் இருந்தார். நேற்று முன்தினம் இரவு 10.30 மணி அளவில் அவருக்கு திடீர் என்று ரத்த அழுத்தம் அதிகமானது. உடனே அவரை ஆயிரம் விளக்கு அப்பல்லோ மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதன் பின்பே அவர் இயல்பு நிலைக்கு திரும்பினார். இதையடுத்து நேற்றுமுன்தினம் காலை அவருக்கு முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டது. தற்போது அவர் நலமாக இருப்பதாக அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

வாசன் மருத்துவமனையில் இருப்பது பற்றி தெரிந்தவுடன் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் மருத்துவமனைக்குச் சென்று நலம் விசாரித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சிக்கு காரைநகரில் கிளை

காரைநகர்,நவ .14

இலங்கைத் தமிழரசுக் கட்சியால் காரைநகர் பிரதேசத்துக் கான கிளைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் தலைவராக காரைநகர் களபூமியைச் சேர்ந்த மு.கந்தசாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தக் கிளைக்குழு வின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை காரை நகர் சிவகாமி அம்மன் கோவி லடி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் போராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்றது.

புதிய கிளைக்குழுவில் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:

கிளைக்குழுவின் தலைவராக மு.கந்தசாமி தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து செயலாள ராக த. முரளிரூபன், பொருளாளராக கா.தவ ராசா, உபதலைவராக க.ஆறுமுகம், உப செய லாளராக சண்முகராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் 15 பேர் கிளைக்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்துக்கு தமிழரசுக்கட்சி யின் நிர்வாகச் செயளாளர் எஸ்.குலநாய கம், மாவட்ட தலைவர் பொ.கனகசபாபதி, மற்றும் மாணிப்பாய் தொகுதி கிளைக்குழு உப தலைவர் எஸ். சுஜன் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.(ம-250)

HND in Pharmacy (2 Years)
Job guaranteed Government Recognized Pharmacy Course. Study from the Leaders of Medical Education.
Knowledge Universe
Professional Education by Graduate Professionals
No 75,Temple Road,Jaffna.
www.kugroup.info
K.U-Education -"Practical and Result Oriented." Tel:0776458253

**தவறிவிட்டது**
243, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முக வரியுடைய சத்தியநாதன் சறணியா (898002152v), சத்தியநாதன் சத்தியா (815934130v) ஆகியோ ரின் தேசிய அடையாள அட்டைகள் கொழும்புத் துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வும். 0776618190, 021 3002147.
(சி/10438) (2-6-7)

# துணுக்காய் பிரதேச சபை

## பொது சந்தை, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழி இறைச்சி கடைகளுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல் - 2012

துணுக்காய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணைகளில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | : 14.11.2011 05.12.2011 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | : 06.12.2011 ந.ப 12 மணி வரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | : 06.12.2011 பி.ப 2.00 மணி |
| கேள்வி திறக்கும் இடம் | : துணுக்காய் பிரதேச சபை அலுவலகம். |

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய் என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

### இறைச்சிக்கடை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்வி படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 28,500.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | மல்லாவி | 1,700,000.00 | 3,000.00 | 500.00 |
| 03 | கோழி இறைச்சிக்கடை | மல்லாவி | 25,000.00 | 1,500.00 | 500.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 15,000.00 | 1,500.00 | 500.00 |
| 05 | மாட்டிறைச்சிக்கடை | துணுக்காய் | 200,000.00 | 2,500.00 | 500.00 |
| 06 | கோழி இறைச்சிக்கடை | துணுக்காய் | 10,000.00 | 1,500.00 | 500.00 |

### பொதுச்சந்தை

| இல | குத்தகை வகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் | மீளளிக்கப்பட முடியாத கேள்வி படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | மல்லாவி பொதுச் சந்தையும் அதற்குட்பட்ட விற்பனை நிலையமும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | மல்லாவி | 650,000.00 | 2,500.00 | 500.00 |
| 02 | துணுக்காய் பொது சந்தையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | துணுக்காய் | 20,000.00 | 1,500.00 | 500.00 |

### நிபந்தனைகள்:

01. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல்வேண்டும்.
02 உள்ளூராட்சி மன்றங்களினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து தகுதியற்றவர்களாக கருதப்படுவர்.
03. எந்தவொரு கேள்வியும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கேட்பவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவுசெய்யப்பட்டுள்ள கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியினை அரச வரிகளுடன் 12.12.2011 ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையுடன் ஒப்பந்த மொன்றை செய்து கொள்ள வேண்டும்.
04 கேள்விப் பத்திரப் பணம், கேள்வித் தொகை, மாத வாடகை ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT), தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT ) யும் மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
05 இறைச்சிக் கடைகளுக்கான மாத வாடகை ரூபா 500.00 செலுத்தப்படவேண்டும்.
06. வியாபார உத்தரவுக் கட்டணம் செலுத்தப்படவேண்டும்.
07. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
08. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்படவேண்டும்.
09. இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்பட முன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ளவேண்டும்.
10. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வீ.இராசரத்தினம்,**
**தலைவர், பிரதேச சபை, துணுக்காய்.**
(15722)(3,6,7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு B.M.I.C.H. மண்டபத்தில் 7.11.2011 அன்று உயர் கணக்கியல் டிப்ளோமா (H.N.D.A.) பட்டம் பெற்ற
**செல்வி லீறஜா மகேந்திரநாதன்**
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்ந்திட பாராட்டி உளமார வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர்:
அம்மா, தம்பி (கஜி), அக்கா (கஜனா), அத்தான் (தீபன்).

ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (10433) (4-6-7)

## சேவைநலன் பாராட்டு



16.05.1977 இல் வங்கியில் இணைந்து 30.09.2011 அன்று ஓய்வு பெற்று 02.10.2011 அன்று அகவை 60 ஐ பூர்த்தி செய்த எமது அன்புக்குரிய இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் உதவி முகாமையாளர்
**த. இரவீந்திரன்** அவர்கள்
புவியினும் பொறுமை காட்டும் பொன் மனப் பண்பு கொண்டு
இலங்கை வங்கிக் காற்றிய கவின் மிகு சேவைபோற்றி
கடமையின் திறன் வியந்து நவில்கிறோம்
நன்றியுடன் நலம் வாழக் கோடி வாழ்த்துக் கூறி வாழ்த்துகின்றோம்

இலங்கை வங்கி, மானிப்பாய்.
விரிவாக்கற்கிளை - சங்கானை. (10431) (2-6-7)

முகாமையாளரும்,
ஊழியர்களும்.

## வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை



லண்டன் 640/=
பிரான்ஸ் 690/=
ஜேர்மனி 690/=

- 72 மணிநேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்
- எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.
- காலணைப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் அந்தியேட்டி சிரார்த்த தின அழைப்பு

கர வருடம்
15.10.2011
சனிக்கிழமைஅன்று
சிவபதமடைந்த
எங்கள்
குடும்பத் தலைவர்
**அமரர்**



**முருகேசு குருசாமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 12.11.2011 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் முகத்துவாரம் அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றன. இன்று (14.11.2011) திங்கட்கிழமை இல.75, லோரன்ஸ் வீதி, பம்பலப்பிட்டியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் காலை 11.00 - 1.00 வரையும் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.35A, வாசல றோட், தெகிவளை,
தொ.பே.0112736815

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு லீக் அமைப்பிலிருந்து சிரியா இடைநிறுத்தம்; மக்களைக் கொன்று குவிப்பதை நிறுத்தக் கோரிக்கை

கெய்ரோ, நவ. 14

அரபு லீக் அமைப்பு எகிப்தின் தலைநகரான கெய்ரோவிலுள்ள அதன் தலைமையகத்தில் சனிக்கிழமை அவசரமாகக் கூடி, சிரியாவின் உறுப்புரிமையை இடைநிறுத்தம் செய்துள்ளது. அத்துடன், அப்பாவி மக்களை கண்மூடித்தனமாக சுட்டுக் கொல்லும் குரூரச் செயலை உடனடியாகக் கைவிடுமாறு மேற்படி லீக், சிரிய இராணுத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

அரபு லீக்கின் முடிவை வரவேற்றுள்ள அநேக மேற்கத்தேய தலைவர்கள், சிரிய ஜனாதிபதி பஷீர் அல்- அஸாத்துக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் காலதாமதமின்றி கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அரபு லீக் அமைப்பின் அவசரக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க சிரியா மீது பொருளாதார, அரசியல் ரீதியிலான தடைகள் விதிக்கப்படும். அதேவேளை, தமது தூதுவர்களை உடனடியாக அழைத்துக்கொள்ளுமாறு அரபு லீக் அதன் உறுப்புநாடுகளுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது என கட்டார் பிரதமர் ஷேக் ஹமாத் பின் ஜசீம் அல்-தானி பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

சிரியா விவகாரத்தில் உடன் நடவடிக்கை எடுக்கப்படாமையை பலர் விமர்சிக்கிறார்கள். நாங்கள் விமர்சனங்களுக்கு உள்ளாகிவந்தோம். எங்கள் முடிவுகளுக்கு ஒப்புதல் வழங்க, பெரும்பான்மையையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். அது கிடைத்துவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, எமது அரபு லீக் அமைப்பு சிரிய எதிரணிக் கட்சிகளையும் சந்திக்கும் என்றும் கட்டார் பிரதமர் மேலும் தெரிவித்துக் கொண்டார். சிரியா அரபு லீக் அமைப்பிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுவிடும் என்ற அறிவித்தல் வெளியானதும், சிரிய ஜனாதிபதி பஷீர் அல் - அஸாத்தின் ஆதரவாளர்கள் ஆத்திரமேலீட்டால் வன்முறைகளில் ஈடுபட்டாகள்.

நூற்றுக்கணக்கான அஸாத்தின் ஆதரவாளர்கள், சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸிலுள்ள சவூதி அரேபிய தூதரகம், துருக்கி, பிரான்ஸ் உப தூதரகங்கள் ஆகியவற்றை தடிகள், கத்திகள், ஆயுதங்கள் ஆகியவை சகிதம் தாக்கினார்கள். இத்தூதரகங்கள் நகரின் லட்டகியா பகுதியில் அமைந்துள்ளன என பகுதி குடியிருப்பாளர்கள் ரொய்ட்டரிடம் தெரிவித்தார்கள்.

அரபு லீக் அமைப்பின் முடிவை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வெகுவாக வரவேற்றுள்ளார். சிரிய அரசுக்கு எதிராக சர்வதேச அமைப்புகள் மேலும் இறுக்கமான நடவடிக்கைகள் எடுப்பதற்கான தருணம் தற்போது வந்துவிட்டது என பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

அரபு லீக் அமைப்பு நவம்பர் 2ஆம் திகதி கூடி, சமாதான உடன்படிக்கையொன்றை உருவாக்கியது. இதற்கிணங்க அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும், வீதிகளில் குவிக்கப்பட்டுள்ள படையினரை மீளப் பெறுவதற்கும், எதிரணியினருடன் பேச்சுகளை மேற்கொள்வதற்கும் ஜனாதி பதி அஸாத் இணக்கப்பாடுகள் தெரிவித்திருந்தார்.

எனினும், அவர் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மாறாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை மென்மேலும் முடுக்கிவிட்டார். கடந்த 2ஆம் திகதி முதல் சிரியாவின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். இவற்றால் ஆத்திரமுற்று சனிக்கிழமை மீண்டும் கூடி, சிரியாவை அரபு லீக் அமைப்பு தனிமைப்படுத்தியுள்ளது.

சிரியாவில் கடந்த ஏழு மாதகாலமாக இடம்பெற்றுவரும் ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் இதுவரை மூவாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை, சனிக்கிழமை, அறுவர் கொல்லப்பட்டுள்ளனர் என எதிரணியினர் குறிப்பிட்டனர்.

## இந்து டாக்டர்கள் கொலைக்கு இம்ரான்கான் கண்டனம்

இந்து டாக்டர்கள் கொல்லப்பட்டமை பாகிஸ்தானின் துக்க நாள் என இம்ரான்கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் அசோக், நரேஷ், அஜீத்குமார் ஆகிய 3 டாக்டர்கள் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்து மதத்தைச் சேர்ந்த இவர்கள் அண்ணன்-தம்பிகள்.

இச்சம்பவத்துக்குப் பாகிஸ்தான் தெக்ரீக்-இ-இன்சாப் கட்சியின் தலைவரும், முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான்கான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, ''இந்து டாக்டர்கள் கொல்லப்பட்டமை பாகிஸ்தானின் துக்க நாளாகும். சமூக விரோதிகளை ஒடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## கரியமிலவாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த ஆஸி. நடவடிக்கை

காற்றில் கரியமிலவாயு வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் முக்கிய மசோதா, ஆஸ்திரேலியாவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உலகளவில், கரியமிலவாயு அதிகளவில் வெளியிடும் நாடுகளில், ஆஸியும் ஒன்று. அதன் பங்கு 1.5 சதவீதமாக உள்ளது. கரியமிலவாயு அதிகரிப்பால், உலகளவில் பருவநிலை மாற்றம் உருவாகிறது.

கரியமிலவாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், நாட்டின் சுற்றுச்சூழலைக் காக்கமுடியும் என்ற நோக்கத்தில், 'தி க்ளீன் எனர்ஜி ஆக்ட்' என்ற மசோதா, கடந்த மாதம் நாடாளுமன்றின் பிரதிநிதிகள் சபையில், நிறைவேற்றப்பட்டு வெற்றிபெற்றது.

இதையடுத்து, கடந்த வாரம் செனட்டில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டது. 36 வாக்குகள் இதற்கு ஆதரவாகவும், 32 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன. (எ)

# மியான்மர் இடைத்தேர்தலில் ஜனநாயக லீக் சூகி போட்டி

யாங்கூன், நவ. 14

மியான்மர் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவி ஆங் சான் சூகி, இடைத்தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளார். இதன் மூலம் மீண்டும் அவர் ஜனநாயக அரசியலில் அதிகார பூர்வமாக ஈடுபட முடியும்.

மியான்மரில் 1990களில் நடந்த பொதுத்தேர்தலில் சூகியின் தேசிய ஜனநாயக லீக் (என்.எல்.டி.) கட்சி பெரும் வெற்றிபெற்றது. ஆனால், அப்போதைய இராணுவ அரசு, அக்கட்சியினரை பதவியேற்க விடாமல் தடுத்து இராணுவ ஆட்சியைத் தொடர்ந்தது.

சூகி வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டார். இதையடுத்து, இராணுவ ஆட்சி, அனைத்துக் கட்சிகளையும் தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்துகொள்ள வற்புறுத்தியது. இதை சூகி எதிர்த்தார்.

கடந்தாண்டு நவம்பரில் நடந்த தேர்தலையும் அவரது கட்சி புறக்கணித்தது. அதனால், தேர்தல் ஆணையம் சூகி கட்சியின் அங்கீகாரத்தை இரத்துச் செய்தது.



அமெரிக்காவினதும், மேற்கத்திய நாடுகளினதும் நெருக்கடியால், கடந்தாண்டு நவம்பர் மாதம் நடந்த பொதுத்தேர்தலுக்குப் பின்னர் சில நாள்களில் சூகி விடுவிக்கப்பட்டார். இதனால், மியான்மரில் ஜனநாயக ரீதியிலான அரசியலுக்கு வழி ஏற்படும் என்ற நம்பிக்கை உருவானது.

புதிய ஜனாதிபதி தெய்ன் செய்ன், அனைத்துக் கட்சிகளும், 2008இல் இராணுவ ஆட்சி உருவாக்கிய புதிய அரசியல் சாசனத்தை கட்டாயமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கட்டாய சட்டத்தை நீக்கிவிட்டார்.

சூகி கட்சியின் செய்தித் தொடர்பாளர் நியான்வின் அளித்த பேட்டியில், ''என்.எல்.டி., விரைவில் பதிவுசெய்து கொள்ளும். எதிர்வரும் இடைத் தேர்தலில் சூகி போட்டியிடுவார்'' எனத் தெரிவித்துள்ளார்.

மியான்மர் நாடாளுமன்றில், தற்போது 40 இடங்கள் காலியாக உள்ளன. எனினும், எப்போது இடைத்தேர்தல் நடைபெறும். எந்தத் தொகுதியில் சூகி போட்டியிடுவார் என்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் வெள்ளிக்கிழமை அளித்த பேட்டியில், ''மியான்மர் உண்மையில் சில சீர்திருத்தங்களை மேற்கொண்டிருக்கிறது. ஆனால், இன்னும் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் நிறையவுள்ளன'' என்றார். (எ)

## அமெரிக்க வாழ் இந்திய நோபல் விஞ்ஞானி 89 வயதில் மறைவு

அமெரிக்க வாழ் இந்தியரும், நோபல் பரிசுபெற்ற உயிர்வேதியியல் விஞ்ஞானியுமான ஹர் கோவிந்த் குரானா (வயது- 89) நவம்பர் 9ஆம் திகதி காலமானார்.

மாஸசுஸட்ஸ் மாநிலத்தின் கான்கார்ட் நகரில் வசித்து வந்த குரானா முதுமையால் இயற்கை மரணமடைந்தார் என அவரது குடும்பத்தினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஆர்.என்.ஏ. குறித்த அவரது ஆய்வு, மருத்துவத்துறையில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. இதற்காக அவர் 1968 இல் நோபல் பரிசு பெற்றார். 1960 முதல் 1970 வரை அமெரிக்காவிலுள்ள விஸ்கான்ஸின் பல்கலைக்கழகத்தில் உயிர்வேதியியல் பேராசிரியராகப் பணிபுரிந்தார். 1970இலிருந்து பிரபலமான மாஸசுஸட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் பணிபுரிந்தார்.

இப்போது பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாகாணத்தின் ராய்ப்பூர் என்ற கிராமத்தில் 1922இல் பிறந்தார் ஹர் கோவிந்த் குரானா. இவருக்கு ஜூலியா என்ற மகளும், தேவ் என்ற மகனும் உள்ளனர்.

## ஈரான் இராணுவத் தளத்தில் குண்டுவெடிப்பு: 27 பேர் பலி!

ஈரான் தலைநகர் தெஹ்ரானுக்கு அருகிலுள்ள இராணுவத் தளத்தில் சனிக்கிழமை குண்டு வெடித்தது. இதில் 27 பேர் உயிரிழந்தனர். 23 பேர் பலத்த காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என இராணுவத் துறை செய்தித்தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

பித் கானே என்ற இடத்திலுள்ள இராணுவத் தளத்தின் அணு ஆயுத இருப்புக்கிடங்கில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. இது எப்படி நிகழ்ந்தது என்பது தெரியவில்லை என்று அந்நாட்டு இராணுவ கொமாண்டர் ஷரீப் குறிப்பிட்டார்.

ஆனால், இதை அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான ஹுசைன் மறுத்துள்ளார். அணு ஆயுதக் கிடங்கில் குண்டுகளை இடமாற்றம் செய்யும்போது அவை வெடித்தன என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

# விலைவாசி உயர்வால் பிரிட்டனில் கைவிடப்படும் செல்லப் பிராணிகள்

லண்டன், நவ. 14

மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையின் தாக்கம் விலங்குகளையும் விட்டுவைக்கவில்லை. விலைவாசி உயர்வின் காரணமாகசெல்லப் பிராணிகள்கைவிடப்படுவது பிரிட்டனில் அதிகரித்து வருகிறது என விலங்குகள் நல மையங்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதாரக் காரணங்களால் செல்லப்பிராணிகளை நல்வாழ்வு மையங்களில் ஒப்படைப்பது இரண்டு மடங்காகி உள்ளது என பேட்டர்ஸீ நாய்கள், பூனைகள் மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து எங்களுக்கு அதிக அழைப்புகள் வருகின்றன. அதிகரித்துவரும் மருத்துவச் செலவுகளே பிராணிகள் கைவிடப்படுவதற்குக் காரணம். குட்டி போடும் நிலையிலுள்ள விலங்குகளும் எங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன என்று அந்த மையத்தின் நிர்வாகி தெரிவித்தார்.

இந்த ஆண்டில் இதுவரை மட்டும் ஆயிரத்து 530 விலங்குகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் 50 சதவீதம் என்றும் புளூ கிராஸ் தெரிவித்துள்ளது.

இது உரிமையாளருக்கு வருத்தமாக இருந்தாலும், செல்லப்பிராணிகளைக் கைவிடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

பொருளாதார மந்தம்- விலங்குகள் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நலமையங்கள் அவற்றிற்கு உதவி வருகின்றன என்று ரோயல் சொசைட்டி அமைப்பு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 நவம்பர் 2011 திங்கட்கிழமை

# சிவலக்ஷன் பெற்ற 36 ஓட்டங்கள் யாழ். இந்துவை வெல்ல வைத்தன

வலி.வடக்கு, நவ.14

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீரன் சுஜீவன் ஆறு விக்கெட்டுக்களால் மகாஜனக் கல்லூரிக்கு வெற்றிவாய்ப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இரண்டாவது இனிங்கில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வீரன் சிவலக்ஷன் ஆட்டமிழக்காது பெற்ற 36 ஓட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கான வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப்பிரிவினர்களுக்கு இடையே நடைபெறும் கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் இந்துக்கல்லூரி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூரி 27.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தினேஷ் 18,கோகுல் 14 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜனுசன் 4.4 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் சிவலக்ஷன் 7 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பானுகோபன் 8 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் மதீசன் 2 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக்கல்லூரி 25.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 66 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

மதீசன் 11, சானுசன், கஜநாத் தலா 9 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த சுஜீவன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 06 விக்கெட்டுக்களையும் பிரகாஷ் 6.3 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்



களுக்கு 2 விக்கெட்டுக்களையும் முரளி 3 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 26.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுல் 17, முரளி 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்.இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சிவலக்ஷன் 6.2 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 11 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் பானுகோபன் 9 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

மதீசன், இராகுலன், ஆரங்கன் முறையே 1, 4,15 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

90பந்துகளில் 90 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்.இந்துக்கல்லூரி 12 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது.

சிவலக்ஷன், கஜானன் முறையே 36,15 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக்கொண்டதுடன் பானுகோபன் 15 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த டினேஸ், டிலக்சன் தலா 02 ஓவர்களில் முறையே 6, 9 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சிவலக்ஷன் இரண்டு இனிங்ஸிலும் முறையே 3, 4 விக்கெட்டுக்களாக மொத்தம் 07 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

## விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ.14

வடமாகாண விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் 2012 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத்துறை அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடவுள்ளதாக வடமாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார். (எ-23)

## பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதியாட்டம்



யாழ்ப்பாணம், நவ.14

யாழ். கல்வி வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

## 40 வயதுக்கு மேற்பட்டோர் உதைபந்தில் மோதவுள்ள அணிகள்

யாழ்ப்பாணம்,நவ .14

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே 40 வயதுக்கு மேற்பட்டோருக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நாளை மறுதினம் புதன்கிழமை குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பிற்பகல் 4 மணிக்கு பாசையூர் சென்.அன்ரனிஸ் (வெள்ளை) அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (எ-23)

## ஆரம்பப் பிரிவு மாணவரின் சதுரப் பெட்டிப் போட்டி; வலய மட்டத்துக்குத் தெரிவானோர் விவரம்

வலி.வடக்கு, நவ.14

உடுவில் கல்விக்கோட்ட ஆரம்பப்பிரிவு பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற நூறு சதுரப்பெட்டி போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெற்று வலிகாமம் கல்வி வலயமட்டத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**தரம் 02**

ஜீ.கஜீன்-சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப்பாடசாலை, செ.சரண்யா-ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம், உ.ஆகாஷ்-ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம், லோ.வினோஜீதா- ஏழாலை மகா வித்தியாலயம், செ.மதுமிதா-ஏழாலைஸ்ரீமுருகன்வித்தியாலயம்.

**தரம்-03**

வி.மதுஷாந்-ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, ம.ருஷாந்தன்-உடுவில் மகளிர் கல்லூரி, எஸ்.அரவிந்தன்-சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம், சு.நிவேதன்-ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், பா.தர்மிகா-இணுவில் மத்திய கல்லூரி

**தரம் 04**

வி.அபினா-சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், த.லாவண்யா-ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் சாலை, ஏ. சுகிதன்-தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, ச.கயூஜினி-ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம், கு.கனிஸ்ரன்-ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

**தரம் 5**

பா.மிசோதன்-ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாலயம், ஞா.றமாஜினி- உடுவில் மகளிர் கல்லூரி, கே.நிதர்சன்-சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பபாடசாலை, க.சசிகா-இணுவில் இந்துக்கல்லூரி, ஆ.ராகுலன்-சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப்பாடசாலை. (ம-86)

## இணுவில் மத்திய கல்லூரி சம்பியன்

வலி. வடக்கு, நவ.14

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 16வயதுப் பிரிவினருக்கான உதைப்பந்தாட்டப் போட்டியில் இணுவில் மத்தியகல்லூரி சம்பியனாகியது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் இணுவில் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டதுடன் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்துக்கு மைதானத்தில் ரசிகர்களின் அதிகரித்த ஆதரவும் காணப்பட்டது.

இந்த நிலையில் முதலாவது கோலை இணுவில் மத்தியகல்லூரி பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து ஆட்டம் சூடுபிடித்தது. இதன்போது மீண்டும் ஒரு கோலை இணுவில் மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது.

ஸ்ரீமுருகன் வித்தியாலயம் தொடர்ந்து தனது அபாரமான ஆட்டத்தின்மூலம் தனது முதலாவது கோலைப் பெற்றுக்கொண்ட நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் கோல் பெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடியது. இணுவில் மத்தியகல்லூரி மீண்டும்இரண்டு கோல்களைப் பெற்றுக்கொண்டது.

ஆட்ட நிறைவில் இணுவில் மத்திய கல்லூரி 4 : 1 என்ற கோல் கணக்கில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தை வென்று சம்பியனானது. (த-86)

## உதைபந்தாட்டத்தில் மானிப்பாய் இந்து அரை இறுதி ஆட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம், நவ.14.

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் மைலோ வெற்றிக்கிண்ணத்துக்கான 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித்தொடரின் காலிறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்று அரை இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து களணிய தர்மலோக கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)

40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தில்

## பாசையூர் சென்.அன்ரனிஸ் ஊரெழு றோயல் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், நவ.14

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழங்கங்களுக்கு இடையே நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை குருநகர் சென் றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் மரூன் அணியையும் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் மரூன் அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் பாசையூர் சென்.அன்ரனிஸ் மரூன் அணி 2:0 என்ற கோல்க் கணக்கில் வெற்றியீட்டியது.

இதனைத் தொடர்ந்து நடைபெறவிருந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவிருந்தது. ஆனால் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மைதானத்துக்கு சமூகம் தராமையால் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடு கடத்தப்படுவார்கள்

இங்கிலாந்து சிறையில் இருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் மூன்று பேரை, தண்டனைக் காலம் முடிந்ததும், நாடு கடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில், 'ஸ்பொட் பக்சிங்கில்' ஈடுபட்ட, பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமது ஆசிப், முகமது ஆமிர் படிபட்டனர். இவர்கள் மீதான குற்றம் நிரூபக்கப்பட்டு, இப்போது லண்டன் சிறையில் உள்ளனர். இதில் முகமது ஆமிர், 'ஹெர் மெஜஸ்டிஸ்' சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் உள்ளார்.

இதனிடையே, 'தி டெய்லி மெயில்' இங்கிலாந்து பத்திரிகையில் வெளியான செய்தி:

வாண்ட்ஸ்வொர்த் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த சல்மான் பட், முகமது ஆசிப் இருவரும், கடந்த வாரம் கான்டர்பரியில் உள்ள எச்.எம்.ப சிறைக்கு மாற்றப்பட்டனர். இங்கிலாந்தில் குற்றம் செய்து படிபடும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும், இந்தச் சிறையில் அடைக்கப்படுவர். இது 2007 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.

இங்குள்ள கைதிகள் தண்டனைக் காலம் முடிந்ததும், இங்கிலாந்தை விட்டு தானாக நாடு கடத்தப் படுவர். அவர்கள் மறுத்தாலும், இங்குள்ள குடியேற்ற துறை அதிகாரிகள், தண்டனை முடிந்த கைதிகளை, இங்கிலாந்தை விட்டு செல்லத் தேவையான நடவடிக்கை எடுப்பர்.

என்ன விளைவு?

இதன்படி, நாடு கடத்தப்படும் இந்த வீரர்கள் அடுத்த 10 ஆண்டுகளுக்கு இங்கிலாந்துக்குள் நுழைய முடியாது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சார்பில் முகமது ஆமிருக்கு விதிக்கப்பட்ட ஐந்து ஆண்டு தடை நீங்கி, 2015 இல் மீண்டும் கிரிக்கெட்டுக்கு திரும்பினாலும், அவர் இங்கிலாந்து செல்ல முடியாது. (15)

# சங்கா பிடித்தார் முதலிடம்

பாகிஸ்தான் அணியுடன் நடைபெற்று முடிந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககாரா டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஐ.சி.சியின் புதிய தரப்படுத்தலுக்கு அமைய 880 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட குமார் சங்ககார டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தலில் முன்னிலையில் திகழ்கின்றார்.

இந்த தரப்படுத்தலில் 873 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட தென்னாபிரிக்க வீரர் கலிஸ் இரண்டாமிடத்திலும், 823 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணியின் தலைவர்குக் மூன்றாம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 806 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்தில் காணப்படுகின்றார். அத்துடன் இங்கிலாந்தின் 4 வீரர்களும், தென்னாபிரிக்காவின் 3 வீரர்களும், இலங்கை, இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஒவ்வொரு வீரரும் முதல் 10 இடங்களிற்குள்ளும் இடம்பிடித்துள்ளனர்.



# சிறப்பாக நடந்து முடிந்தது கல்யாணம்

இந்திய அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் தன் பள்ளித்தோழி ப்ரீத்தியை நேற்று சம்பிரதாயபூர்வ மாகத் திருமணம் செய்து கொண்டார்.

அறிமுக டெஸ்ட் ஆட்டத்திலேயே 9 இலக்குகள் வீழ்த்தி ஆட்டநாயகன் விருதைப் பெற்றார் அஸ்வின். இந்த நிலையில் நேற்றுக் காலை அஸ்வின் திருமணம் சென்னையில் நடந்தது.

தனது பள்ளித் தோழியான ப்ரீத்தியை அவர் திருமணம் செய்து கொண்டார். இந்தத் திருமண விழாவில் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர். திருமணம் இந்து முறைப்படி நடைபெற்றது. (15)

# இந்திய அணி தீவுகளை வீழ்த்தும்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் இந்தியா 3-0 என்று வெற்றி வாகைசூட வாய்ப்புள்ளதாக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி கூறினார்.

ரஞ்சி தொடர் போட்டியில் பெங்கால் அணிக்காக களமிறங்க உள்ள கங்குலி அதற்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். பயிற்சியின் இடையே செய்தியாளர்களிடம் சனிக்கிழமை அவர் கூறியதாவது:

அண்மைக்காலமாக டெஸ்ட் ஆட்டங்களை நான் பார்க்கவில்லை. இருப்பினும் இந்தியா 3-0 என்று இந்தத் தொடரில் வெற்றி பெறும் என்று நம்புகிறேன். சச்சின் ஏற்கெனவே 15 ஆயிரம் ஓட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளார். 100 ஆவது சதத்தையும் விரைவில் அவர் அடிப்பார்.

ஹர்பஜன் சிங்குடன் அஸ்வினை ஒப்பிடக் கூடாது. ஹர்பஜன் சிங் 400 இலக்குகளுக்கு மேல் வீழ்த்தியுள்ளார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அஸ்வினை நாம் 2 ஆண்டுகளுக்காவது கவனிக்க வேண்டும். அதன் பின்னர்தான் அவரைப் பற்றி கருத்து கூற முடியும் என்றார் கங்குலி. (15)

# இந்தியாவின் தடுப்புச் சுவரை தகர்ப்பது கடினம்

ராகுல் டிராவிடுக்கு எதிராகப் பந்துவீசுவது மிகவும் கடினமானது என்று மேற்கிந்தியத் தீவுகளின் வேகப் பந்துவீச்சாளர் பிடல் எட்வேர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையேயான 2 ஆவது கிரிக்கெட் டெஸ்ட் கொல்கத்தாவில் இன்று தொடங்குகிறது. இந்த நிலையில், கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் எட்வேர்ட்ஸ் சனிக்கிழமை கூறியதாவது:

இந்திய அணியின் தடுப்புச்சுவர் என்றே டிராவிட் உலகம் முழுவதும் அறியப்படுகிறார். சர்வதேச அளவில் இன்று விளையாடும் வீரர்களில் அவருக்குப் பந்துவீசுவதுதான் கடினமானது என்று கருதுகிறேன்.

டில்லி டெஸ்டில் பந்தை 'பௌன்ஸ்' செய்வது மிகவும் கடினமாக இருந்தது. எவ்வளவு நேராகவும், வேகமாகவும் பந்துவீச முடியுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்தோம். டிராவிட்டின் இலக்கை வீழ்த்தியதுதான் வாழ்நாளின் மிகச் சிறந்த பந்துவீச்சு என்று கூற முடியாது. ஆனால், அது சிறப்பானது என்பதில் சந்தேகமில்லை.

இந்திய வீரர்களின் ஆட்டத் திறனை வீடியோவில் பார்க்கிறோம். அதன் பின்னர் அணிக் கூட்டத்தில் அவர்களது திறன் குறித்து கலந்து ஆலோசனை செய்கிறோம். அணிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி செயல்பட முழு முயற்சி மேற்கொள்கிறோம். கொட்னி வோல்ஷ், கர்ட்லி அம்புரோஸ், இயன் பஷப் ஆகியோர் 6 அடிக்கும் அதிகமான உயரம் கொண்டவர்கள். அவர்கள் போல உயரமாக இல்லையே என்று வருத்தப்படுவதில் பயன் இல்லை. எங்கள் அணியில் இடம்பெற்றுள்ளவர்கள் அனைவரும் இளைஞர்கள். இந்தியாவுக்கு எதிரான தொடர் எங்களுக்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது. சச்சின் டெண்டுல்கரை தொலைக்காட்சியில் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். அவருக்குப் பந்துவீசுவது என்பதே மிகப் பெரிய சாதனை. அதிலும், அவரது இலக்கை கைப்பற்றியது கூடுதல் சிறப்பாகும்.

சச்சின் சாதனை வீரர் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் எங்களுக்கு எதிராக அவர் சதம் அடிக்கவிடமாட்டோம். அடுத்த டெஸ்டுகளில் அவர் ஓட்டம் எடுக்காமல் பவிலியன் திரும்புவதையே விரும்புகிறேன். கம்பீர், சேவாக், சச்சின், யுவராஜ், டோனி, டிராவிட் போன்ற வீரர்கள் இருந்தும் முதல் டெஸ்டில் இந்திய அணியைத் தடுமாற வைத்தோம். கொல்கத்தா டெஸ்ட் எனக்கு 50 ஆவது டெஸ்ட். எனவே, சிறப்பாக விளையாடி வெற்றி பெற முயற்சி செய்வோம் என்றார் எட்வேர்ட்ஸ். (15)



# மகளிர் கபடியில் இந்தியா அசத்தல்

மகளிர் உலகக் கிண்ணக் கபடிப் போட்டியில் இந்திய அணி தனது 2 ஆவது லீக் ஆட்டத்தில் இங்கிலாந்தை நேற்று முன்தினம் வீழ்த்தியது.

தொடக்கத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய இந்திய வீராங்கனைகள் 51-8 என்ற புள்ளிக் கணக்கில் அபாரமாக வென்று அசத்தினர்.

அமிர்தசரசில் நேற்று முன்தினம் நடந்த தொடக்க போட்டியில் துருக்மெனிஸ்தான் அணியுடன் மோதிய இந்தியா 50-12 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது குறிப்படத்தக்கது. பெரோஸ்புரில் நேற்று நடந்த மற்றொரு லீக் ஆட்டத்தில் கனடா அணி 64-22 என்ற புள்ளிக் கணக்கில் [illegible] வீழ்த்தியது. ஆண்கள் பரிவில் 5 வெற்றிகளைக் குவித்த இந்திய அணி ஏற்கனவே அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்குள்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதும் எமது கடமை. இந்தக் கடமைகளை நிறைவேற்றவே இந்த சட்டங்களை நாம் கொண்டு வருகின்றோம். அவசரப்பட்டு சட்டங்களை நாம் இயற்றவில்லை. கடந்த வருடம் வரவு, செலவுத் திட்டதின் போது முதன் முதலாக ஜனாதிபதி இந்தச் சட்டம் பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

சிறிமாவோ பண்டார நாயக்க நாடாளு மன்றத்துக்கு சட்ட மூலம் தாக்கல் செய்யாமலே காணிகளை நாட்டுடைமையாக்கினார். அமைச்சரவை அதனை ஒரேநாளில் நடைமுறையாக்கியது. அது முன் கூட்டியே தெரிந்திருக்குமானால் முறைகேடாக காணிகள் வேறு ஆள்களுக்கு எழுதப்பட்டிருக்கும். பொது சொத்துக்களை பாதுகாப்பதற்காக அவ்வாறான நடவடிக்கை தேவைப்படுகின்றது. இது அரசியல் வஞ்சம் தீர்ப்பு என்றால் ஓர் எழுத்தின் மூலம் ஜனாதிபதியால் அதனை செய்திருக்க முடியும். அவ்வாறு இல்லை என்பதால்தான் நாம் அதனை நாடாளுமன்றத்தில் கொண்டு வருகின்றோம் என்றார்.

அமைச்சர் மேலும் கூறுகையில், கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் நாம் இதை செய்கின்றோம். ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரின் சொத்தும் இந்த சட்டத்தின் கீழ் எடுக்கப்படுகின்றது என்பதை நான் கூற வேண்டும். அவரும் கூட இந்த சட்டத்தை ஆதரித்து வாக்களிக் கிறார். இன்னொன்று இருக்கிறது. அது செல்வாக்கு படைத்த ஒரு தலைவருக்குரியதாகும். ஒரு காணி ஜனாதிபதியின் உறவினர் ஒருவருக்குரியதாகும். எம்மிடம் பட்டியல் ஒன்று இருக்கிறது அவைகளின் நஷ்டத்தோடு நாம் கையேற்கின்றோம். இவைகளில் சில தமது ஊழியர்களுக்கு சேமலாப நிதியைக் கூட வழங்கமால் இருக்கின்றன. சிலவற்றில் உழியர்கள் இழப்பீடு இன்றியே வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவை சுதந்திர வர்த்தக வலயத்தில் இருக்கின்றன என்றார்.

ஐ.தே.கவின் கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டியது போல ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தில் இருக்கும் இரண்டு கட்சியினர் நாடாளு மன்றத்தில் அரசுக்கு சார்பாக வாக்களிக்காமல் விட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும் தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரவன்ச வாக்களிப்பு நேரத்தில் சபையில் இருக்கவில்லை. ஜாதிகஹெல உறுமயவைக் சேர்ந்த வண. அத்துரலியே ரத்ன தேரரும் பிரசன்னமாய் இருக்கவில்லை. அந்தக் கட்சியின் தலைவரும் மின்சக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க ஜனாதிபதியின் பிரதானிகளுடன் இணைந்து மாலைதீவுக்கு சென்றிருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இவர்களின் நடத்தை குறித்த அமைதிகாக்க இருக்கப்போகின்றதா விளக்கம் கேட்கப்போகின்றதா என்பது இப்போது முக்கிய கேள்வியாக எழுந்துள்ளது. (ப)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15
*
06
*
1927



விண்ணில்
27
*
10
*
2010

**அமரர் துரைசிற்பிள்ளை சிவக்கொழுந்து**

திதி. சங்கடஹர சதுர்த்தி

ஆண்டொன்று ஆனாலும்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
தாயே உமக்கு ஈடாகுமா?
உமை இழந்து பாசத்துக்காய்
எம் மனம் துடிக்கிறதே
எங்கள் குல தெய்வமே! எப்போது
இனி உங்கள் முகத்தை நாம் காண்போம்
உங்கள் நீங்காத நினைவுகளில்
என்றென்றும் துடிதுடித்து நிற்கின்றோம்
உமது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்.

சிவன் கோயில் வீதி,
மட்டுவில் மத்தி,சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## இதய அஞ்சலிகள்



இமயம் சரிந்ததுவோ?
எண்திசையும் அதிர்ந்ததுவோ?
ககனப் பெரு வெளியில்
காரிருள் தான் சூழ்ந்ததுவோ?
மலைபோல் உயர்ந்த மதி
மண்ணாகிப் போனதுவோ?
கயவர் கரங்களிலே
கன்றாகித் துடித்தனையோ?
காலன் உலகினுக்கோர்
கல்வி தரச் சென்றனையோ?
சோகம் சுமக்க வைத்து
தொலை தூரம் ஏகினையோ?

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் துடிப்புமிக்க அதிபர்களில் ஒருவரும், வளர்ந்து வந்த கல்வி மானும் யா/கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை அதிபருமாகிய
**அமரர் சிவசுப்பிரமணியம் தயாபரன்**
அவர்களின் அகால மரணச் செய்தியால் ஆழ்ந்த துயரடைவதுடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள் சங்கம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.


# கேள்வி அறிவித்தல்- 2012
## கரைச்சிப் பிரதேச சபை- கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிலையங்களை 01.01.2012 தொடக்கம் 31.12.2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம்:- | அலுவலக நாள்களில் காலை 8.30 - பி.ப 3.00 14.11.2011- 28.11.2011 |
| கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:- | 29.11.2011 மு.ப 10 மணி வரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி:- | 29.11.2011 மு.ப 10.30 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம்:- | கரைச்சிப் பிரதேச சபை தலைமை அலுவலகம். |

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.**

| இல | குத்தகையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் (மீளப் பெறக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT. VAT) நீங்கலாக (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வி மதிப்பீடு. (NBT. VAT) நீங்கலாக |
|---|---|---|---|---|
| | **ஆட்டிறைச்சிக் கடை** | | | |
| 01 | , பரந்தன் | 10,000.00 | 1000.00 | 144,000.00 |
| 02 | கிளிநொச்சி | 10,000.00 | 1000.00 | 310,000.00 |
| | **கோழியிறைச்சிக்கடை** | | | |
| 01 | பரந்தன் | 10,000.00 | 1000.00 | 186,000.00 |
| 02 | உருத்திரபுரம் D10 | 10,000.00 | 1000.00 | 144,000.00 |
| 03 | கிளிநொச்சி இல 01 | 20,000.00 | 1000.00 | 1,295,000.00 |
| 04 | கிளிநொச்சி இல 02 | 20,000.00 | 1000.00 | 1,188,000.00 |
| 05 | இரணைமடுச் சந்தி | 10,000.00 | 1000.00 | 167,000.00 |
| | **மாட்டிறைச்சிக் கடை** | | | |
| 01 | பரந்தன் | 20,000.00 | 1000.00 | 1,311,000.00 |
| 02 | முரசுமோட்டை | 10,000.00 | 1000.00 | 121,000.00 |
| 03 | கண்டாவளை | 10,000.00 | 1000.00 | 121,000.00 |
| 04 | தர்மபுரம் | 10,000.00 | 1000.00 | 653,000.00 |
| 05 | கல்லாறு | 10,000.00 | 1000.00 | 144,000.00 |
| 06 | புன்னை நீராவி | 10,000.00 | 1000.00 | 908,000.00 |
| 07 | இராமநாத புரம் | 10,000.00 | 1000.00 | 263,000.00 |
| 08 | வட்டக்கச்சி | 10,000.00 | 1000.00 | 826,000.00 |
| 09 | இரணைமடுச் சந்தி | 20,000.00 | 1000.00 | 2,304,000.00 |
| 10 | உருத்திரபுரம் D10 | 10,000.00 | 1000.00 | 181,000.00 |
| 11 | ஜெயந்திநகர் | 10,000.00 | 1000.00 | 321,000.00 |
| 12 | ஊற்றுப்புலம் | 10,000.00 | 1000.00 | 144,000.00 |
| 13 | அம்பலப்பெருமாள் சந்தி | 10,000.00 | 1000.00 | 151,000.00 |
| 14 | வன்னேரி | 10,000.00 | 1000.00 | 152,000.00 |
| 15 | ஸ்கந்தபுரம் | 10,000.00 | 1000.00 | 362,000.00 |
| 16 | கிளிநொச்சி | 20,000.00 | 1000.00 | 3,362,000.00 |

**நிபந்தனைகள்:**

1 உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.
2. கடந்த கால கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்களாவர்.
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்வி சபைக்கு அதிகாரம் உண்டு.
4. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒரு ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
5. மேலதிக விவரங்களை கரைச்சிப் பிரதேச சபையுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திலிங்கம் குகராஜா, தவிசாளர்,**
கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லிணக்கக்குழு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

தைத் தோற்றுவித்துள்ளது என்றும் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்த கல்முனையைச் சேர்ந்த 45 வயதான விதவைப் பெண்ணான இரத்தினம் பூங்கோதை என்பவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தான் வழங்கிய சாட்சியம் தொடர்பாக விசாரிப்பதற்கு சி.ஐ.டியினர் தன்னை விசாரணைக்கு வருமாறு அழைத்தனர் என்ற விடயத்தை குறித்த பெண் நேற்று எமது செய்தியாளரிடம் உறுதிப்படுத்தினார்.

ஒட்டுமொத்த உலகின் பார்வையும் இலங்கையின் பக்கம் திரும்பியுள்ள நிலையிலும், அறிக்கை வெளியாக இன்னும் சில நாள்களே எஞ்சியுள்ள நிலையிலும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் வழங்கியவர் தொடர்பான இரகசியம் கசிந்துள்ளதானது அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மக்களிடம் சாட்சியங்களைத் திரட்டும் போது இரகசியத்தன்மை 100 சதவீதம் பேணப்படும் என உறுதியளிக்கப்பட்டே நல்லிணக்க ஆணைக்குழு சாட்சியங்களைத் திரட்டியது. ஆனால், இப்போது இரகசியம் எப்படி அம்பலமானது என்று அரசியல் ஆய்வாளர்கள் கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்த பொதுமகன் தொடர்பான பெயர், அவர் தொடர்பான விவரம் கசிந்துள்ளதானது அறிக்கை மீதுள்ள நம்பகத்தன்மையை திசை திருப்பியுள்ளது என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளித்த இரத்தினம் பூங்கோதை என்பவருக்கு சி.ஐ.டியினர் விசாரணை அழைப்பாணை விடுத்துள்ளதானது அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதே வேளை, பல்வேறு கோணங்களில் சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளது.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் கருத்துக்கேட்டபோது அவர் கூறியதாவது:-

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கினால் இரகசியத்தன்மை பேணப்படாது. அதே போன்று பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் என மக்கள் கருதினர்.

இந்தக் காரணிகளைக் கருத்திற்கொண்டே கணிசமானோர் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தங்களுக்கு நேர்ந்த அவலங்களைக் கூறுவதற்கு முன்வரவில்லை.

மக்கள் அன்று நினைத்த - எதிர்வு கூறிய உண்மைகள், நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த பெண்ணிடம் சி.ஐ.டியினர் விசாரணை மேற்கொள்ளவுள்ள விடயம் அம்பலப்படுத்தியுள்ளது. இதனை ஒரு போதும் ஏற்கமுடியாது.

நல்லிணக்க ஆணைக்குழு தனது பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் தறுவாயிலோ அல்லது அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னரோ மக்கள் நலன்கருதி விசாரணைகளை முன்னெடுத்திருந்தால் அதனை நியாயப்படுத்த முடியும்.

ஆனால், அறிக்கை தயாரிப்பு நடவடிக்கைகள் யாவும் நிறைவடைந்து, ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ள நிலையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதானது பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

சாட்சிகளின் பாதுகாப்புக் குறித்து நாம் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம். இப்போது நாம் சுட்டிக்காட்டிய விடயங்கள் சரியாகவே நடந்துள்ளன. - என்றார்.

(ஒ-சி)

## 2012 முதல்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

எனினும் கடலட்டை மற்றும் சங்கு பிடிப்பதற்கு புறம்பாக ஒட்சிசன் சிலிண்டர்கள் சகிதம் மீன்பிடியிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால் தமது மீன் வளம் குறைந்து வருகிறது எனவும் மீன் கூட்டம் நகர்ந்து விடுகிறது எனவும் மீனவ சங்கங்கள் குற்றம்சாட்டுகின்றன.

இதையடுத்தே அண்மையில் ஒன்று கூடிய மீனவ சங்கங்கள், அடுத்த ஆண்டின் ஆரம்பம் முதல் வடக்குக் கடலில் தொழிலில் ஈடுபடத் தெற்கு மீனவர்களை அனுமதிப்பதில்லை என முடிவு செய்துள்ளன.

இதுதொடர்பில் வடமராட்சி கிழக்கில் நிலைகொண்டுள்ள தெற்கு மீனவர்களுக்கு வடக்கு மீனவ சங்கங்கள் அறிவித்துள்ளன.

(ஒ-சி)

**வீடு வாடகைக்குத் தேவை**

நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. பொருத்தமான முற்பணம், வாடகை தரலாம். தொடர்புகளுக்கு: 0777341951

**வரவேற்று வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலைக்கு
02.11.2011 தொடக்கம்
அதிபராக நியமனம் பெற்ற
திரு. இராஜா ஜெயக்குமார்
அவர்களை வரவேற்று வாழ்த்தி
மகிழ்கின்றோம்.

யா/மயிலணி சைவ மகா
வித்தியாலயம்.
சுன்னாகம்.

பாடசாலைச் சமூகம்.

**60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்**



*1981 முதல் 2011 வரையிலான 30 வருடங்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக தமது அளப்பரிய சேவையினால் தாதிய சமூகத்தில் போற்றக் கூடியவராக விளங்கி இன்று சேவையில் இருந்து ஓய்வுபெறும் பேரன்புக்கும், பெரு மதிப்புக்குமுரிய தாதிய உத்தியோகத்தர்*

திருமதி
பூபதி துரைராஜசிங்கம்

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துக் கூறி நிற்கும்:-
தாதிய சமூகம்.
விடுதி இல. 01,
வைத்தியர்கள், ஊழியர்கள்.

## ஜே.வி.பியினர்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

கண்டனம் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கட்சிக்காக உயிர்நீத்த தோழர்களின் ஞாபகார்த்த விழாவுக்கான சுவரொட்டிகளை நேற்றுமுன்தினம் நொச்சியாகம நகரத்தில் ஒட்டிக்கொண்டிருந்த எமது கட்சி உறுப்பினர்கள் ஏழு பேர் மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நொச்சியாகம பிரதேச சபையின் உப தலைவர் நளின் திஸாநாயக்க உட்பட்ட குழுவினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பொல்லுகளால் கடும் தாக்குதலுக்கு இலக்கான தோழர் கருணாரத்ன கடுமையான காயங்களுடன் நொச்சியாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இந்தத் தாக்குதல் குறித்து முறைப்பாடு செய்ய சென்றபோதும் நொச்சியாகம பொலிஸார் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் அநுராதபுரம் வைத்தியசாலை பொலிஸ் பிரிவில் முறைப்பாட்டைச் செய்யவேண்டியேற்பட்டது.

மனிதச் சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் மற்றும் சட்டத்தின் நியாயாதிக்கத்தை முற்றுமுழுதாக ஒழித்துக்கட்டியிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ அரசு, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வீதியில் கொலை செய்து மோதிக்கொள்ளும் நிலைமையை உருவாக்கி, குற்றவாளிகளைப் பாதுகாக்கும் முன்மாதிரியை நாட்டின்முன் வைத்துள்ளது. இதனால் உத்வேகமடைந்துள்ள பிரதேச ரீதியான அரசியல் காடையர்கள் இவ்வாறான வன்முறைகளைச் செய்வது ஒன்றும் புதுமையான விடயமல்ல.

இவ்வாறான சூழ்நிலையில், நாட்டின் சட்டத்தை மீறுதல், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தை இல்லாமற் செய்யும் அரசின் முயற்சியை தோல்வியடையச் செய்யவேண்டியதன் அவசியத்தை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-சி)

## மானியர்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

எரிபொருள்களின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து தமக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படவேண்டும் அல்லது பஸ் கட்டணங்களை அதிகரிக்க அனுமதி தரவேண்டும் என்று பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பஸ் கட்டணங்களை அதிகரிக்க நாம் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டோம். பதிலுக்கு எரிபொருள் மானியம் வழங்குவது தொடர்பில் நாம் திங்கட்கிழமை (இன்று) இறுதி முடிவெடுப்போம் - என்றார்.

(ஒ-சி)

## யாழ். நகரிலுள்ள ...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இந்த நடவடிக்கையின் போது முகாமையாளர் பணியாளர்களுடன் விடுதியில் தங்கியிருந்த பலர் சிக்கிக் கொண்டனர். அவர்களில் பன்னிருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இன்று நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படுவர் - என்றார்.

(ஒ-15-4)

## தனியார் பஸ்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

பொருள் மானியம் வழங்கப்படவேண்டும்.

இது தொடர்பான கோரிக்கைகளை நாம் பல தடவைகள் போக்குவரத்து அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் முன்வைத்த போதிலும் அவர்கள் இவற்றைக் கருத்தில் கொள்ளவில்லை.

எமது கோரிக்கையை வென்றெடுப்பதென்றால் வேலைநிறுத்தத்தில் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதனால் நாங்கள் நள்ளிரவில் இருந்து நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தத்தில் குதிக்கத் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

இதேவேளை, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய இன்று நள்ளிரவு 12 மணி தொடக்கம் மறு அறிவித்தல்வரும் வரை சிற்றூர்தி சேவைகள் யாவும் நிறுத்தப்பட்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ். பிராந்திய [illegible] சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

**மரண அறிவித்தல்**

*சங்கரப்பிள்ளை-சிவதாஸன்*



*(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும்.)*

கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வங்களா ஒழுங்கை, மல்லாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை-சிவதாஸன் நேற்று (13.11.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சிவகுணநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான Dr.மாணிக்கம், மணிமேகலை, மற்றும் மனோன்மணி, திரு நடராஜா(கனடா), வைரவப்பிள்ளை, நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் துரைரட்ணம், பத்மினிதேவி, கோகிலாதேவி, இராசலட்சமி, மாலினி, பராசக்தி, பரமேஸ்வரி, சீனிவாசகம், ஜெகதாம்பிகை, கைலேஸ்வரன், ஆகியோரின் மைத்துனரும் பத்மநாதன், காலஞ்சென்றவர்களான கனகச்சந்திரன், இராஜரட்ணம் மற்றும் பரஞ்சோதி, லீலாவதி ஆகியோரின் சகலனும் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மாமனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



தேசியக்கல்வி நிறுவக கல்வி மாணிப் பயிற்சி நெறியின் இணைப்பாளரும் (யாழ்.மத்திய கல்லூரி கற்கை நிலையம்) யா/கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை அதிபருமாகிய

அமரர்
**சிவசுப்பிரமணியம் தயாபரன்**

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப் பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

இணைப்பாளரும், விரிவுரையாளர்களும், ஆசிரிய மாணவர்களும், தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிக்கற்கை நெறி, யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கற்கை நிலையம் நெல்லியடி, வடமராட்சி.

**மரண அறிவித்தல்**

*நல்லையா மகேஸ்வரி*

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நாதன் திட்டம் விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னம்மாவின் மூத்த மகளும், காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியுமான மகேஸ்வரி நேற்று 13.11.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரோஜினிதேவி, சர்வகலதேவி, வயறிங் சிறி, தவசோதி, கிஸ்னபாலன் (குகன்- லண்டன்), ஜெயசோதி, சிவசோதி, அருந்ததி (டென்மார்க்), சத்தியபாலன்(சுரேஸ்), அனுபாமினி(ஆசிரியை, பிரமந்தனாறு மகாவித்தியாலயம்) ஆகியோரின் தாயும் சந்திரசேகரம், நாகேஸ்வரன், வதனா, கந்தசாமி, வசந்திமாலா (லண்டன்), கருணாகரன், சிவலிங்கம், யோகராசா (டென்மார்க்), நாகசக்தி, தயாபரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகள் இன்று (14.11.2011) முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12ஆம் கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நாதன் திட்டம், விசுவமடு.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுப் பிரதேசத்தில் நடத்த யார் அனுமதிப்பர்?

**சிறிதுங்க ஜயசூரிய**



காட்டுப் பிரதேசமான அம்பாந்தோட்டையில் சர்வதேச தரம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு யார்தான் அனுமதி வழங்குவர்?

விரலுக்கேற்ற வீக்கம் வேண்டும் என்ற உண்மையை மஹிந்த அரசுக்கு இந்தத் தோல்வி உணர்த்தியுள்ளது. தாய்நாட்டில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் நடக்கக்கூடாது என நான் கூறவில்லை. போட்டிகளை நடத்துவதற்கான வசதி வாய்ப்புகள் எம்மிடம் உள்ளனவா என்று முதலில் ஆராய்ந்துப் பார்க்கவேண்டும். அதை விடுத்து எட்டாக்கனிக்கு ஆசைப்பட்டால் இதுதான் நிலைமை.

எமது நாட்டிலுள்ள சர்வதேச விமானநிலையத்தை ஆஸ்திரேலியாவிலுள்ள சாதாரண விமானநிலையத்துடன்கூட ஒப்பிடமுடியாத நிலையே உள்ளது. இந்நிலையில், எப்படி நாம் சர்வதேச தரம் வாய்ந்த போட்டிகளை இங்கு நடத்த முடியும்.

- என்றார் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய.

# நாட்டின் தற்போதைய ஜனநாயகம் தடுத்துவிட்டது

**விஜித ஹேரத்**



பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் நடத்துமாறு அரசிடம் நாட்டு மக்களோ அல்லது விளையாட்டு வீரர்களோ கோரவில்லை.

அதிகாரத்திலுள்ள ஒரு சிலரின் ஆசையை நிறைவேற்றும் பொருட்டே பொதுநலவாய போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கான வாய்ப்பை அரசு கோரியது.

வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காக விளையாட்டுத்துறையுடன் தொடர்புபடாதவர்கள் - அதாவது அறவே சம்பந்தமில்லாதவர்கள வெளிநாடு சென்றனர்.

சுமார் 150 பேர் வரை சென்றனர். இதற்காக கோடிக் கணக்கில் மக்களின் பணம் செலவிடப்பட்டது. ஒரு சிலரின் கனவுகளை நிறைவேற்றவே அரசு இந்நடவடிக்கையை முன்னெடுத்தது. தவிர, நாட்டின் நன்மை கருதி அல்ல.

நாட்டின் தற்போதைய நிலைமைகள், ஜனநாயக விடயம் என்பன இலங்கைக்குப் போட்டியை நடத்துவதற்கான வாய்ப்பை வழங்காது தடுத்துவிட்டது எனலாம்.

- என்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்.

# 27 வாக்குகள் கிடைத்ததே வெற்றிதான்

**டலஸ் அழகப்பெரும**



மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகச் செயற்படும் இவ்வேளையில், இலங்கைக்கு ஆதரவாக 27 வாக்குகள் கிடைத்ததே பெரும் வெற்றிதான்.

ஆஸ்திரேலியர்களின் ஏற்பாட்டுச் செலவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் எமது செலவீனம் நூற்றுக்கு 20 சதவீதம்தான்.

பொதுநலவாய போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பை நாம் இழந்துள்ளோமே தவிர, பொதுநலவாய போட்டிகளில் தோல்வியடையவில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமின்றி அம்பாந்தோட்டை நகரையும் உலகறியச் செய்த பெருமை எமது அரசையே சாரும். 2022ஆம் ஆண்டு உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரை நடத்தும் சந்தர்ப்பத்தைக் கோரி போட்டியிட்ட அமெரிக்காகூட அந்த வாய்ப்பை இழந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். - என்றார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பொருளாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும.

# முல்லேரியா படுகொலையே காரணம்

**விக்கிரமபாகு**



ஜனாதிபதியின் ஆலோசகர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட நாட்டில் அரங்கேறிய கொடூரமான சம்பவங்களே பொதுநலவாய போட்டிகளை ஆஸ்திரேலியா நோக்கி நகரவைத்தது. இலங்கையின் நிலைமைகள் ஸ்திரமாக இருந்திருந்தால், இலங்கைக்கு நிச்சயம் வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஏனெனில், ஆஸ்திரேலியா பல தடவைகள் பொதுநலவாய போட்டிகளை நடத்திய நாடாகும். எனவே, இம்முறை நட்த்தவேண்டிய அவசியம் அவர்களுக்குக் கிடையாது.

இலங்கையின் தற்போதைய நிலைமைகளை - இலங்கைக்கான சந்தர்ப்பத்தைப் பறித்துக்கொண்டது.

- என்றார் தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுப்பினரும், நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

# பொதுநலவாய போட்டியை நடத்தும் வாய்ப்பை இலங்கை இழந்தது ஏன்?

*2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை இலங்கை இழந்துள்ளது.*

*பொதுநலவாய போட்டிகளை இலங்கையில் நடத்துவதற்கு ஏன் வாய்ப்புக் கிடைக்கவில்லை என அரசியல் கட்சி முக்கியஸ்தர்களிடம் நாம் வினவினோம்.*

# மாதிரித் திட்டங்களை வைத்து கோரமுடியுமா?

**ஹரின் பெர்னாண்டோ**



பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை அம்பாந்தோட்டையில் நடத்துவதற்கான அடிப்படை வசதிகளை அரசு பூரணமாகப் பூர்த்திசெய்யவில்லை.

மாதிரி திட்டங்களை வைத்துக் கொண்டே ஆஸ்திரேலியாவுடன் போட்டி போட்டது.

பிரசாரங்களுக்குக் கோடிக்கணக்கில் பணம் செலவிடப்பட்டது. ஆனால், பயன் ஏதுமில்லை. அந்த நிதியைப் பயன்படுத்தி அரசு, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியிருக்கலாம்.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியை நாட்டில் நடத்த மூன்றரை கோடி கணக்கில் பணம் செலவிடப்பட்டுள்ளது.

தாய் நாட்டில் பொதுநலவாயப் போட்டி நடைபெறுவதை நாம் எதிர்க்கவில்லை. போட்டிகளை நடத்துவதற்கான சக்தி எம்மிடம் உள்ளதா எனச் சிந்தித்துப் பார்த்துத் தீர்மானங்களை எடுத்திருக்கவேண்டும். இலங்கைக்கு 27 வாக்குகள் கிடைத்ததே பெரிய விடயம்தான்.

- என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் விளையாட்டுத்துறை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவரும், எம்.பியுமான ஹரிஸ் பெர்னாண்டோ.

# நீரிழிவு தினத்தை முன்னிட்டு இன்று குடாநாடு எங்கும் விழிப்புணர்வு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.14

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் உலக நீரிழிவு தினமான இன்று திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவு குடாநாடு முழுவதுமாக விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

அந்த வகையில் பாடசாலைகள் தோறும் சிறார்களுக்கு நீரிழிவு தடுப்புச் சம்பந்தமான அறிவூட்டல், பொது நிறுவனங்களில் நோயின் தாக்கத்தை குறைப்பது சம்பந்தமான பொதுமக்களை அறிவூட்டல், இலவச குருதி பரிசோதனை, வியாபார நிறுவனங்களில் இந்தநோய் சம்பந்தமான விளக்கமளித்தல் , வைத்தியசாலைகளின் சுற்றாடல்கள் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபயணம் போன்றவற்றை நடத்தவுள்ளது.

(ம)

## கொமன்வெல்த்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

டைந்துள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் 2018 ஆண்டுக்குரிய விளையாட்டுப் போட்டிகளை அம்பாந்தோட்டையில் நடத்துவதற்கான வாக்கெடுப்பு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதற்காக இலங்கை அரசால் சுமார் 30 தொடக்கம் 40 கோடி ரூபா வரை செலவிடப்பட்டன. முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், முன்னாள் அழகுராணி அனார்கலி உட்பட்ட பல கிரிக்கெட் மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்தோர் இதற்கான பிரசாரங்களில் ஈடுபட்டனர். 2018 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது குறித்து ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய இருநாடுகளுக்கிடையே 71 நாடுகளின் அமைப்பில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 27வாக்குகளை மாத்திரமே இலங்கையால் பெறமுடிந்தது.

இந்தவாக்கெடுப்பின் பிரசாரங்களுக்காக இலங்கையின்விளையாட்டுத் துறை அமைச்சு, பிரிட்டனின் பொது உறவுகள் நிறுவனம் ஒன்றின்உதவியைப் பெற்றிருந்தது.

## நாட்டின் ...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

திறந்து கருத்துகளை கூறியுள்ளார்.

தனது பதவிக்காலத்தில் இடம்பெற்ற விடயங்களைப் பற்றி விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென்ற அழுத்தத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே வழங்கி வருகிறார் என்று குற்றஞ்சாட்டிய முன்னாள் பிரதம நீதியரசர், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைத்து தமக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாதென்றும் சுட்டிக்காட்டினார்.

(முன்னாள் பிரதம நீதியரசரின் பேட்டி இன்றைய பத்திரிகையின் 14 ஆம் பக்கத்தில். மேலும் விறுவிறுப்பான விடயங்கள் நாளைய உதயனில்.

## இன்று வெளிவருகின்றது!

**2011 - க.பொ.த சாதாரணதர பொதுப் பரீட்சைக்கான**
**2011 - தரம் 9 மாகாணப் பொதுப் பரீட்சைக்கான**

யாழ். நகரின் பிரபல ஆசிரியர்களின் தயாரிப்பில் முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் முழு மாதிரி வினாப்பத்திரங்கள் இன்று வெளிவருகின்றன.

தரம் 4 முதல் 10 வரை அடுத்த வாரம் கிடைக்கும் இடங்கள்:

பூபாலசிங்கம் - யாழ்.நகர் துர்க்கா - சுன்னாகம்.

## நீங்கா நினைவுடன் 10 ஆண்டுகள்



வேதநாயகர் பீற்றர் தேவதாஸ்



பீற்றர் தேவதாஸ் லூர்ஸ் மாகிரேற்

| | | |
|---|---|---|
| மண்ணில் | | மண்ணில் |
| 12.12.1940 | பல்லோரும் போற்ற பரணிதனில் வாழ்ந்து | 07.06.1940 |
| விண்ணில் | பாங்காக நாம் வாழ வழி நடத்தி எமையுயர்த்தி | விண்ணில் |
| 14.11.2001 | எல்லாமே பொய்யென்று ஈசனடி சென்றீரோ! | 23.07.1985 |

அமைதி வழியில் சாந்திபெற இறைஞ்சுகின்றோம் இறைவனடி

28, சோமசுந்தரம் அவெனியூ,
யாழ்ப்பாணம்.

(10436) (4-6-7)

என்றும் நினைவுடன்:
[illegible]

## கண்ணீர் அஞ்சலிகள்

10.11.2011 அன்று காலமான எமது பாடசாலை அதிபர்

**சிவசுப்பிரமணியம் தயாபரன்**



அவர்களுக்கு எமது
கண்ணீர் அஞ்சலிகளைச்
செலுத்துவதுடன் அன்னாரது
பிரிவால் துயருறும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்

உபஅதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள்,பெற்றோர்கள்
யா/கரம்பைக்குறிச்சி
அ.த.க பாடசாலை – வரணி

(6/5776) (3.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது..